பக்கங்கள்: பதினாறு + II = 18

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

ச..ர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 ஆடி 28 வியாழக்கிழமை (13.08.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 260

# அகதிகளை விடுவித்தால் பாதுகாப்பு நடவடிக்கைக்குப் பெரும் ஆபத்து

## மனித உரிமைகள் அமைச்சர் தெரிவிக்கும் காரணம் இது



கொழும்பு, ஓகஸ்ட் 13

வவுனியாவில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் வன்னி அகதிகளை முகாம்களில் இருந்து விடுவித்தால், நாட்டின் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு பெரும் ஆபத்து ஏற்படும். அதனால் சர்வதேச மன்னிப்புச் சபையின் கோரிக்கையை ஏற்க முடியாது என்று நிராகரித்திருக்கிறார் மனித உரிமைகள் அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த சமரசிங்க.

முகாம்களில் தடுத்துவைக்கப்பட்டி ருக்கும் வன்னி அகதிகளை உடன் விடுதலை செய்ய வேண்டுமென்ற சர்வதேச மன்னிப்புச் சபையின் கோரிக்கையை, இலங்கை அரசின் சார்பில் அடியோடு நிராகரித்து அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். (16 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா நகரசபைத் தலைவராக நாதனின் பெயர் சிபாரிசு

கொழும்பு, ஓக. 13

வவுனியா நகரசபையின் தலைவராக எஸ்.என்.ஜீ நாதனை நியமிக்குமாறு தமிழரசுக் கட்சி தேர்தல் ஆணையாளருக்கு சிபாரிசு செய்துள்ளது.

துணைத் தலைவராக முகுந்த ரதனை நியமிக்குமாறும் அக்கட்சி கேட்டுள்ளது.

இத்தகவல்களை தமிழரசுக் கட்சின் செயலர் மாவை சேனாதிராஜா நேற்றிரவு 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

இந்த நகரசபையில் எமது கட்சியின் ஆட்சிக்கு முஸ்லிம் (16 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர்களின் துயரம் நீக்கப்படும்வரை இலங்கைக்கு விஜயம் செய்யப்போவதில்லை

### இந்திய விஞ்ஞானி சுவாமிநாதன் திட்டவட்டம்



கொழும்பு, ஓக.13

இலங்கையில் தமிழ் மக்களின் துயரங்களுக்கு அரசியல் தீர்வு காணப்படும் வரை அந்த நாட்டுக்கு விஜயம் மேற்கொள்ளப் போவதில்லை என இந்திய பசுமைப் புரட்சியின் தந்தை என வர்ணிக்கப்படும் விஞ்ஞானி எம்.எஸ் சுவாமிநாதன் மீண்டும் திட்டவட்ட மாகத் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் யுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள வடக்கில் விவசாயத்திற்கு புத்துயிர் கொடுக்க உறுதியளித்துள்ள இந்தியா, இது குறித்து ஆராய்வதற்காக விரைவில் விவசாய விஞ்ஞானிகளை கொழும்புக்கு அனுப்பவுள்ளதாக புதுடில்லித் தகவல் தெரிவிக்கின்ற சூழ்நிலையிலேயே சுவாமிநாதனின் இக் கருத்து வெளியாகியுள்ளது. (15 ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேச சட்டங்களை மீறாமலே கே.பியை அரசு கைது செய்ததாம்

### அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா விளக்கம்



கொழும்பு, ஓக. 13

சர்வதேச சட்டங்கள் மீறப்படாமலேயே புலிகளின் முக்கியஸ்தர் கே.பி. கைது செய்யப்பட்டார் என்றும் இக் கைதுக்கு சர்வதேச நாடுகள் அதிக ஒத்துழைப்பை வழங்கின என்றும் அரசு நேற்று அறிவித்தது.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய ஊடகத் துறை அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபயவர்தனவே இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

புலிகள் யுத்தத்தால் தோற்கடிக்கப்பட்டாலும், புலிகளின் சர்வதேச பிரசார மற்றும் நிதி வலையமைப்பை அரசால் தோற்கடிக்க முடியாது என்றும் (16 ஆம் பக்கம் பார்க்க)

## இன, மத, சமூகப் பெயர்களுடைய கட்சிகளின் அங்கீகாரத்தை ரத்துச் செய்யும் திருத்தச் சட்டமூலத்தை ஆட்சேபித்து வழக்குகள்

### ஐ.தே.கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, முஸ்லிம் காங்கிரஸ் தனித்தனியாகத் தாக்கல்

கொழும்பு ஓக. 11

இன, மத சமூகப் பெயர்களில் இயங்கும் கட்சிகளின் அங்கீகாரத்தை ரத்துச் செய்ய வகை செய்யும் நாடாளுமன்ற தேர்தல்கள் திருத்தச் சட்டமூலத்தை ஆட்சேபித்து ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ் தேசியக் கூட்டமைப்பு, முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய மூன்று பிரதான எதிர்க்கட்சிகள் உயர்நீதிமன்றில் நேற்று மனுக்களைத் தாக்கல் செய்தன.

அரசியல் கட்சிகளுக்கு அங்கீகாரம் அளிப்பது தொடர்பில் தற்போது நடைமுறையில் இருக்கும் நாடாளுமன்றத் தேர்தல் சட்டத்தைத் திருத்தும் விதத்தில் அரசு சமர்ப்பித்திருக்கும் சட்டமூலம் அரசமைப்பு ஏற்பாடுகளுக்கு (16 ஆம் பக்கம் பார்க்க)

**கல்விச்சுடர் உள்ளே**

★தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சைக்காக நடத்தப்படும் விசேட பயிற்சிப் பரீட்சையின் மாதிரி வினாத்தாள்கள்

## குடாநாட்டிலிருந்து வெளியிடங்களுக்குச் செல்வோர் பயண அனுமதி பெறும் நடைமுறையில் மாற்றமில்லை

### போக்குவரத்து வசதிகள் இலகுவாக்கப்பட்டுள்ளன என்கிறார் ஆளுநர்

யாழ்ப்பாணம், ஓக. 13

யாழ். மாவட்டத்தில் இருந்து வெளி மாவட்டங்களுக்குச் செல்வதற்குப் பாதுகாப்புப் பயண அனுமதியைப் பெற்றுக் கொள்ளும் நடைமுறைகளில் எந்த விதமான மாற்றமும் இல்லை. தற்போது இருக்கும் நடைமுறை தொடர்ந்து பேணப்படும். பொதுமக்கள் வெளிமாவட்டங்களுக்குப் பயணிப்பதற்கான பயண வசதிகள் இலகுவாக்கப்பட்டுள்ளன.

வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி. ஏ.சந்திரசிறி இத்தகவலைத் தெரிவித்தார்.

யாழ். பொது நூலகத்தில் நேற்று நடைபெற்ற வடக்கின் வசந்தம் மீளாய்வுக் கூட்டத்தின் பின்னர் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். (15 ஆம் பக்கம் பார்க்க)

## சோதனைச் சாவடிகளில் கெடுபிடிகளைக் குறைக்கவும் 3 நாள்களில் 'கிளியரன்ஸ்' வழங்கவும் நடவடிக்கை

### இணக்கம் காணப்பட்டதாக சமூக சேவை அமைச்சு அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 13

சோதனை சாவடிகளில் நிலவும் கெடுபிடிகளை குறைந்த பட்சமாக்குவதற்கும், மூன்று நாள்களில் 'கிளியரன்ஸ்' வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்க இணக்கம் காணப்பட்டுள்ளது.

நேற்று யாழ்ப்பாணம் வந்த வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறிக்கும், சமூகசேவைகள் மற்றும் சமூகநலத் துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் இடையில் நடந்த கலந்துரையாடலில் இந்த இணக்கம் காணப்பட்டுள்ளது என்று சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தக் கலந்துரையாடல் குறித்து சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சு நேற்றிரவு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள விவரங்கள் வருமாறு:-

★வசாவிளான் தெற்கு ஞானவைரவர் கோயிலுக்கு செல்வதற்கான அனுமதி வழங்க (16 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்**

# குடாநாட்டு மக்களின் பயப் பிராந்தியத்தை நீக்க கிராமங்கள் தோறும் விழிப்புக்குழு அமைக்கவேண்டும்

## ஆளுநர் கூட்டிய கூட்டத்தில் யாழ்.நீதிபதி கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 13

குடாநாட்டில் ஜனநாயகச் சூழல் நிலவுவதாகக் கூறிக்கொண்டிருப்பதால் பயன் இல்லை. கொலை, கொள்ளை, திருட்டுப் போன்ற சம்பவங்களால் பயப் பிராந்தியுடன் வாழ்ந்து கொண்டிருக்கும் சூழல் அகல வேண்டும்.

இதற்காக படையினர், பொலிஸார், கிராம சேவையாளர்களின் உதவியுடன் கிராமம் கிராமமாக விழிப்புக்குழுக்களை அமைத்து மக்களின் பயப்பிராந்திக்கு முடிவு காண வேண்டும்.

யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராஜா மேற்கண்டவாறு கோரியுள்ளார்.

'வடக்கின் வசந்தம்' மீளாய்வுக் கூட்டம் நேற்று யாழ். நூலகத்தில் இடம்பெற்ற போது அதில் கலந்து பேசுகையில் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

வடக்குமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் நீதிபதி மேலும் தெரிவித்தவை வருமாறு:-

குடாநாட்டில் சட்டம், ஒழுங்கை நிலை நாட்ட போதிய அளவு பொலிஸார் இல்லை என்பதை ஏற்றுக்கொள்கிறோம்.

ஆனால் குடாநாட்டில் தொடரும் கொலை, கொள்ளை, திருட்டுச் சம்பவங்களால் மக்கள் பயப்பீதியுடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். சட்டம், ஒழுங்குமுழுமையாகப் பேணப்படும் பட்சத்தில் இந்த நிலை ஏற்படாது.

ஜனநாயகச் சூழல் நிலவுவதாக கூறிக் கொண்டாலும், தொடரும் சம்பவங்கள் மக்களை அச்சத்துக்குள் வைத்துள்ளன.

இந்த நிலையை நீக்க பொலிஸார், இராணுவத்தினர், கடற்படையினர், கிராம சேவையாளர்களின் அனுசரணையுடன் கிராமங்கள் தோறும் விழிப்புக்குழுக்களை அமைக்க வேண்டும்.

ஊரடங்கு வேளையில் இடம்பெறும் சம்பவங்களால் படையினருக்கு ஏற்படும் களங்கங்களையும் இந்த விழிப்புக் குழுக்கள் அமைப்பதன் மூலம் நீக்கலாம் - என்றார் அவர். (1)

கோழிக் குஞ்சு விநியோகம்

BAHIR.. புறொயிலர் குஞ்சுகள் 14.08.2009 விநியோகிக்கப்படும். பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும்.

★ றாஜின்

கால் நடைத் தீவன விற்பனை நிலையம்

ஆனைக்கோட்டைச் சந்தி.

T.P No - 021 222 2867

## மரண அறிவித்தல்



திருமதி

### சுபத்திரா ஜீவரட்ணம்

கொழும்பைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திருமதி சுபத்திரா ஜீவரட்ணம் (ஓய்வுபெற்ற தாதி) 09.08.2009 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமசாமி ஜீவரட்ணத்தின் மனைவியும் மைதிலி, கிருத்திகா ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற தர்மலிங்கம் - கமலாவதி தம்பதியினரின் புதல்வியும் கிருஷ்ணமூர்த்தி (S.L.), இந்திரகுமார் (S.L.), சந்திரமோகன் (S.L.), ஜெயகௌரி (ஜேர்மனி), செல்வராணி (கனடா), தேவகுமார் (ஜேர்மனி) ஆகியோரின் சகோதரியும் தனவதி, சுகிர்தராணி, மஞ்சுளாதேவி, சிவநேசன் (ஜேர்மனி), உதயகுமார் (கனடா), குமர்ச்செல்வி (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனியும் தேவதீசன், துஷியந்தி, பிரியா, கங்கா தர்ஷினி, வரோன், ஜனனி, நிவேதா, கவாஸ்கர் ஆகியோரின் மாமியும் நரேந்திரன், நர்மதா, நிரோஜா, ஆர்த்தி, ஆதர்ஷன், ஜெயதர்ஷன் ஆகியோரின் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (13.08.2009) வியாழக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் நடைபெற்று பூதவுடல் கல்கிசை பொது மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: D.இந்திரகுமார்.
T.P.: 0776626480

(சி/560047)

## உடுவிலில் சேதனப் பசளை உற்பத்தி; 24 பயனாளிகளுக்கு கொடுப்பனவு

யாழ்ப்பாணம், ஓக.13

விவசாயத் திணைக்களத்தினால் 2009 ஆம் ஆண்டு சேதனப் பசளை உற்பத்தி பாவனை அதிகரிப்புத் திட்டத்தின் கீழ் உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் 24 பயனாளிகளுக்கு உதவிகள் வழங்கப்படவுள்ளன.

இதன் கீழ் மரக்கறிச் செய்கை, வெங்காயச் செய்கை, நெற் செய்கை, வாழைச் செய்கை, மண் பரிசோத்னை, சீமைக் கிழுவை உற்பத்தி, சணல் விதை உற்பத்தி, திராட்சை செய்கை, தேசி செய்கை மற்றும் பயிர் செய்பவர்களின் உற்பத்தி அதிகரிப்புக்கும் இந்த உதவிகள் வழங்கப்படவுள்ளன.

இத்தகைய உதவிகள் வழங்கப்படுவதன் மூலம் செயற்கைப் பசளையின் பாவனையைக் குறைப்பதுடன் உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் உடலுக்கு தீங்கு விளைக்காத பொருள்களாக அமைய முடியும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

குடாநாட்டில் தற்போது அனைத்துப் பயிர் வகைகளும் செயற்கை உரம் பாவிக்கப்பட்டு உற்பத்தி செய்யப்பட்டு வருவதாகவும் சுட்டிக் காட்டப்படுகின்றது. (203-68)

## வர்த்தகர் சங்கப் பிரதிநிதிகளுடன் ஆளுநர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஓக. 13

யாழ். வந்துள்ள வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி. ஏ. சந்திரசிறி யாழ். வணிகர் கழகப்பிரதிநிதிகளுடன் கலந்துரையாடியுள்ளார்.

கொழும்பில் இருந்து ஏ9 பாதை ஊடாக லொறிகள் மூலம் பொருள்கள் எடுத்துவருவதில் எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக மகஜர் ஒன்றை ஆளுநரிடம் வர்த்தக சங்கப் பிரதிநிதிகள் சமர்ப்பித்தனர்.

மகஜரில் தெரிவிக்கப்பட்ட விடயங்கள் குறித்து உயர்மட்டத்துடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுப்பதாக ஆளுநர் உறுதி கூறினார். (1)

## மரண அறிவித்தல்

### ஞானசீலன் கமிலஸ்



மாதாகோயிலடி, துன்னாலை வடக்கை வசிப்பிடமாகக் கொண்ட ஞானசீலன் கமிலஸ் 10.08.2009 திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (13.08.2009) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் கரவெட்டி புனித அந்தோனியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் கரவெட்டி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அ.மேரி யோசப் (சீசர்) தாத்தா.

அங்கீகரிக்கப்பட்ட கணினி டிப்ளோமா சான்றிதழ்களுக்கான கற்கை நெறிகள்

Diploma in Microsoft Office
Adv. Dip. in Hardware & Networking
Dip. in Pre-Press Desktop Publishing
Dip in Computerized Accounting
Internet and E-mail
AutoCAD
Java

சிறார்களுக்கான JUNIOR DIPLOMA கற்கை நெறிகள்

Tally Accounting Training

நவீன தொழில்நுட்பங்கள், Advanced Video Editing மென்பொருட்களையும் உள்ளடக்கிய

Dip. in Video Editing & Multimedia

Adobe Premiere Pro CS3, ParticleIllusion, Pinnacle Studio, COOL 3D Studio, Adobe After Effects, Nuendo,

Duration 1 Month

100%

முழுமையானதும் தரமானதுமான கணினி கல்விக்கு

புதிய பிரிவுகள் ஆரம்பம்.

DMI COMPUTER EDUCATION

NO. 113, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். Tel: 021-222 4403

## மரண அறிவித்தல்கள்

### திருமதி இலட்சுமி இளையதம்பி



துரையன் தோட்டம், நெல்லியடியைப் பிறப்பிடமாகவும் கரணவாய் மத்தி, கரவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இளையதம்பி இலட்சுமி நேற்று (12.08.2009) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அம்பலவாணர் இளையதம்பியின் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அன்பு மனைவியும் காலஞ்சென்ற திருமதி புவனேஸ்வரி சிவஞானசுந்தரம், இ.ஆனந்தராசா (ஜேர்மனி), இ.சிவகுமார் (ஸ்ரீலங்கா ரெலிக்கொம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் த.சிவஞானசுந்தரம் (மருந்தாளர்), ஆ.அம்பிகா, சி.ஞானேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாரும் வித்தகன் (ஜேர் மனி), பிரசன்னா (ஜேர்மனி), பிரசாந் (ஜேர்மனி), கிருசாந் (ஜேர்மனி), மேனகா (கனடா), உமாகாந்தன் (கனடா), சுமணா (லண்டன்), துவாரகன் (சிங்கப்பூர்), அனு தர்ஷன் (ஹாட்லிக் கல்லூரி), கபிலாசன் (ஹாட்லிக் கல்லூரி), அஜந்தன் (ஹாட்லிக் கல்லூரி), மருஷன் (ஹாட்லிக் கல்லூரி), மயூரன் (லண்டன்), சுதாகர் (கனடா), சுனிற்ரா (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் செல்வன், அரன், கஜன், டிலான், அபினா ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.08.2009) வியாழக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது வசிப்பிடத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சோனப்பு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் ஊறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கரணவாய் மத்தி,
கரவெட்டி.
T.P. No.: 226 4379

தகவல்:
இ.சிவகுமார் (மகன்)
(ஸ்ரீலங்கா ரெலிக்கொம்).

### திருமதி இரத்தினபூபதி சிவப்பிரகாசம்



வியாபாரிமூலை, பருத்தித்துறையைச் சேர்ந்த திருமதி இரத்தினபூபதி சிவப்பிரகாசம் 09.08.2009 ஞாயிற்றுக்கிழமை Seattle, USA இல் சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வை.கா.சிவப்பிரகாசத்தின் (முன்னாள் அதிபர், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, கோப்பாய்) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான Dr.க.கனகசபாபதி - திருமதி சௌந்தராம்பிகை கனகசபாபதி தம்பதியினரின் அன்பு மகளும் சி.முகுந்தனின் (பொறியியலாளர், Microsoft Corporation, USA) அன்புத் தாயும் திருமதி சோகுலா முகுந்தனின் அன்பு மாமியும் வர்ஷன், ஷிரீயா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் திருமதி சேதுநாயகி சண்முகநாதன், Dr.க.இரத்தினவடிவேல், க.சண்முகநாதன் (பொறியியலாளர், முன்னாள் முகாமையாளர், K.K.S. சிமெந்துக் கூட்டுத்தாபனம்), திருமதி பங்கஜதேவி சோமஸ்கந்தன் (இளைப்பாறிய ஆசிரியை), திருமதி மனோன்மணி வசந்தநாதன் (இளைப்பாறிய ஆசிரியை), க.சற்குருநாதன் (பொறியியலாளர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் திருமதி காமாட்சி வாசுதேவன், வை.கா.இராமச்சந்திரன் (பொறியியலாளர்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் காலஞ்சென்ற தர்மானந்தராஜா மற்றும் திருமதி ஜெயமணி தர்மானந்தராஜா தம்பதியினரின் அன்புச் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் Evergreen - Washelli Funeral Home, Seattle, USA இல் நேற்று (12.08.2009) புதன்கிழமை நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

... வீதி, யாழ்ப்பாணம்.

(87855)


தகவல்:
திருமதி பங்கஜதேவி சோமாஸ்கந்தன் (சகோதரி).

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

### ஐயம்பிள்ளை வரதராஜன்

(திதி- 13. 08. 2009 )



மலர்வு: 30★10★1958 உதிர்வு: 18★07★2006

உருவம் மறைந்தாலும் துயரங்கள்
நீங்கவில்லை
காலங்கள் மறைந்தாலும் கண்ணீர்
நிற்கவில்லை - அப்பா
நாம் வாழும் காலங்களில் உங்கள்
நினைவுகள் - என்றும்
எம்மை விட்டு அகலாது என்றும் வாழ்வீர்கள்
எம் இதயத்தில்.

ஸ்ரீ முருகன் கபே, தேநீர்க்கடை
நவாலி வீதி,
ஆனைக்கோட்டை.

குடும்பத்தினர்.

(87794)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# கொழும்புத் தலைமையிடம் நேரடியாக வாங்கிக்கட்டுகிறார் றொபேர்ட் ஓ பிளேக்

இலங்கை இனப்பிரச்சினையை ஒட்டிய யுத்தம் தீவிரமுற்றிருந்த சமயத்தில், 'இனப்பிரச்சினைக்கான தீர்வைக் காணும் வழிவகைகள் குறித்து ஆராய்வதற்கு' என்ற முன்னறிவிப்போடு, சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு என்ற கட்டமைப்பை இலங்கையின் தற்போதைய அரசுத் தலைமை முன் வைத்தது. இது, சர்வதேச சமூகத்தை ஏமாற்றும் வெளி வேஷ நாடகம் என்றும் கபடத் திட்டம் என்றும் தமிழர் தரப்பில் அது குறித்து அப்போதே குறை கூறப்பட்டது.

அச்சமயம், இந்த சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவை, ஏதோ இனப்பிரச்சினைக்கான தீர்வை இதோ தந்துவிடப் போகின்ற 'அலாவுதீனின் அற்புத விளக்கு' போன்று தலையில் தூக்கி வைத்துக் கூத்தாடிய பல தரப்புகள் கொழும்பில் செயற்பட்டன. அத்தரப்பினரில் முக்கியமானவர் அச்சமயம் கொழும்புக்கான அமெரிக்கத் தூதுவராக இருந்த றொபேர்ட் ஓ பிளேக். பொது நிகழ்வுகளில் மட்டுமல்லாமல், தனிப்பட்ட சந்திப்புக்களிலும் கூட, இந்த சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு குறித்து அதிகம் பிரபலாபித்து வந்தவர் அவர்.

இப்போது, அவரது எதிர்பார்ப்புகள் முடங்கிப் போன நிலையில் கொழும்பிடம் வாங்கிக் கட்டும் கட்டத்துக்குத் தள்ளப்பட்டிருக்கின்றார் அவர்.

முன்னர் கொழும்புக்கு மாத்திரம் பொறுப்பான அமெரிக்கத் தூதுவராக இருந்த றொபேர்ட் ஓ பிளேக், இப்போது அமெரிக்காவின் தென்னாசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான உதவி வெளிவிவகாரச் செயலாளராகப் பதவியிலும், அதிகாரத்திலும் உயர்ந்துள்ளார்.

இச்சமயத்தில்தான், இதுவரை புலிகளின் ஆயுதப் போராட்டத்தை முறியடிப்பதற்கு சர்வதேசத்தின் உதவியை யாசித்த கொழும்பு, இப்போது அந்தப் போராட்டத்தை வெற்றிகரமாக முறியடித்த மமதை ஏற்பட்டதும் சர்வதேசத்துக்கு பின்புறத்தைத் திரும்பிக் காட்டும் திமிர்ப் போக்கில் நடப்பதை அவதானிக்க வேண்டியவராகியிருக்கின்றார் பிளேக்.

பிளேக் முன்னர் போற்றிப் புகழ்ந்த சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு, சுமார் இரண்டரை வருடங்கள் இழுபறிப்பட்டு, சுமார் நூற்றியிருபத்தைந்துக்கும் அதிகமான அமர்வுகளை நடத்தி - நாம் முன்னர் குறிப்பிட்ட மாதிரி 'மலையைக் கெல்லி எலியைப் பிடித்தமை' போன்று - ஏதோ ஒரு திட்ட யோசனையுடன் சிபாரிசுத் தீர்மானத்துக்கு வந்திருக்கின்றது.

ஆனால், அதையெல்லாம் கிடப்பில் தூக்கிப் போட்டுவிட்டு அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர்தான் எல்லாம் என்பதை சூசகமாக வெளிப்படுத்தி விட்டது இலங்கை அரசுத் தலைமை.

அதனால், இப்போதுதான் உண்மை உறைக்கத் தொடங்கியிருக்கின்றது அமெரிக்க உயரதிகாரியான றொபேர்ட் ஓ பிளேக்குக்கு. அதனால் அவர் கொதிக்கத் தொடங்கியிருக்கின்றார்.

அதிகாரப் பகிர்வுக்கான அரசியல் தீர்வு முயற்சிகள் தாமதப்படுத்தப்பட்டு வருகின்றமை மற்றும் அகதி முகாம்களில் அடைக்கப்பட்டுள்ள மக்களை விடுவித்து அவர்களின் நடமாட்ட சுதந்திரத்தை உறுதிப்படுத்துதல், அவர்களின் மீள்குடியேற்றம் ஆகியவை இழுத்தடிக்கப்படுகின்றமை குறித்து அமெரிக்கத் தரப்பில் றொபேர்ட் ஓ பிளேக் குறை கூறியிருக்கின்றார்.

இலங்கை அரசின் இத்தகைய இழுத்தடிப்புகள் இலங்கையில் மீண்டும் வன்முறைகள் வெடிப்பதற்கு வழி வகுக்கலாம் என்றும் அவர் எச்சரித்திருக்கின்றார்.

அவரின் இந்தக் கருத்து இலங்கையை உசுப்பி விட்டிருக்கின்றது.

இலங்கையில் தமிழர்களின் நிலைமை குறித்துப் பேசுவதற்கு பிளேக்குக்கு எந்த உரிமையும் கிடையாது என்று இலங்கை சார்பில் தகுந்த பதிலடி கொடுத்திருக்கின்றார் இலங்கையின் பாதுகாப்புத்துறைப் பேச்சாளரும் அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல.

சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு என்ற கண்கட்டு வித்தையை பெரும் சாதனையாக விமர்சித்து, அதை இராஜதந்திர மட்டத்தில் இலங்கை ஒரு நல்ல அம்சமாக சந்தைப்படுத்துவதற்கு இலங்கையின் சிறந்த பிரசார முகவர் போல செயற்பட்ட ஓ பிளேக் இப்போது கொழும்பிடம் நேரடியாகவே வாங்கிக் கட்டும் நிலைமைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றார்.

இலங்கை விடயத்தைப் பொறுத்தவரை நீதி தேவதையின் தராசுத் தட்டு ஒரு பக்கம் சாதகமாகச் சாய்ந்து - மறுபக்கம் பாதகமாக அடிபட்டுப் போக - வழி செய்த சர்வதேச சமூகம், இப்போது 'அணில் ஏறவிட்ட நாய் போல' கீழே இருந்து வெறும் வாய்ச் சவடாலில் குறை கூறுவதில் ஈடுபடுகின்றது.

அத்தகைய வாய்ச் சவடால்களினால் இலங் கைத் தமிழர்களுக்கு நீதியோ, நியாயமோ கிட்டப் போவதில்லை என்பது தெட்டத் தெளிவான உண்மையாகும்.

இதைக் காலம் பிந்தி இப்போதாவது பிளேக் போன்ற இராஜதந்திரிகள் உணர்வார்களேயானால் அது நல்லது.

# அரச திணைக்களங்கள் ஏ-9 வீதியூடாகப் பொருள்களை எடுத்துவர இனிமேல் ஆளுநர் செயலகத்துக்கு விண்ணப்பிக்க வேண்டும்

## ஆகக் குறைந்தது 3 நாள்களுக்கு முன்னர் விண்ணப்பம் கிடைக்க வேண்டும்

யாழ்ப்பாணம், ஓக.13

கொழும்பில் இருந்து ஏ-9 வீதியூடாக அரச திணைக்களங்கள் பொருள்களை எடுத்துவருவதாயின் வடமாகாண ஆளுநர் செயலகத்துக்கே இனி விண்ணப் பிக்கவேண்டும். அதற்கான பாதுகாப்பு அனுமதியைப் பெற்றுக் கொடுப்பதற்கு ஆளுநர் செயலகம் நடவடிக்கை எடுக்கும்.

வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி இவ்வாறு தெரிவித்தார்.

நேற்று யாழ்.நூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற 'வடக்கின் வசந்தம்' மீளாய்வுக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

கொழும்பில் இருந்து ஏ-9 வீதியூடாகப் பொருள்களை எடுத்துவருவதற்கு அரச திணைக்களங்கள் இதுவரை காலமும் பாதுகாப்பு அமைச்சுக்கு விண்ணப்பித்தே அனுமதியை பெற்று வந்தன. தற்போது அந்த நடைமுறையில் மாற்றம் கொண்டுவரப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இவ்வாறான ஏற்பாடுகளுக்கு ஆளுநர் செயலகத்துக்கே விண்ணப்பிக்கவேண்டும். ஆகக் குறைந்தது பொருள்கள் எடுத்து வருவதற்கு மூன்று நாள்களுக்கு முன்னர் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அனுமதியைப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை ஆளுநர் செயலகம் மேற்கொள்ளும் - என்றார் ஆளுநர்.

வடமாகாண ஆளுநர் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் சமூகசேவைகள் மற்றும் சமூகநலத் துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ்.அரச அதிபர் கே.கணேஷ், யாழ்.மாவட்டப் படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் ஜி.பி.ஆர்.டி.சில்வா, வடமாகாண பிரதம செயலாளர் ஆ.சிவசுவாமி, யாழ். மேல்நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராஜா மற்றும் மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், படைத்தளபதிகள், பொலிஸ் உயரதிகாரிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

வடக்கின் வசந்தம் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்து இந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

அபிவிருத்திப் பணிகளை நடைமுறைப்படுத்துவதில் காலதாமதம் காட்டாமல் விரைவாக அவற்றை செய்து முடிக்குமாறு ஆளுநர் திணைக்களங்களின் தலைவர்களிடம் கேட்டுக் கொண்டார். அவற்றில் ஏதும் தடைகள் ஏற்படின் அது குறித்து உடனடியாக அரச அதிபருக்குத் தெரியப்படுத்தி மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

குறிப்பாக பொதுமக்களின் போக்குவரத்து, கல்வி, சுகாதாரம் ஆகிய துறைகளை அபிவிருத்தி செய்வதில் அக்கறை காட்டுமாறும் அவர் கேட்டுக் கொண்டார்.

நெடுந்தீவுக்கான புதிய பஸ்ஸை கொண்டு செல்வதில் காலதாமதம் ஏற்படுவதாக இங்கு சுட்டிக்காட்டப் பட்டது. இந்தப் புதிய பஸ்ஸை நாளை (இன்று) அங்கு கொண்டு செல்வதற்கான நடவடிக்கை எடுக்குமாறு ஆளுநர் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

அத்துடன் பருத்தித்துறை, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் அமைக்கப்பட்டு வரும் ஐஸ் தொழிற்சாலைகளின் பணிகளை அடுத்த ஒரு மாத காலத்துக்குள் பூர்த்தி செய்யுமாறு ஆளுநர் கடற்தொழில் திணைக்களத்திடம் கேட்டுக்கொண்டார்.

யாழ்ப்பாணத்தில் அனைத்து வீதிகளிலும் வீதி விளக்குகளை அமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அதற்குத் தேவையான நிதி ஒதுக்கப்படும் எனவும் ஆளுநர் தெரிவித்தார். (50)

# வெளிநாடுகளில் உள்ள புலிகளின் சகல வங்கிக் கணக்குகளை முடக்குக!

## சுவிஸ் உட்பட பத்து நாடுகளிடம் அரசு கோரிக்கை

கொழும்பு, ஓக. 13

விடுதலைப்புலிகளின் முக்கியஸ்தரான கே.பி. உட்பட ஐயன்னா குழுமத்தின் சகல வங்கிக் கணக்குகளையும் இடைநிறுத்தி அக் கணக்குகளிலுள்ள 30 கோடி டொலர்களை இலங்கைக்கு அனுப்புமாறு பத்து நாடுகளிடம் இலங்கை அரசு கோரிக்கை விடுத்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவ் வங்கிக் கணக்குகளில் பெரும்பாலானவை சுவிட்ஸர்லாந்திலும் சென் மொரிஸஸ் நாட்டிலும் உள்ளன எனத் தெரியவருகிறது.

இதனைவிட புலிகளின் யுத்தக் கப்பல்கள் வர்த்தகத்தில் சம்பந்தப்பட்டுள்ள ஆறு நிறுவனங்களின் இரகசிய விவரங்கள் கே.பியிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளன என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மெரிடைட் லிமிட்டட் (சிங்கப்பூர்), பிளைமவுண்ட் ஷிப்பிங் (சிங்கப்பூர்), வின்ரட் ஹோல்டிங் லிமிட்டட் (மலேசியா), பொயின்ட் பேது ஷிப்பிங் (தாய்லாந்து), ஈஸ்வரா லிமிட்டட் (பாங்கொக்), ஓரியண்ட் ஷிப்பிங் (ஜேர்மனி) எனும் ஆறு நிறுவனங்களுடனும் வேறு பல நிறுவனங்களும் புலிகள் நீண்ட நாள்களாக கப்பல் வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்தனர் என கே.பி. தெரிவித்தார் எனக் கூறப் படுகிறது.

இந்த நிறுவன வலையமைப்புக்கு பத்து கப்பல்கள் இருந்தன எனவும், பிரபாகரன் இறந்ததை அறியாமல் அவரது மரணத்துக்குப் பின்னரும் ஆயுதங்கள் இலங்கை வந்துள்ளன என்றும் கே.பி. மேலும் தெரிவித்தார் என்று கூறப்படுகிறது.

இந்தக் கப்பல்கள் பற்றிய மேலதிக விவரங்களை ஆசிய நாடொன்றில் விசாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன என்றும் கூறப்படுகிறது.

# ச.தொ.ச.கிளைகள் மூன்று இடங்களில் திறப்பு

சாவகச்சேரி, பருத்தித்துறை, சுன்னாகம் ஆகிய இடங்களில் ச.தொ.ச. கிளைகள் விரைவில் திறந்து வைக்கப் படும். சுதந்திரக்கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் வேல்முருகு தங்கராசா இதனைத் தெரிவித்தார்.

இத்துடன் குருநகர், கொழும்புத்துறை, நாவாந்துறை பகுதிகளில் பொதுமக்கள் ஐக்கிய சுதந்திரக் கூட்டமைப்பின் காரியாலயங்கள் விரைவில் திறந்து வைக்க நடவட்டிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (1-300)

# யாழ்.மாவட்ட முன்பள்ளிகளின் ஆசிரியர்கள் ஒன்றியத்தின் ஊடாக தேவைகளை முன்வைக்கலாம்

## நேற்றைய அங்குரார்ப்பண நிகழ்வில் நிறுவுனர்

யாழ்ப்பாணம்,ஓக.13

யாழ்.மாவட்டத்தில் உள்ள முன்பள்ளி ஆசிரியர்கள் இனிமேல் தமது தேவைகளை முன்பள்ளி ஆசிரியர் ஒன்றியத்தின் ஊடாக முன்வைக்கலாம்.

யாழ்.மாவட்ட முன்பள்ளி ஆசிரியர் ஒன்றியத்தின் நிறுவுனரும் கைத்தொழில் வேளான் மகளிர் ஒன்றியத்தின் பணிப்பாளருமான எஸ்.ஜே. செல்வராசா மேற்கண்டவாறு தெரிவித் தார்.

யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று முற்பகல் 10 மணியளவில் இடம்பெற்ற யாழ்.மாவட்ட முன்பள்ளி ஆசிரியர் ஒன்றியத்தின் அங்குரார்ப்பண நிகழ்வில் தலைமையுரையாற்றும் போது இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு உரையாற்றுகையில் மேலும் தெரிவித்தவை வருமாறு:

கைத்தொழில் வேளான் மகளிர் ஒன்றியத்தின் ஊடாக 1998ஆம் ஆண்டு முதல் யாழ்.மாவட்டத்தில் உள்ள முன்பள்ளி ஆசிரியர்களின் வளர்ச்சியில் நாம் பெரிதும் பங்கு வகித்துள்ளோம்.

குறிப்பாக முன்பள்ளி ஆசிரியர்களையும் அவர்களது சேவைகளையும் பாராட்டி பரிசில்களையும் சேவைச் சான்றிதழ்களையும் வழங்கியுள்ளோம்.

அத்துடன் உலக ஆசிரியர் தினத்தில் யாழ்.மாவட்டத்தில் உள்ள முன்பள்ளி ஆசிரியர்களைக் கௌரவிக்கின்ற பணிகளை முன்னெடுத்து வருகின்றோம்.

இதுவரை காலமும் இத்தகைய பணிகளை முன்னெடுத்து வந்துள்ள எமது அமைப்பானது யாழ்.மாவட்டத்தில் உள்ள முன்பள்ளி ஆசிரியர்களின் எதிர்கால நலனைக் கருத்தில் கொண்டு அதற்கென முன்பள்ளி ஆசிரியர் ஒன்றியத்தினை உருவாக்க வேண்டும் என்று முடிவுசெய்து நடவடிக்கைகளை மேற்கொண்டோம்.

'அதன் பயனாக முன்பள்ளி ஆசிரியர் ஒன்றியம் இன்று அரச அங்கீகாரம் பெற்ற அமைப்பாக மலர்ந்துள்ளது.

இனிவரும் காலங்களில் முன்பள்ளி ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை முன்பள்ளி ஆசிரியர் ஒன்றியத்தின் ஊடாக முன் வைக்கலாம். அதனூடாக பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு இலகுவான வழி ஏற்படும் என நினைக்கிறேன் - என்றார்.

தொடர்ந்து இலங்கை வங்கியின் மானிப்பாய் கிளை முகாமையாளர் எஸ்.இலட்சுமணசர்மா, கைத்தொழில் வேளாண் மகளிர் ஒன்றிய தகவல் துறை முகாமையாளர் குலசிங்கம் சகிலா, சோ.ஆ.நிறுவன நிகழ்ச்சித் திட்ட முகாமையாளர் யூட்வொட்சன், யாழ். ப.நோ.கூ.சங்கத்தின் பொது முகாமையாளர் க.மனோகரன் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

யாழ்.மாவட்ட முன்பள்ளிகளின் ஆசிரியர்கள் இதில் கலந்துகொண்டனர். (203-9)

## நாளை

| | |
|---|---|
| ஆடி 29 | 14.08.2009 வெள்ளிக்கிழமை |
| திதி: | அட்டமி பி.ப. 08.02 வரை |
| நட்சத்திரம்: | கார்த்திகை மு.இ.8.00 வரை |
| சுபநேரம்: | 06.05 - 07.35 |
| ராகுகாலம்: | 10.35 - 12.05 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்னையின் துணையால்
### தென்இந்திய கோயில் சிற்ப ஆசாரியர்கள்



திரு.K.மணிகண்டன்
திரு.S.சோமாஸ்கந்தன்

தற்போது யாழ்ப்பாணத்தில் கோயில் திருப்பணிகள் செய்து வருகிறார்கள். கோயில் திருப்பணி செய்ய விரும்பும் அன்பர்கள் தொடர்புகொள்ளவேண்டிய தொலைபேசி எண்:

0771154791
0777650519
0212263311

(87780)



## கிளாலி கண்மணி மாதா பெருவிழா



கிளாலி கண்மணி மாதா என அடியவர்களால் அன்போடு ஆராதிக்கப்படும் பரலோக அன்னையின் பெருவிழா யாழ்.பாண்டியன் தாழ்வு புனித அன்னாள் ஆலயத்தில் கொண்டாட ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வழிபாடுகள் விபரம்

* ஆயத்த வழிபாடு
  13.08.2009 }
  14.08.2009 } மாலை 5 மணி
* நற்கருணை விழா
  15.08.2009 மாலை 5.00 மணி
* திருநாள் திருப்பலி
  16.08.2009 காலை 6.30 மணி

இறையாசியையும் அன்னையின் பரிந்துரையையும் நிறைவாகப் பெற அடியார்களை அன்போடு அழைக்கின்றோம்.

(87856) விழா ஏற்பாட்டாளர்கள்.



## விற்பனைக்கு

யூக்கி தையல் மெசின் விற்பனைக்குண்டு.
உடன் தொடர்பு கொள்ளவும்.
மோகன் கொக்குவில்
0777111486 (87782)



## விற்பனைக்கு

மிகவும் நல்ல நிலையில் உள்ள CD100SS மருன் கலர் மோட்டார் சைக்கிள் (29,500 K.M ஓடியது), Group Class நடத்துவதற்கேற்ற வேம்பு, பலா மரங்களிலான புதிய மேசை, வாங்குகள், கருங்காலி மரத்தாலான பழைமை வாய்ந்த பெட்டகம் என்பன விற்பனைக் குண்டு

இ. நாகராசா, தேவி அர்ச்சக ஒழுங்கை,
நாவலர் வீதி, யாழ்ப்பாணம். T.P 4591379 (87859)



## வேலைக்கு ஆள் தேவை

சுன்னாகத்தில் இயங்கி வரும் நிறுவனம் ஒன்றுக்கு வேலைக்கு பெண் பிள்ளைகள் தேவை. தகைமை கணனியில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். (MS Office, Desktop Publishing, Internet & Email) சுன்னாகம் நகர சபை எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு: 0777238478, 0718334264 (87858)



## தேவை

எமது நிறுவனத்துக்கு அனுபவமுள்ள தச்சு வேலையாளும், மின்சார வேலை செய்வதற்கு அனுபவமுள்ள ஒருவரும் தேவைப்படுகிறார்கள். தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இல.: 0602002610, நவாலி, ஆனைக்கோட்டை, மானிப்பாய் ஆகிய இடங்களில் வசிப்போர் விரும்பத்தக்கது. (87854)



## வீடு, கடை, காணி வாடகைக்குண்டு

மீசாலை கிழக்கு, பாலையடி பிள்ளையார் கோயிலடியிலுள்ள சகலவசதிகளும் கொண்ட வீடு, கடை, காணி வாடகைக்குண்டு.

தொடர்பு:
K.அமிர்தலிங்கம்
பாலையடி பிள்ளையார் கோவிலடி,
மீசாலை, கிழக்கு, மீசாலை,
T. P. NO: 0779004165, 0774016724 (87798)


## மஸ்கன் சந்திவரை பாடசாலை சேவையை நீடிக்கக் கோரிக்கை

புன்னாலைக்கட்டுவன் - யாழ்ப்பாணம் பாடசாலை பஸ் சேவையை மஸ்கன் சந்தி வரை பஸ் நீடிக்குமாறு பொது மக்களும் மாணவர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த காலத்தில் மஸ்கன் சந்தியிலிருந்து பாடசாலை மாணவர்களின் நன்மை கருதி பஸ் சேவை நடத்தப்பட்ட போதிலும் கடந்த பல வருடங்களாக இச்சேவைகள் புன்னாலைக்கட்டுவன் தெற்கு சந்தியுடன் நிறுத்தப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இதன் காரணமாக மஸ்கன் சந்திப் பகுதியிலும் அதனை அண்டிய பகுதியிலும் வசிக்கும் மாணவர்கள் பாடசாலைகளுக்குச் செல்லவும் திரும்பி வரவும் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றார்கள்.

இது குறித்து உரிய அதிகாரிகள் நடவடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளது. (203-86)


## வாழ்த்துகிறோம்



25 ஆவது திருமண ஆண்டு நிறைவையும் 50 ஆவது பிறந்ததினத்தையும் இன்று (13.08.2009) கொண்டாடும்

அன்ரன் கணேசன் மேரிறோசா

தம்பதியினரை இறை ஆசியுடன் அனைத்துச் செல்வங்களும் பெற்று பல்லாண்டு வாழ அன்புடன் வாழ்த்துகின்றோம்.

7/1, வில்லூன்றிப்பிள்ளையார் கோவில் வீதி,
யாழ்ப்பாணம். (87860)

பிள்ளைகள்:
மேரிதிரேசா, மேரிசுஸன், ஆன்.



## உடனடி வெளிநாட்டு வேலை வாய்ப்பு
### SAUDI ARABIYA

கீழ்க்காணும் வெற்றிடங்கள் உள்ளன.

1. சுத்திகரிப்பாளர் Cleaner
2. கூலியாள்கள் Labourers
3. தச்சன் Carpenter
4. சாரதிகள் Drivers
5. மேசன் Mason
6. பைப் பொருத்துனர் Plumper

தொடர்புகளுக்கு :- SATHEES TRAVEL AGENCY
Uduvil Road, Manipay, Jaffna.
Reg. No. VSW/FIN/BR/936/1-2004
Satheesagency@gmail.com

T.P - 060 221 1958
021 4591625
077 6138942

Join with Air King (pvt) Ltd. (LIC. # 1791) (87796)



## கடை ஏலம் போடுதல்

தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்கா தேவி தேவஸ்தானத்தின் மஹோற்சவத்தினை முன்னிட்டு தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத்தினர் கடை ஏலம் போட உள்ளனர். குறித்த திகதியில் பெற்றுக் கொள்ளத் தவறும் பட்சத்தில் கடை கிடைக்கப்பட மாட்டாது.

இடம் : தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கப் பணிமனை
காலம் : 15.08.2009 சனிக்கிழமை
நேரம் : 10.00 மணி

தலைவர். (87551) இணைச் செயலாளர்.



# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
## POST OF FULL TIME SUB-WARDEN GRADE II (MALE) [U-MN 3 (III)]

Applications will be received by me up to 11th September 2009 from suitably qualified candidates for the above post.

University of Jaffna is looking for a committed male individual with years of experience in attending to the needs of the students. He should be able to function as a guardian of students of the hostel and will be responsible for general discipline of hostel students under the supervision of Warden.

**Qualifications**

A graduate of a recognized University

1. Preference will be given to those with experience in administration and management of hostel
2. Preference will be given to those who have experience in handling the matters related to students welfare and discipline.

Note:- The successful applicant should reside in the hostel of this University. However, his family will not be provided with accommodation by the University. The successful candidate should pay a refundable security deposit of Rs. 10,000\= This amount shall be deducted from his salary in 10 installments.

**Salary scale:** Rs 21 475-10x290;1x420-24,795/-p.m

**Selection**: By Test and Interview.

Application forms may be obtained from the office of the Senior Assistant Registrar/ Establishments (Non-Academic) of this University on payment of Rs.100/- for each application form at the People's Bank, University of Jaffna Branch or at the Shroff's counter of this University. Those who wish to obtain the forms by post are requested to send a Money Order/Postal Order drawn in favour of the Bursar, University of Jaffna, together with a self - addressed Rs .5.00 stamped envelope of 23x10 c.m in size.

The envelope containing duly filled application form must bear the name of the post to which they apply on its top left hand corner and either hand delivered or sent under registered post to reach the office of the Registrar on or before 11th September 2009.

Only Applications sent on the **specified** form will be accepted. Applications received after the closing date and illegible and incomplete applications will be rejected without intimation.

STATUTORY BENEFITS

1. Allowances approved by the University Grants Commission.
2. Membership in Universities Provident fund and Pension Scheme in the University Scheme.
3. Gratuity payment.
4. Employment trust fund
5. Free Medical care.

Those who are in public Service/Corporations /Statutory Bodies should forward their applications through their respective Heads of Departments/Corporations/Boards. Advance copies of applications may be sent in the first instance. However, if the application routed through the Head of Department is not recived, no such applicant will be considered for appointment.

Registrar
12.08.2009


## சாவகச்சேரிக்கு இன்று மாகாண ஆளுநர் விஜயம்

யாழ்ப்பாணம், ஒக.13

வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ. ஏ. சந்திரசிறி இன்று தென்மராட்சி பிரதேசத்திற்கு விஜயம் செய்யவுள்ளார்.

சாவகச்சேரி ஆதார வைத்திய சாலை, சாவகச்சேரி நகரசபை அலுவலகம் ஆகியவற்றுக்கு வருகை தரவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி நகரசபையில் கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார் ஆகியோருக்கு போசாக்கு உணவுப் பொதி வழங்கும் நிகழ்வினை ஆளுநர் ஆரம்பித்து வைக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (1-207)

## ஒலிம்பியாட் பயிற்சி வகுப்பு

யாழ்ப்பாணம், ஒக. 13

யாழ். மாவட்ட மட்டத்தில் யாழ். கல்வி வலய ஏற்பாட்டில் இடம் பெற்று வரும் கணித, விஞ்ஞான ஒலிம்பியாட் தொடர் பயிற்சி நெறியின் வகுப்புக்கள் நாளை மறுதினம் சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் காலை 8.30 மணி முதல் யாழ். கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறும் என்று வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் தெரிவித்தார். (1)


## மரண அறிவித்தல்



## திருமதி தவமணி சுந்தரராஜன்

தெல்லிப்பழை 'கணேசவிலா'வைப் பிறப்பிடமாகவும் தற்சமயம் 'ஒக்லண்ட்' நியுசிலாந்தை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திருமதி தவமணி சுந்தரராஜன் (தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி ஆசிரியராகவிருந்து ஓய்வுபெற்ற பின் சம்பியா, பொற்ஸ்வானா ஆகிய இடங்களில் கடமைபுரிந்தவர்) 10.08.2009 திங்கட்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் நாகலிங்கம் சுந்தரராஜனின் (ஓய்வுபெற்ற மகாஜனாக் கல்லூரி ஆசிரியர்) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி முருகேசபிள்ளை-சிதம்பரம் தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும் நாகலிங்கம் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் இரேணுகா, முருகானுஜன் ஆகியோரின் அன்புத் தாயும் சிறீகுமார், அனுஷியா ஆகியோரின் அன்பு மாமியும் கஜன், பவன், மயிலன், சாந்தலா ஆகியோரின் பாசமுள்ள பேர்த்தியும் நவமணி, பூமணி, Dr.கணேசன், தேம்பாமலர், மகேசன், நடேசன், இராணிமலர், காலஞ்சென்ற ஜெகதீசன், குகதீசன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஞானலிங்கம், துரைசிங்கம், காலஞ்சென்ற சந்திரரதி மற்றும் சுகுணகுமாரி, செல்வநாயகி, கந்தசாமி, லஷ்மிகாந்தா, சிவகாமி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(13.08.2009) வியாழக்கிழமை நியுசிலாந்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
முருகேசபிள்ளை குடும்பத்தினர்.

தொ.பே.:
006496 385330 (சி-560039)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.மாவட்ட முன்பள்ளி ஆசிரியர் ஒன்றியம் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள்.
நிகழ்வில் முன்பள்ளி ஆசிரியர் ஒன்றியத்தின் நிறுவுநர் எஸ்.ஜே.செல்வராசா தலைமை உரையாற்றுவதையும் இலங்கை வங்கி மானிப்பாய் கிளையின் முகாமையாளர் எஸ்.லட்சுமணசர்மா, யாழ்.ப.நோ.கூட்டுறவுச் சங்கத்தின் பொது முகாமையாளர் க.மனோகரன், சோஆ நிறுவனத்தின் நிகழ்ச்சித் திட்ட முகாமையாளர் யூட்வொட்சன் ஆகியோர் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட முன்பள்ளி ஆசிரியர்களின் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்: ஓங்காரன்)

## தெல்லிப்பழையிலிருந்து யாழ்ப்பாணத்துக்கான கே.கே.எஸ்.வீதியூடான போக்குவரத்துச் சேவை சீராக இடம்பெறாமையால் நெருக்கடி நிலைமை

யாழ்ப்பாணம், ஓக.13

தெல்லிப்பழையில் இருந்து யாழ்ப்பாணத்துக்கான கே.கே.எஸ்.வீதியூடான போக்குவரத்துச் சேவை சீராக இடம்பெறாமையால் பயணிகள் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றனர்.

அரச உத்தியோகத்தர் மற்றும் அலுவலகங்களில் கடமைபுரிவோர் இதனால் உரிய நேரத்தில் கடமைகளுக்குச் செல்ல முடியாத நிலைமை தோன்றியுள்ளதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

காலை 7 மணிக்கு பஸ்ஸுக்காகவரும் பயணி ஒருவர் கிட்டத்தட்ட ஒரு மணி நேரமாவது காத்திருக்க வேண்டிய நிலைமை ஏற்படுவதாகக் கூறப்படுகின்றது.

இப்பாதைக்கான இ.போ.ச.பஸ்சேவை சீராக இடம்பெறாமையே இதற்குக் காரணம் என்று சுட்டிக் காட்டப்படுகிறது.

பெரும்பாலான அலுவலர்கள் பருவகாலச் சீட்டு பெற்றவர்களாகவே காணப்படுகின்றனர்.

இவர்கள் பருவகாலச் சீட்டையும் பெற்று பின்னர் தனியார் மினிபஸ்களுக்குப் பணத்தையும் கொடுத்துப் பயணிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இதேவேளை -

பஸ்சேவை சீராக இடம்பெறாமையால் தனியார் பஸ்களில் நெருக்கடி நிலவுவதாகவும் அவசரம் கருதி மிதிபலகையில் நின்று கூட பயணிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

உரிய அதிகாரிகள் இதற்கான நடவடிக்கைகளை எடுக்க மாட்டார்களா எனப் பயணிகள் ஏக்கம் தெரிவிக்கின்றனர். (203)

## தோட்டத் தொழிலாளி பாம்புக்கடிக்கு இலக்கானார்

யாழ்ப்பாணம்,ஓக.13

தோட்ட வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவரைப் பாம்பு கடித்தது.

கடந்த திங்கட்கிழமை மாலை 6.30 மணியளவில் நீர்வேலி வடக்குப் பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த அ.சிறிதரன் (வயது 41) என்பவரே பாம்புக்கடிக்கு இலக்கானார்.

இவர் கோப்பாய் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக அம்புலன்ஸ் மூலம் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார். (203-78)

## கச்சாய் பொது நூலகம் நடத்திய வழிகாட்டல் பரீட்சை முடிவு

யாழ்ப்பாணம், ஓக.13

கச்சாய் பொது நூலக இளந்தளிர் இல்லத்தினர் நூலக எல்லைக்குட்பட்ட பகுதியில் தரம் - 5 வகுப்புகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கான விசேட வழிகாட்டல் போட்டிப் பரீட்சையை அண்மையில் நடத்தினர்.

பரீட்சையில் 120 க்கும் மேல் புள்ளிகள் பெற்ற மாணவர்களின் விவரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

சி.மிதிலன் - கச்சாய் அ.த.க.பாடசாலை (149), ஆர்.சுதர்சிகா - மிருசுவில் றோ.க.த.க.பாடசாலை (136), த.சுபீதன் - கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி. (133), உ.சுலக்ஸன் - கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி. (128), செ.கவிகஜன் - கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி.(127), லோ.கபில்ஸன் - கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி.(125), யோ.கௌசல்யா - மிருசுவில் அ.த.க.பாடசாலை (125), த.வாகீசன் - உசன் இராமநாதன் ம.வி. (122), தி.செந்தூரன் - மிருசுவில் றோ.க.த.க.பாடசாலை (121), ச.சத்தியரூபன் - கச்சாய் அ.த.க.பாடசாலை (121), செ.சுகன்யா - உசன் இராமநாதன் ம.வி. (120) (203-207)

## "'நிஷா'வால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நெல்

நல்லூர்,ஓக.13

'நிஷா' அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு 'கமநெகும' திட்டத்தின்கீழ் யாழ்.குடா விதை உற்பத்தியாளர் சங்கம் 7ஆயிரம் புசல் நெல்லை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இதன் முதல் கட்டமாக 3ஆயிரம் புசல் நெல் தற்சமயம் வழங்கப்படுகின்றது. இன்னும் சில தினங்களில் மிகுதித் தொகையும் வழங்கப்பட்டுவிடும் என 'சீற்கோ' தகவல்கள் தெரிவிக்கின்றன. (203-111)

## யாழ்.மாநகரசபை எல்லையில் அபிவிருத்திக்கு 8லட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு

### நாடாளுமன்ற உறுப்பினரின் வரவு செலவு நிதியிலிருந்து

நல்லூர், ஓக.13

யாழ்.மாநகரசபை எல்லையில் மேற்கொள்ளப்படவேண்டிய அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கென யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் 8 லட்சத்து 85 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்துள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா நந்தாவில் ஒழுங்கை, சேச்றோட் புனரமைப்புக்கென ஒரு லட்சம் ரூபாவும், நல்லூர் முருகன் சனசமூக நிலைய சிறுவர் பூங்காவுக்குத் தளபாடங்கள் கொள்வனவுக்கு 50 ஆயிரம் ரூபாவும், அரியாலை சனசமூக நிலையத்திற்குப் புத்தகங்கள் கொள்வனவுக்கு 50 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கியுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன் அரசடி 2ஆவது, 5ஆவது ஒழுங்கைகள் புனரமைப்புக்கு 6 லட்சம் ரூபா ஒதுக்கியுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் எம்.சிவாஜிலிங்கம் நல்லூர் சங்கிலியன் வீதி, மாநகரசபை சிறுவர் பாடசாலைக்குத் தளபாடங்கள் கொள்வனவு, கல்விக்கான உபகரணங்கள் கொள்வனவுக்கென 35 ஆயிரம் ரூபாவும், நல்லூர் ஸ்ரீ முருகன் சனசமூக நிலையத்துக்கு ஒலிபெருக்கிச் சாதனங்கள் கொள்வனவுக்கு 50 ஆயிரம் ரூபாவும் நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்.

குறிப்பிட்ட வேலைத் திட்டங்களை விரைவில் பூர்த்தி செய்யக் கூடியதான நடவடிக்கைகளைச் சம்பந்தப்பட்டவர்கள் மேற்கொள்ளுமாறு யாழ்.மாநகர ஆணையாளர் கேட்டுள்ளார். (203-111)



யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரிக்கு கணனிகள் கையளிக்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில் கல்வி அமைச்சர் சுசில் பிரேம் ஜெயந்த, சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் கலந்து கொண்டனர். பீடாதிபதி எஸ்.கே.யோகநாதனும் படத்தில் காணப்படுகின்றார்.

## துரித அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் பிரான்பற்றில் வைத்தியசாலை புனரமைப்பு

யாழ்ப்பாணம், ஓக.13

துரித அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பண்டத்தரிப்பு - பிரான்பற்று கிராமத்தில் கிராமிய ஆயுள்வேத வைத்தியசாலைக்கான இருமாடிக்கட்டடம் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

முதற்கட்டமாக 5 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டு அபிவிருத்திகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இக்கட்டடப் புனரமைப்புக்கான அனைத்து மக்கள் பங்களிப்பினையும் முழுமையாக வழங்கி வருகின்றோம்.

இவ்வாறு பண்டத்தரிப்பு பிரான்பற்று மக்கள் நலன்புரிச் சங்கத்தின் சிரேஷ்ட தலைவர் சி.மகேந்திரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

வலி.தென்மேற்கில் பிரான்பற்று கிராமத்தை பின்தங்கிய நிலையில் இருந்து வளர்ச்சி அடைந்து வருகின்ற கிராமமாக விரைவில் மாற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுத்து வருகின்றோம்.

அதன் முதற்கட்டமாக -

பிரான்பற்று - சுவாமி விவேகானந்தர் வீதியில் உள்ள ஏழரைப் பரப்பு மேட்டுநிலக் காணியை வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் பாரிய நூல்நிலையம் ஒன்று அமைத்துத் தருமாறு கோரி நன்கொடையாக வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் ம.ஜெகூவிடம் கையளித்துள்ளோம்.

இதனைவிட வலி.தென்மேற்கு பகுதியில் பாடசாலை விட்டு விலகிய அனைத்து மாணவர்களும் பயன்படக்கூடிய வகையிலான நவீன தொழிற்பயிற்சி நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

விரைவில் கால்நடை வைத்திய அதிகாரி பணிமனையின் கீழ் பால் உற்பத்திப் பொருள்கள் விற்பனை நிலையம் பிரான்பற்று தம்பித்துரை வீதியில் அமைக்கப்படவுள்ளது.

இதற்கான துரித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகிறதாகப் பிரான்பற்று மக்கள் நலன்புரிச் சங்கத் தலைவர் சி.மகேந்திரம் தெரிவித்தார். (203-302)

## முதுகல்விமாணி கற்கைக்கு கொழும்பில் பரீட்சை

யாழ்ப்பாணம், ஓக.13

நாடளாவிய ரீதியில் முதுகல்விமாணி கற்கைநெறிக்கான ஆள்சேர்ப்புப் பரீட்சை கொழும்பில் நடைபெறவுள்ளது.

தேசிய கல்வி நிறுவகத்தினால் எதிர்வரும் 16ஆம் திகதி நடத்தப்படவுள்ள பரீட்சைக்கான பரீட்சார்த்திகளுக்கு பரீட்சை அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுவரை அனுமதி அட்டைகள் கிடைக்கப் பெறாதோரை உடன் கல்வி நிறுவகத்தின் கல்விப் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. பரீட்சைக்கு விண்ணப்பித்து 8 மாதங்களுக்குப் பின்னர் பரீட்சை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. யாழ்.மாவட்டத்தில் இருந்து 23 பேர் தோற்றுகின்றனர். (203-302)

## குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

## கண்காணிப்புக் குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஓக.13

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் கீழ் இயங்கும் வைத்திய நிறுவனங்களுக்கான இம்மாதத்திற்குரிய மாதாந்த மாவட்ட கண்காணிப்புக் குழுக்கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலக மாநாட்டு மண்டபத்தில் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது. (203-300)

## சுயதொழில் ஆரம்பிக்க உதவிகோரி விண்ணப்பித்த தென்மராட்சியைச் சேர்ந்த 11 பேருக்கு கொடுப்பனவு

யாழ்ப்பாணம், ஓக.13

சமூக சேவைகள் திணைக்களத்திற்கு சுயதொழில் ஆரம்பிப்பதற்கு நிதி உதவி கோரி விண்ணப்பித்த தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த 11 பேருக்கான கொடுப்பனவுகள் பிரதேச செயலகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

மாடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு, ஆடு வளர்ப்பு, தையல் ஆகியவற்றுக்கு விண்ணப்பித்தவர்களுக்கு முதல்கட்டக் கொடுப்பனவாக தலா 7 ஆயிரத்து 500 ரூபா வீதம் வழங்கப்படவுள்ளது.

பின்வருவோர் தமது தேசிய அடையாள அட்டை, குடும்ப அட்டை ஆகியவற்றுடன் பிரதேச செயலக சமூகசேவைகள் பிரிவில் கொடுப்பனவினைப் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

செ.சர்வானந்தன் - தாவளை இயற்றாலை, சி.சாந்தகுமாரி - கொடிகாமம் மத்தி, சி.நாகம்மா - கரம்பைக் குறிச்சி வரணி, க.திலகவதி - மந்துவில் கிழக்கு, தி.சரோஜினி - பெரியமாவடி, சாவகச்சேரி, சி.வள்ளிப்பிள்ளை - கச்சாய் தெற்கு, சு.அருந்தினிதேவி - கைதடி மத்தி, ச.அம்மணி - புகையிரதநிலையவீதி, சாவகச்சேரி, மு.தங்கமணி - மீசாலை வடக்கு, த.அன்னம்மா பாலாவி தெற்கு, செ.ஸ்ரீநந்தினி - தவசிகுளம், மிருசுவில். (203-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கை வங்கியின் 70ஆம் ஆண்டு நிறைவு விழா நிகழ்வுகள் இலங்கை வங்கியின் வல்வெட்டித்துறைக் கிளையில் இடம்பெற்றன. வல்வெட்டித்துறை முத்துமாரி அம்மன் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ தண்டபாணிக தேசிகர், இலங்கை வங்கியின் வடபிராந்திய செயற்பாட்டு முகாமையாளர் ஆர்.ஜெயேந்திரா, வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சமிதா, வங்கி முகாமையாளர் எஸ்.சிறிகாந் ஆகியோர் மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்துவைத்தபோது எடுக்கப்பட்ட படங்கள். (253)

# வடக்குத் தேர்தலில் பெற்ற வெற்றியை அரசு வன்னி அகதிகளுக்கு எதிராகப் பாவிக்கக்கூடாது

## ஐ.தே.கட்சியின் ஜயலத் கூறுகிறார்

கொழும்பு,ஓக.13

வடக்குத் தேர்தலில் பெற்ற வெற்றியை அரசு வவுனியா அகதிமுகாம்களில் உள்ள வன்னி அகதிகளுக்கு எதிராகப் பயன்படுத்தக்கூடாது என்று ஐக்கிய தேசியக் கட்சி அரசிடம் கேட்டுக்கொண்டுள்ளது.

அந்த மக்களின் உரிமையைப் பாதுகாப்பதற்காக ஐக்கிய தேசியக் கட்சி தொடர்ந்தும் பாடுபடும் என்று அக்கட்சி மேலும் தெரிவித்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய ஐ.தே.கட்சி எம்.பியான ஜயலத் ஜயவர்தனவே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

யாழ்ப்பாணத்திலும்,வவுனியாவிலும் தேர்தல் நடத்தக்கூடிய சூழ்நிலை இப்போது இல்லையெனத் தெரிவித்து அத்தேர்தலை ஒத்திப்போடுமாறு புளொட் அமைப்பின் தலைவர் சித்தார்த்தனும், தமிழர் விடுதலை கூட்டணியின் தலைவர் ஆனந்தசங்கரியும் ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்தபோதும் ஜனாதிபதி அதைக் கேட்காது தேர்தலை நடத்தினார்.

மிகவும் பயங்கரமான சூழ்நிலையில்தான் நாம் இத் தேர்தலில் போட்டியிட்டோம். வடக்கு மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் நோக்கில்தான் நாம் இதில் போட்டியிட்டோம்.

யாழ்ப்பாணத்தில் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபடுவதற்காக நாம் விமானம் மூலம்தான் சென்றோம். ஏ-09 நெடுஞ்சாலையூடாகப் பயணம் செய்ய எமக்கு அனு மதி வழங்கப்படவில்லை.

நடந்து முடிந்த தேர்தலில் வடக்கில் 18 வீதமான மக்கள்தான் வாக்களித்தனர். மக்களுக்கு இத்தேர்தலில் அக்கறை இருக்கவில்லை என்பது தேர்தல் பெறுபேறுகள் மூலம் தெரியவந்தது.

இத்தேர்தலில் பெற்ற வெற்றியை அரசு தமிழ் மக்களுக்கு எதிராகப் பயன் படுத்தக் கூடாது. குறிப்பாக வன்னி அகதிகளுக்கு எதிராக இந்த வெற்றியைத் திருப்பக்கூடாது.

இந்த மக்களின் உரிமைகளுக்காக நாம் தொடர்ந்தும் பாடுபடுவோம். வடக்கில் இனிவரும் தேர்தல்களிலும் நாம் போட்டியிடுவோம். வடக்கு மக்களின் உரிமையைப் பாதுகாக்க நாம் என்றும் அவர்களுடன் நிற்போம்- என்றார். (சி)


# மரண அறிவித்தல்

## திருமதி இராசநாயகம் வருணேஸ்வரி



(கானான் திருச்சபை விசுவாசி)

அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வருணேஸ்வரி 11.08.2009 செவ்வாய்க்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்துவிட்டார்.

அன்னார் க.இராசநாயகத்தின் அன்புத் துணைவியும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும் கனகநாயகம், சுலோசனாதேவி, காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, செல்வநாயகம் ஆகியோரின் பாசமிகு சகோதரியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை கானான் திருச்சபையினரால் அவரது இல்லத்தில் இன்று (13.08.2009) வியாழக்கிழமை மு.ப. 10 மணிக்கு நடத்தப்பட்டு நல்லடக்கத்துக்காக கோப்பாய் கானான் சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும ஏற்றுக்கொள்ளவும்

**'உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே என்னிடம்**
**நம்பிக்கை கொள்பவன் இறப்பிலும் வாழ்வான்' (யோவான் 11 - 25)**

தகவல்:
க. இராசநாயகம் - மிருதங்க வித்துவான்
(கணவர்).

(87786)



# 6ஆம் ஆண்டில் அழிவிலா நினைவுகள்
## தெப்பமெனக் கரைசேர்க்கும்

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 04 | 21 |
| 09 | 07 |
| 1943 | 2003 |



**திருமதி. மகேஸ்வரி குஞ்சிதபாதம்**
திதி: அபரபக்க ஸப்தமி - 13.08.2009

பூவுடனும் பொட்டுடனும்
பூவுலகை விட்டேகும்
மேவியவன் மேலெண்ணம்
மேதினியில் பொய்க்கவில்லை

ஓவியமா யாகிடினும்
உன்னன்பு குன்றாது
தேவியுந்தன் வழிகாட்டல்
தெப்பமெனக் கரைசேர்க்கும்

கண்டிக்குழி,
யாழ்ப்பாணம்.

பிரிவுத்துயரால் பெருநோயுறும்
துணைவன், பிள்ளைகள், மருகன், மருகிகள்
பேரர்கள்: விதுரன், திவ்யன், நித்யன், சௌமியன்


## மாகாணசபை அலுவலருக்கு 16ஆம் திகதி பரீட்சை

1999இல் நியமனம் பெற்ற மாகாண சபை அலுவலர்களுக்கான பரீட்சை எதிர்வரும் 16ஆம் திகதி வேம்படி மகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

அபிவிருத்தி உதவியாளர், பாடசாலை முகாமைத்துவ உதவியாளர், உள்ளூராட்சி உதவியாளர், மருத்துவ ஆவண உதவியாளர், திட்டமிடல் நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் ஆகிய பதவிகளில் உள்ளோருக்கே பரீட்சை இடம்பெறவுள்ளது.

மேற்படி பரீட்சையில் பங்குகொள்ளவுள்ள அலுவலர்களுக்கான இருநாள் முழுப் பயிற்சியை இலங்கை நிர்வாக சேவை சிரேஷ்ட அதிகாரியும் 'நெக்டெப்' பிரதிப் பணிப்பாளருமான கே.தெய்வேந்திரம் வழங்கியுள்ளார்.

பயிற்சி வகுப்பில் 29 அலுவலர்கள் பங்கு கொண்டதாக பயிற்சி ஒருங்கிணைப்பாளர் ஆர்.அறிவரசன் தெரிவித்தார். (203)

## கரணவாய் கிழக்கு கிராமத்துக்கு மீள்எழுச்சித் திட்டத்தின்கீழ் நிதி

நல்லூர்,ஓக.13

கரணவாய் கிழக்கு கிராமத்தின் மீள் எழுச்சித் திட்டத்திற்கென இக்கிராம மக்களின் எண்ணிக்கை அடிப்படையில் 7.4 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்படும் எனப் பிரதி திட்டப்பணிப்பாளர் எஸ். விசுவலிங்கம் தெரிவித்துள்ளார்.

கரணவாய் கிராமம் மீள் எழுச்சித் திட்டத்திற்கெனத் தெரிவுசெய்யப்பட்டுள்ளதை அடுத்து கடந்த 3ஆம் திகதி மீள்எழுச்சித் திட்ட அறிமுகக் கூட்டம் உச்சில் அம்மன் கோயில் மண்டபத்தில் கரவெட்டி பிரதேச செயலக பிரதி திட்டப்பணிப்பாளர் இ.ஸ்ரீபாஸ்கரன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் வடக்கு, கிழக்கு மாகாண முன்னாள் பிரதிப் பிரதம செயலாளர் எஸ். [illegible] அபிவிருத்தி உத்தியோகத்தர், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (203-111)


**ALLIANCE FRANCAISE DE JAFFNA**
61, Kachcheri - Nallur Road, Jaffna
Phone: 021 2228093
E-Mail: alliancejaffna@yahoo.com

**Learn French the French Way**
**French Classes**

இலங்கையிலுள்ள French Embassy மூலமும், Franceஇலுள்ள Alliance Francaise de Parisஇன் ஊடாகவும் சர்வதேச மொழியான பிரெஞ்சு மொழி வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

மாணவர்கள், உயர்கல்வி கற்போர், அலுவலர்கள், ஆசிரியர்கள், மொழிபயில ஆர்வமுள்ள எவரும் கற்கலாம்.

புதிய பிரிவுகள் சனி, ஞாயிறுகளில்

பதிவுகளை உடன் மேற்கொள்ளவும்.

கட்டண, மேலதிக விவரங்கள்: நேரில்/தொலைபேசியினூடாகப் பெறலாம். (87784)



# 3ஆம் ஆண்டு நினைவலைகள்

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 13 | 18 |
| 05 | 07 |
| 1942 | 2006 |



## திருமதி செல்லம்மா கணேசலிங்கம்

வையத்தில் வாழ்ந்து வானுறை தெய்வமே!
அன்பின் வடிவமே
நீங்கள் எம்மைப் பிரிந்து ஆண்டுகள் மூன்றாயினும்
நீங்கா நினைவுகளாய் நிலைத்து
நிற்கும் உங்கள் நினைவுகள்.

உங்கள் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

No.11, திருவள்ளுவர் லேன்,
கந்தர்மடம்.



# 45ஆவது நாள் நினைவஞ்சலி



## அமரர் கந்தையா பசுபதி
(புளியங்கூடல்)

தோற்றம்
15-03-1926

மறைவு
30-06-2009

**நெஞ்சம் மறக்குமா....!**

எந்தையும் தாயுமாகி எம்முடன் வாழ்ந்தீர்கள்
ஏற்றமார் வாழ்வுகாண எமக்காக உழைத்தீர்கள்
"விந்தையான வாழ்வை" விரைவாய் வாழ்ந்தே முடித்தீர்கள்
வேளைகள் முழுதும் மக்கள் மருமக்களை அரவணைத்தீர்கள்
சிந்தனைக்குரிய 'பசுபதி' யாக சிறந்தே உயர்ந்தீர்கள்
சேவைகள் பலபுரிந்து உறவுகளைக் காத்தீர்கள்
அத்தன் சிவன்தாள் எமைப் பிரிந்தே சேர்ந்தீர்கள்
ஆறாத சோகத்துடன் அஞ்சலித்து நிற்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

A.G.A. வீதி,
உடுவில்,
சுன்னாகம்.
T.P.: 0779337092

பிரிவுத்துயரால் வாடும்:
மகள் - இ.சரோஜாதேவி,
மருமகன் - இ.இலங்கநாதன்,
பேரப்பிள்ளைகள் - காண்டீபன், கார்த்திகா.

(87785)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறைவனுக்கு உணவளிக்கிறாய்

ஒரு போதும் துன்பம் இழைக்காதே - எப்போதும் உதவியே செய் - இதுவே கூட உன்னை விபத்துக்களிலிருந்தும், ஆபத்திலிருந்தும் காப்பாற்றி உதவும். எந்த வேலை செய்தாலும், அதை இறைவனுக்கு அர்ப்பணிக்கும் பணியாகச் செய்து முடி! பிச்சைக்காரனுக்கு உண வளிக்கும் போதுகூட அதனை இறைவனுக்குப் படைப்பதாக எண்ணிக் கொண்டு, இறை வனுக்கு உணவளிப்பதாக எண்ணிச் செய்! இந்தத் தியாகமே யோகம் - தியாகம் செய்யா மல் எதையாவது நீ அனுபவித்தாலும், உனக்கு மன அமைதி கிடைக்காது. வேதங்கள் உரத்துக் கூறுகின்றன. அமரத்துவம் தியாகத்தினாலேயே அடையக்கூடியது. பதவியும், அந்தஸ்தும், நிரந்தரமில்லாதவை, அவையெல்லாம் கணநேரத்தில் மறையக்கூடியவை. 'ஆத்மா' மட்டும்தான் மாறாதது, நிரந்தரமானது.

'சம்யக் திருஷ்டி'யில் (நல்ல பார்வை) இருந்து நீ நல்ல வாக்கைப் பெறுகிறாய்! இத் தனை பேர் கூடும் இடத்தில், நீ மற்றவரைப் பற்றிப் பேசுவதையும், அரட்டை அடிப்பதை யும் தவிர்க்க வேண்டும். மற்றவரைப்பற்றிப் பேசுவதால் உனக்கு என்ன கிடைக்கப் போகி றது? கடவுளைப்பற்றி மட்டுமே நினைத்துக்கொண்டிரு. நீ என்ன பார்க்கிறாயோ, கேட் கிறாயே, அவையெல்லாம் உன் மனதில் அழுத்தமாகப் பதிகிறது. அவ்வாறு பதிந்தவற்றை நீ மீண்டும் நினைவு கூரலாம். மற்ற வரிடம் உள்ள குறைகளை மட்டுமே நினைத்துக்கொண்டு, அதையே பிடித்துக் கொண்டு, குற்றம் காணாதீர்கள். நல்லவற்றை மட்டுமே கேளுங் கள். தெய்வத்தின் மேன்மையைப் பற்றிக் கேளுங்கள்.



### சாயி சிந்தனை

## இலங்கை வங்கியின் அச்சுவேலிக் கிளையை சனிக்கிழமைகளிலும் இயங்க வைக்கக் கோரிக்கை

அச்சுவேலி, ஒக 13

இலங்கை வங்கியின் அச்சுவேலிக் கிளையை சனிக்கிழமைகளிலும் செயற் பட வைக்குமாறு கோரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.

அச்சுவேலி தெற்கு கிராம அபிவிருத் திச் சங்கம் இலங்கை வங்கியின் வட பிராந் திய உதவிப் பொது முகாமையாளரிடம் இந் தக் கோரிக்கையை விடுத்துள்ளது.

அச்சுவேலி தெற்கு கிராம அபிவிருத் திச் சங்கம் இது தொடர்பாக இலங்கை வங்கியின் வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் என்.சிவரட்ணத்திற்கு அனுப்பி வைத்துள்ள கோரிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கை வங்கியின் அச்சுவேலிக் கிளை வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம் பகுதிகளுக்கு மையப்பகுதியில் அமைந் துள்ளது.

வங்கியின் செயற்பாடுகளை பெற்றுக் கொள்ளும் அரசாங்க ஊழியர்கள் மற்றும் வாடிக்கையாளர்களின் வசதியைக் கருத் தில் கொண்டு வங்கியின் செயற்பாடுகளை வாரந்தோறும் சனிக்கிழமைகளிலும் செயற் பட ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கின் றோம் - என்றுள்ளது.

இதன் பிரதி இலங்கை வங்கியின் வட பிராந்திய செயற்பாட்டு முகாமையாளர் ஆர். ஜெயேந்திராவுக்கும் அனுப்பி வைக்கப்பட் டுள்ளது. (203-11)

## உ..கிழங்கு உற்பத்தி செய்யவுள்ள விவசாயிகள் பதிவு செய்யலாம்

யாழ்ப்பாணம்,ஒக.13

உருளைக்கிழங்கு உற்பத்தியில் ஈடுபட வுள்ள விவசாயிகள் உடன் தொடர்பு கொள் ளுமாறு யாழ்.மாவட்ட தேசவள விவசாயி கள் சம்மேளனத் தலைவர் கேட்டுள்ளார்.

கொழும்பில் இருந்து நல்லின விதை உருளைக் கிழங்கு தருவிக்கப்பட்டு வழங் கப்படவுள்ளதால் எதிர்வரும் 17ஆம் திக திக்கு முன்னர் பதிவு செய்து கொள்பவர்க ளுக்கு வழங்கப்படும் என்று அவர் மேலும் கூறினார். (203-302)

## மண்டலாபிஷேகப் பூர்த்தி விழா

யாழ்ப்பாணம்,ஒக.13

சாவகச்சேரி வாரிவனம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தில் எழுந்தருளி அருள் பாலிக்கும் வடபத்திரகாளி அம்பாளின் கும் பாபிஷேகத்தையொட்டிய மண்டலாபி ஷேகப் பூர்த்திப் பெருவிழா எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

அன்றையதினம் வடபத்திரகாளி அம் பாளுக்கு கலச பால் அபிஷேகமும், ஸ்ரீ முத் துமாரி அம்பாளுக்கு சங்காபிஷேகமும் இடம் பெறவுள்ளன.

கடந்த 04.07.2009 தொடக்கம் மண்ட லாபிஷேகம் நடைபெற்று வருவது குறிப் பிடத்தக்கது. (203)

## நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

யாழ்ப்பாணம், ஒக13

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த பெருந்திருவிழாவை முன்னிட்டு இந்து கலாசாரத் திணைக்களத்தால் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் திருமதி. மகிந் தினி விஜயகுமார் தலைமையில் ஆன்மீக நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன.

இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3மணி யளவில் சிவலிங்கயோககேந்திரா செய லாளர் சிவ.உமாசுதன் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்தவுள்ளார்.

அனலைதீவு மனோன்மணி அம்பாள் அறநெறிப் பாடசாலை, வட்டுக் கோட்டை கண்ணகி அம்பாள் அறநெறிப் பாடசாலை, தெல்லிப்பழை தோதரை அறநெறிப்பாடசாலை ஆகியவற்றின் மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன.

* * *

தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலய அனுசரணையுடன் நல்லூர் இளங்கலை ஞர் மன்றத்தின் இசையரங்கு நிகழ்வு நல் லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் இடம்பெற்று வருகின்றது.

இன்று வியாழக்கிழமை இ.குகாநந்த னின் பாட்டு இடம்பெறும்.

வயலின்- கே. குகபரன், மிருதங் கம்-எஸ்.துரைராசா, கடம் அ.செல்வரத் தினம்.

* * *

நல்லூர் ஆல யப் பெருந்திரு விழாவை முன் னிட்டு ஸ்ரீ முத்து விநாயகர் ஆலய மண்டபத்தில் கான கதாவாரிதி பிரம் மஸ்ரீ சிவ.வை.நித் தியானந்தசர்மா 'கந் தபுராணம்' தொடர் சொற்பொழிவு நிகழ்த்தி வருகின் றார்.

இதில் இன்று வியாழக்கிழமை 'மாயமான்' என்னும் தலைப்பில் இசைச் சொற்பொழிவு இடம் பெறவுள்ளது.(203)







## நல்லூர் பெருந்திருவிழாக் கால உதயனின் சிறப்பம்சம்

### நல்லையம்பதியுறை நாயகனே

நல்லையம் பதியுறை நாயகனே,
நித்தமும் உன் புகழ் தனைப் பாடிப்
பக்தியில் திளைப்பவர் பல கோடி
முத்தியை ஈந்திடும் முருகேசா - எம்
முன்வினை தீர்ந்திட அருள்வாயே
சக்தியின் மைந்தா சற்குரு நாதா
சந்தமும் சாந்தமும் கொண்டவனே - எம்
வல்வினை அகன்றிட அருள் தாராய்
நல்லை யம் பதியுறை பெருமானே

சோ.அபிராமி, *தரம் - 9 E, யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி.*

### நல்லைநகர் உறை பெருமானே

நாளும் தொழுபவர் மனத்தில் மகிழ்வுற
இன்னருள் தந்திடும் முருகோனே,
பாடும் அடியவர் சூழ நல்லையில் வீதி
வலம் வரும் பெரியோனே.
ஆடும்காவடி பஜனைகள் பின் வர-
மயில் மீதேறி நீ வரவேணும் எம்
பாவம் பொடிபட நெஞ்சில் துயர் கெட -
வாழும் வகை செய்தருள் இறையோனே.
அழகுக் கோபுரம் அணி மதில் சூழ் - புகழ்
நல்லை நகர் உறை பெருமாளே.

வேலணையூர் தாஸ்.

### வருவாய் குகனே!

*கதியாய் விதியாய்க் கவியாய்ப் பொருளாய்*
*மதியாய் மலராய் மணியின் ஒலியாய்*
*கதிராய் ஒளியாய்க் கருவாய் உயிராய்*
*அருவாய் உருவாய் வருவாய் குகனே!*

-சரசாலையூரான்

### அபயம் அளித்தருள் புரிவாய் ஆறுமுகா

கண்ணுறங்கித் தூங்கையிலே
கனவுகளோ ஏராளம்,
புலர்ந்திடும் பொழுதினிலே - மனம்
மகிழ்ச்சியில் ஆரவாரம்
எம்மவர்க்கோ அனுதினமும் வெறுமையின் ஏக்கம்தான்
தொடர்கதையிது என்பதனால்
வழிகின்ற விழி நீரே நிஜமாகிப் போனதுவே
கதியே நீ என்றுன்னைச் சரண்புகுந்தோம்
வண்ண மயில் ஏறிவரும் வடி வேலா
ஆறுபடை வீடுடைய வள்ளி மணாளா
காத்தருள்வாய் என வேண்டி
அதிகாலைப் பொழுதினிலே உன்பதிக்கு வருகின்றோம்
நல்லூரில் குடிகொண்ட கந்தா நீயெமக்கு
அபயம் அளித்தருள் புரிவாய் என நம்பி,

-இரா.தர்மரட்ணம், *நெடுந்தீவு - 12.*

### பாவிகளெம் குறை தீர்ப்பாய்

காவடிநாம் ஆடிவரக் கந்தா நீயெம்
கவலைகளை நீக்கிடுவாய் கருணைக்கடலே
பாவடிகள் பாடிவரும் அடியார் தங்கள்
பவ வினைகள் நீக்கிடுவாய் நல்லைக் கந்தா
தேவர் குறை நீக்கிடவே தேவா நீயன்று
சூரனவன் துடுக்கடக்கிக் காத்தருளினாய் -எம்
பாவங்கள் நீக்கிடுவாய் நல்லூர்க் கந்தா
பாவிகளெம் குறை தீர்ப்பாய் பாலமுருகா

சி.கஜானன், *யாழ்.மீசாலை வீரசிங்கம் வீரசிங்கம் ம.வி.*

### கதியற்ற எமக்கு கருணை காட்டுமையா!

சரவணப் பொய்கையில் உதித்த
சரவணபவனே
ஔவைதனை வியக்கவைத்த
வேலவனே
நல்லோரை வாழ்வித்த -நீ
நல்லூரில் கோயில் கொண்டாய்
அனுதினமும் உன் அழகுமுகம்
காண நாம் ஓடி வந்தோம்
பட்ட துன்பம் போதும் என்று
உன் பதங்கள் சரணடைந்தோம்
இனியுமெமை வருத்தாதே இரங்கி யருள் -வேலவனே
இன்னல்கள் களைந்தெமக்கு நல்வாழ்வு தந்திடுவாய்

பா.யசிந்தா, *நீராவியடி.*

### இச்சையுடன் வரவேண்டும் முருகா

வரவேண்டும் மயில் மீது முருகா - வந்து
தரவேண்டும் அருளள்ளித் தமியோர்க்கு வேலா
பச்சைமயில் வாகனனே, பார்வதியாள் பாலகனே
இச்சையுடன் வந்து நீ எளியோரின் துயர்தீர்ப்பாய்

குருமகள் குஞ்சரியைக் குன்றிலே கொண்டவன்
குறமகள் வள்ளியைக் குஞ்சரத்தால் வென்றவன்
குருவாகித் தந்தைக்கு உபதேசம் செய்தவன்
குவலயம் சிறந்திட அருளினைச் சொரிபவன்

ஔவையின் செருக்கடக்கச் சுட்டபழம் தந்தவன்
அருணகிரி நாதரிடம் திருப்புகழ் கேட்டவன்
நக்கீரன் ஆற்றுப்படை நாயகன் ஆனவன்
நல்லூரம் பதியிலும் நமக்கருள அமர்ந்தவன்

சின்மயி, *கோப்பாய்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கரவெட்டி, வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி மாணவத் தலைவிகளுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றபோது, பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கல்லூரியின் பழைய மாணவியும் வடமராட்சி வலயப் பாடசாலைகளின் பற்சிகிச்சை நிலையப் பொறுப்பதிகாரியுமான திருமதி நந்தினி உதயகுமார் மாணவத் தலைவி பிறேமினி தெய்வேந்திரத்திற்கு சின்னம் சூட்டுவதை முதலாவது படத்திலும்- அதிபர் திருமதி ஜே.சுகுமார் சகிதம் மாணவத் தலைவிகள் அமர்ந்திருப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம். (படங்கள்: கர்ணன்).

# மாறுபட்ட விலைகளில் மருந்துகள் விற்பனை

உடுப்பிட்டி, ஓக.13

கரவெட்டி, நெல்லியடிப் பகுதிகளிலுள்ள மருந்தகங்களில் மருந்துகளின் விலைகள் கடைக்குக் கடை மாறுபட்ட வகையில் காணப்படுவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இதனால் பெரும் எண்ணிக்கையான நோயாளர்கள் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

உரிய அதிகாரிகள் இந்த விடயத்தைக் கவனத்தில் எடுக்க வேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளது. (203-70)

## இலங்கை வங்கி அச்சுவேலிக்கிளை ஜனசக்திக் கிராமத்தை தத்தெடுக்கின்றது

அச்சுவேலி, ஓக.13

அச்சுவேலி இலங்கை வங்கி கிளை தனது இரண்டாவது எழுச்சிக் கிராமமாக சிறுப்பிட்டி ஜனசக்தி கிராமத்தை தத்தெடுக்கவுள்ளது.

இலங்கை வங்கி கிளைகள் பின்தங்கிய கிராமங்களை இலங்கை வங்கி எழுச்சிக் கிராமமாக பொறுப்பேற்று அந்தக்கிராம மக்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்கும், கல்வி அபிவிருத்திக்கும், கிராம அபிவிருத்திக்கு உதவி வருகின்றன.

அச்சுவேலி இலங்கை வங்கியினால் புத்தூர் மேற்கு கலைமதிக் கிராமம் எழுச்சிக்கிராமமாகப் பொறுப்பேற்கப்பட்டு உதவிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த வருடம் சிறுப்பிட்டி மேற்கு ஜனசக்தி கிராமம் இலங்கை வங்கி கிராமமாக பொறுப்பேற்கப்படவுள்ளது.

ஜனசக்தி கிராமத்தைப் பொறுப்பேற்கும் நிகழ்வுகள் இந்தமாதம் இறுதி வாரத்தில் மேற்கொள்ளப்படவுள்ளன.

(203-11)

## தவறிவிழுந்து மாணவனுக்கு கை முறிந்தது

யாழ்ப்பாணம், ஓக.13

நாவல் மரத்திலிருந்து தவறி வீழ்ந்து 11 வயது மாணவனுக்கு கை முறிந்தது. இச்சம்பவம் கச்சாய் தெற்கில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த மகேந்திரன் மகிந்தன் (வயது 11) என்னும் மாணவன் கை முறிந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

(203-207)

கணக்கியல்துறை ஆர்வலர்களிற்காக!
முதன்முறையாக தமிழ்மொழி விளக்கத்துடன்!
கம்பனிக்கணக்குகளுடன், VAT இனையும் உள்ளடக்கி
Diploma in Computerized Accounting
உங்கள் நிறுவன கணக்குகளை நீங்களே கணனிமயப்படுத்தும்படியான 100% செய்முறைப்பயிற்சியுடன்..
சர்வதேச ரீதியில் முன்னணியிலுள்ள கணக்கியல் மென்பொருட்களான
Quick Book + ACCPAC + MYOB
ஆகியவற்றினூடாக கற்பிக்கப்படும்
Tally
புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றது.
Batch I :- 13/08/2009 11am/2pm
Batch II :- 15/08/2009 3pm/4pm
Batch III :- 16/08/2009 3pm/4pm
Batch IV :- 18/08/2009 11am/2pm
COMPUTER EXPRESS
Head Office : #167, Kasthuriyar Rd, Jaffna
Phone : 0212228250

MANOJ TRAVELS
விசேட விமான சேவை
நல்லூர்க் கந்தனைக் தரிசிக்க உங்களுக்குத் திருவருள்.
நல்லூர்க் கந்தன் உற்சவத்தை முன்னிட்டு விசேட விமான சேவை.
15.08.2009 - 22.08.2009
யாழிலிருந்து ஒரு வழிக்கட்டணம்
4500/=
கொழும்பில் இருந்து யாழ்.வருபவர்களுக்கு இரு வழிக்கட்டணம் 16,900/= ரூபா மட்டுமே.
கொழும்பிலிருந்து ஒரு வழிக்கட்டணம் 8400/= மட்டுமே.
MANOJ EXPRESS
கொழும்பு - யாழ்ப்பாணம்
தொடர்புகளுக்கு:
கொழும்பு:- No. 55, Maning Place, Wellawatta.
0112364964, 0772293181
Jaffna:- New Market Jaffna.
0772293183, 021 222 3916

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்: 06 ★ 03 ★ 1934
மறைவு: 15 ★ 07 ★ 2009



### திருமதி புவனேஸ்வரி செல்வவிநாயகம்

கடந்த 15.07.2009இல் அமரத்துவமடைந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டு எங்கள் துயரத்தில் பங்குகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் மற்றும் தொலைபேசி, தந்தி மூலம் அனுதாபங்களைத் தெரிவித்துக் கொண்டோருக்கும், சகல விதத்திலும் உதவி, ஒத்தாசைகள் புரிந்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டி, சபிண்டீகரணக் கிரியைகள் நாளை (14.08.2009) வெள்ளிக்கிழமை காலை 5 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் கலந்துகொள்வதோடு, நண்பகல் நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

'சாந்தம்',
ஊரிக்காடு,வல்வெட்டித்துறை.

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(87947)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தவப்பேறு: 04 ★ 12 ★ 1945
சிவப்பேறு: 14 ★ 07 ★ 2009



### அமரர் தியாகராஜா நவநீதன்

அன்னை முகமாய் நேற்றுவரை சிரித்தவன்
அன்பின் மொழியை அனைவருக்கும் கொடுத்தவன்
பாசமின்றி வேறெதுவும் அறியாப் பறவையவன்
வாசமுற்றான் நேசன் தாள்- வையகம் நீங்கி

அன்றிருந்தாய் அன்பு சேர்த்து எம்மோடு
இன்று கலந்தாய் என்புதோல் நீங்கி இறையோடு
என்றும் நினைவில் வாழும் நீ எனும் சோதி
வென்று கொள்வாய் பிறப்பை- சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

எங்கள் குடும்பத் தலைவனின் திடீர் பிரிவில் துயர் பகிர்ந்து, ஆறுதல் அளித்து மரண வீட்டில் கலந்து கொண்டு அனுதாபம் பகிர்ந்த அனைத்து நெஞ்சங்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (13.08.2009) வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

35/6, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி வடக்கு,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.


(87775)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13) சிவப்பு, மஞ்சள், நீலம் போன்ற நிறங்களைச் சேர்த்து பெறப்படும் வர்ணம்,
1) வெள்ளை. 2) கறுப்பு. 3) பச்சை. 4) ஊதா.

14) இலங்கையில் நெல் பயிரிடப்படும் பிரதான போகங்களில் மகா போகத்துக்குரிய காலம்,
1) நவம்பர் - பெப்ரவரி. 2) ஜனவரி - மார்ச்.
3) மே - செப்டம்பர். 4) செப்டம்பர் - ஜனவரி.

15) தேசிய கீதம் இசைக்கப்படும்போது நிற்கவேண்டிய சரியான கொண்ணிலை
1) 2) 3) 4)




16) சிறிய சத்தத்தையும் கேட்கக்கூடிய ஆற்றல் உள்ள பிராணி அல்லாதது,
1) முயல். 2) மான். 3) எலி. 4) பூனை.

17) இலங்கையில் சூறாவளி ஏற்படுவதை முன்கூட்டியே அறிய உதவும் ரேடர் நிலையம் அமைந்துள்ள இடம் எது?
1) பாதுக்கை. 2) கொழும்பு.
3) திருகோணமலை. 4) கண்டி.

18) 2009 இல் வரவுள்ள பூரண தினங்களின் எண்ணிக்கை,
1) 7 2) 11 3) 12 4) 13

11. பின்வரும் சொற்களைக்கொண்டு இடைவெளி நிரப்புக.
(மார்க்கோணி, மாக்மில்லன், சிவப்பு, நீலம், மைக்கல், அஞ்சலோ, லியானாடோ டாவின்ஸி, பச்சை, வெள்ளை, சனி)
1) அதிக துணைக்கோள்களைக் கொண்ட கிரகம் ............................ ஆகும்.
2) கறுப்பும் ............................ யும் நடுநிலை வர்ணங்களாகும்.
3) இறுதித் தீர்ப்பு என்ற புகழ்பெற்ற ஓவியத்தை வரைந்தவர் ............................ ஆவார்.
4) தேசப்படத்தில் மாகாண/மாவட்ட எல்லைகளைக் காட்ட ............................ நிறம் பயன்படும்.
5) வானொலியை கண்டுபிடித்தவர் ............................ ஆவார்.

12. பின்வருவன எப்பிராணிகளின் அலகு என எழுதுக.





1) ..................... 2) ..................... 3) .....................

13. பின்வரும் பறவைகளின் பெயர்களை எழுதுக.




1) ..................... 2) ..................... 3) .....................

14. மிகச்சரியான விடையினை எழுதுக.
01) 9436 என்பது அதில் உள்ள இலக்கத்தால் ஆக்கப்பட்ட மிகப்பெரிய எண் எனின், சரியெனவும், இல்லை எனின் பெரிய எண்ணை எழுதுக.
..............................................................................
..............................................................................
02) பெருக்கல் * எனும் குறியீட்டிலும், வகுத்தல் # எனும் குறியீட்டிலும் காட்டப்படும் எனின், 8 * 9 # 1 இன் பெறுமானம் என்ன?
..............................................................................
..............................................................................
03) 7kg 750g இல் எத்தனை 250g கள் உண்டு?
..............................................................................
04) பஸ்லியா கனாக் காணும் காலங்கள் நாடகத்தை பி.ப 7.55 மணிக்கு பார்க்கத் தொடங்கி 45 நிமிடத்தில் பார்த்து முடித்தாள். அப்போது நேரம் என்ன?
..............................................................................
05) ஒரு சுவருக்கு நீந்தை பூச ராகவிக்கு 4l 600ml தீந்தை தேவைப்பட்டது. அவ்வாறான 4 சுவர்களுக்கு தீந்தை பூசத் தேவைப்படும் தீந்தையின் அளவு?
..............................................................................
06) இதில் 0.5 ஐ நிழற்றுக.




07) செவ்வக வடிவக்காணியானது அம்புக்குறி வழியே பார்த்தபோது 8,4 என தூண்கள் தெரிந்தன எனின், இக்காணியை சுற்றிவர எத்தனை தூண்கள் காணப்படும்?




08) 0.2 + 0.09 + 0.3 = ..............................................................

09) இங்கு ஒவ்வொரு சிறிய பெட்டியையும் சதுரம் எனக்கொள்க. இதன் சுற்றளவு என்ன?



10) 3/4 பங்கிற்கு நிறம் தீட்டுக.



15. விலைப்பட்டியலை அடிப்படையாகக்கொண்டு விடையளிக்குக.

| | | |
|---|---|---|
| செத்தல் மிளகாய் | 1kg | 120.00 |
| உருளைக்கிழங்கு | 1kg | 080.00 |
| பருப்பு | 250g | 060.00 |
| சீனி | 1/2kg | 035.00 |
| நெத்தலி | 3/4kg | 135.00 |
| தேங்காய் | 3 | 045.00 |

1) நெத்தலி 1kg, உருளைக்கிழங்கு 100g, வாங்கிய சுல்தான் எவ்வளவு பணத்தை கடைக்காரனுக்குக் கொடுக்கவேண்டும்?
..............................................................................
..............................................................................
2) 4 தேங்காய்களும், 125g சீனியும் வாங்கிய ஷாமிலா 100 ரூபாவை கடைக்காரனிடம் கொடுத்தால் எவ்வளவு மீதியாகப் பெறுவாள்?
..............................................................................
3) சீனி 1250g, பருப்பு 1,750g, உருளைக்கிழங்கு 2kg, வாங்கிய ஆயிஸா கடைக்காரனிடம் ஒளி ஊடுருவும் காசு தாள்கள் இரண்டும், 50 ரூபா தாள் ஒன்றும் கொடுத்தாள் எனின், இன்னும் எவ்வளவு தொகையை கடைக்காரனுக்குக் கொடுக்கவேண்டும்?
..............................................................................

16. ''நீரைச் சிக்கனமாக பயன்படுத்துவோம்''
என்ற கருப்பொருளில் 4 சொற்களுக்கு குறையாத சரியான எழுவாய், பயனிலைத் தொடர்பு அமைந்த கருத்துள்ள 6 வாக்கியங்கள் எழுதுக.
1) ..............................................................................
..............................................................................
2) ..............................................................................
..............................................................................
3) ..............................................................................
..............................................................................
4) ..............................................................................
..............................................................................
5) ..............................................................................
..............................................................................
6) ..............................................................................
..............................................................................

-நிறைவுற்றது-

மாணவர்களின் இவ்வினாத்தாள் தொடர்பான தெளிவின்மைகளை நிவர்த்தி செய்ய எமது கல்விச்சுடர் ஆசிரியர் **யு.எல்.எம்.சாஜித்** *(அம்பாறை)* தொ.இ- 0779597407 அவர்களை தொடர்புகொண்டு விளக்கங்களைப் பெறமுடியும்.

## கடந்த 12.08.2009 உதயன் நாளிதழில் வெளியான விசேட புலமைப்பரிசில் பரீட்சை வெளியீடு 02 இன் விடைகள்

### வினாத்தாள்-I

01 - 2, 02 - 3, 03 - 3, 04 - 3, 05 - 3, 06 - 2, 07 - 3, 08 - 1, 09 - 3, 10 - 3, 11 - 1, 12 - 3, 13 - 3, 14 - 2, 15 - 1, 16 - 3, 17 - 2, 18 - 2, 19 - 2, 20 - 1, 21- B, 22 - à, 23 - A, 24 - A, 25 - B, 26 - 3, 27 - 1, 28 - 2, 29 - 1, 30 - 1, 31 - 2, 32 - 2, 33 - 4, 34 - 2, 35 - 3, 36 - 1, 37 - 3, 38 - 1, 39 - 2, 40 - 1

### வினாத்தாள்-II

01. 01 - ஈடில் எயிப்டிஐ, எல்போ, பிக்டல், 02 - கடும் காய்ச்சல், தலைவலி, வாந்தி, உடல்வலி, வயிற்றுளைச்சல், 03 - தண்ணீர் தேங்கி நிற்கும் பாத்திரங்கள், சட்டிபானைத்துண்டுகள், 04 - தயிர்ச்சட்டி, 05 - மனிதன், 06 - வருத்தம்/ பிணி, 07 - நோவு, 08 - பிரிவு, 09 - மேனி, 10 - சுகம்,11 - விடுதலை, 12 - உண்டாகின்றது, 13 - டெங்குக்காய்ச்சல், 14 - 212 பேர், 15 - சுத்தமாகப் பேண வேண்டும்.
02. 1 - நாம் எப்பொழுதும் உண்மை பேச வேண்டும், 2 - சத்துள்ள உணவுகளை உண்பதால் நோய்கள் தொற்றாது.
03. பொருத்தமான கருத்துள்ள வாக்கியங்கள்.
04. 1 - இறைவனை, 2 - வரலாறு, 3 - சுத்தமாக.
05. 1 - கடவுள் உன்னை ஆசிர்வதிப்பார், 2 - எத்தனை, 3 - என்ன நிறம்?
06. 1 - தங்கை பால் குடியுங்க, 2 - நன்றி அண்ணா.
07. 1 - 1, 2 - 1, 3 - 1, 4 - 1, 5 - 1, 6 - 1, 7 - 4, 8 - 1, 9 - 1, 10 - 2
08. A - எல்லே, B - கால் பந்து, C - கிரிக்கெட், D - வலைப்பந்து
09. 1 - A, 2 - D, 3 -B , 4 - C
10. 1 - 40 ரூபா, 2 - 450 ரூபா, 3 - 176 ரூபா, 4 - 80 ரூபா, 5 - 1200 ரூபா
11. 1 - தபாற்கந்தோர், 2 - தபாற்கந்தோர், 3 - மாவட்டச் செயலகம், 4 - தபாற்கந்தோர் 5 - வைத்தியசாலை, 6 - மாவட்ட செயலகம்.
12. A - ஆணி, B - செப்புக்கம்பி, C - மின்கலம், D - குண்டூசி, A - மின்குமிழ், B - மின்கலம் C - செப்புக்கம்பி.
13. 1 - 20 ரூபா, 2 - 8200cm, 3 - 2+2/8 = 4/8, 4 - 44m, 5 - 60 ரூபா
14. A - இலங்கைப் பெற்றோலிய கூட்டுத்தாபனம், B - இலங்கை மின்சார சபை, C - இலங்கை ரெலிக்கொம், D - இலங்கை மக்கள் வங்கி
15. பொருத்தமான கருத்துள்ள ஆறு வாக்கியங்கள். (எழுவாய், பயனிலை,செயப்படுபொருள்)

மாணவர்களின் இவ்விடைகள் தொடர்பான தெளிவின்மைகளை நிவர்த்தி செய்ய எமது கல்விச்சுடர் ஆசிரியர்கள் **எஸ்.கபிலன் (0779984929), எஸ்.எம்.எம்.சஜீர் (0714904682)** ஆகியோரைத் தொடர்பு கொண்டு விளக்கங்களைப் பெறமுடியும்.

## கல்விச் சாலைகளில் நிகழ்ந்தவை......



பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையின் மெதடிஸ்த தினமும் அதிபர்கள் பெயர்ப்பலகை திரை நீக்கமும் அண்மையில் இடம்பெற்றன.

இளைப்பாறிய அதிபர் திருமதி எம்.தவரட்ணம் மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பிப்பதையும் அதிபர் திருமதி எஸ்.சுந்தரேசன், இலங்கை மெதடிஸ்த திருச்சபை கட்டைவேலி குருமுதல்வர் அருட்திரு. எஸ்.அருள்நாதன் அடிகளார் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



''பெரியபுராணம் காட்டும் வாழ்வியல்'' என்ற கருப்பொருளில் அமைந்த கருத்தரங்கின் 5ஆவது அமர்வு ஆரியகுளம் புதிய உயர்கல்லூரி பிரதான மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

கருத்தரங்கை நீர்வைமணி கு.தியாகராசாக் குருக்கள் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதையும் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் தலைமையுரையாற்றுவதையும் விரிவுரையாளர்கள் திருமதி அருள்நங்கை சண்முகநாதன், செல்வஅம்பிகை நடராஜா, கலாநிதி தி.வேல்நம்பி ஆகியோர் உரை நிகழ்த்துவதையும் கருத்தரங்கில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்: அச்சுவேலிச் செய்தியாளர்)

# இலங்கை மீது யுத்தக் குற்ற விசாரணைக்கு பிரிட்டன் தொடர்ந்து வலியுறுத்த வேண்டும்

## அந்நாட்டு வெளிவிவகாரக் குழு வேண்டுகோள்

கொழும்பு, ஓக.12

இலங்கையில் சமீபத்தைய மோதல்களின்போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் குறித்த சர்வதேச யுத்தக் குற்ற விசாரணைக்கு பிரிட்டன் தொடர்ந்தும் அழுத்தம் கொடுக்கவேண்டும் என அந்த நாட்டின் பொதுச் சபையின் வெளிவிவகாரக் குழு கேட்டுக் கொண்டுள்ளது.

''இவ்வாறானதொரு விசாரணை இடம்பெற வேண்டுமென்ற கோரிக்கையை ஐ.நாவின் மனித உரிமைக் கவுன்ஸில் நிராகரித்துள்ளமை கவலைக்குரியது; அதன் நம்பகத்தன்மையை பாதித்துள்ளது'' என்று வெளிவிவகார குழுவின் மனித உரிமைகள் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

பிரிட்டனின் வெளிவிவகார அலுவலகம் தனது அடுத்த வருடத்திற்கான மனித உரிமைகள் அறிக்கையில் இலங்கையை கவனத்துக்குரிய நாடாக குறிப்பிட்டுள்ளதை அந்த நாட்டில் சமீபத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் நியாயப்படுத்துகின்றன. பிரிட்டனின் வெளிவிவகார அலுவலகத்தின் இம்முடிவு வரவேற்கத்தக்கது.

மே 27 ஆம் திகதி ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இடம்பெற்ற கவலைக்குரிய் வாக்களிப்பிற்கு அப்பாலும் இலங்கையில் இரு தரப்பாலும் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீற ல்கள் குறித்து விசாரிப்பதற்கு சர்வதேச விசாரணைக்குழு ஒன்றை அமைக்க வேண்டும் என பிரிட்டிஷ் அரசு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

சட்டத்தின் பிடியிலிருந்து விலக்களிப்படும் கலாசாரத்திற்குத் தீர்வு காணுமாறு இலங்கை அரசை ஊக்குவிப்பதற்குப் பிரிட்டிஷ் அரசு தனது செல்வாக்கைப் பயன்படுத்த வேண்டும்.

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரணைகள் மேற்கொள்ளப்படவேண்டுமென்று கோரிக்கை விடுத்து சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணை நிராகரிக்கப்பட்டமை கவலைக்குரிய விடயமாகும்.

பாதுகாப்புச் சபையின் நம்பகத்தன்மையை இது பாதித்துள்ளது.

உள்நாட்டு அரசியல் மோதலில் சம்பந்தப்பட்ட தரப்புகளால் இழைக்கப்பட்ட குறிப்பிடத்தக்க மனித உரிமை மீறல்களை வெறுமனே குறிப்பிட்ட அரசின் உள் விவகாரம் எனக் கருதக்கூடாது என்ற கருத்தை பிரிட்டிஷ் அரசு தொடர்ந்தும் வலியுறுத்தவேண்டும். பாரிய மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றதாக குற்றஞ்சாட்டப்படும் சூழ்நிலைகளில் அது குறித்து ஆழ்ந்த கவலை தெரிவிப்பதற்கும்- பொருத்தமான தருணத்தில் விசாரணைகளை ஆரம்பிப்பதற்கும் சர்வதேச சமூகத்திற்கு உரிமையும், கடப்பாடும் உள்ளது என நாங்கள் முடி[illegible] எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

## யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)
## திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்
## பதவி வெற்றிடம்

எமது சங்கத்தில் பின்வரும் நிரந்தர பதவிக்கு விண்ணப்பங்கள் உள்வாரியாகவும் வெளிவாரியாகவும் கோரப்படுகின்றன. விண்ணப்பிக்க விரும்புபவர்கள் எமது சங்கத்தினால் வழங்கப்படும் விண்ணப்பப்படிவத்தை அலுவலக வேலைநாள்களில் ரூபா 10/= செலுத்திப் பெற்றுப் பூர்த்தி செய்து 28.08.2009ஆம் திகதி பிற்பகல் 4 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக '**பொதுமுகாமையாளர், யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்**' என்ற முகவரிக்குப் பதிவுத்தபால் மூலமாகவோ நேரடியாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் இடதுபக்க மேல்மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்.

**1.பதவி: கணக்காளர் (நிரந்தரம்)**

பதவி இல: 165/88 இன் படி சம்பள குறி இல: 104/08

சம்பளத்திட்டம்: 66/06 இன் படி 11200-140X10-150X10-14100

அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்:

அ) கூட்டுறவுச் சங்க ஊழியர் 9ஆம் சம்பளத் திட்டத்தில் கணக்காளர்/ உள்ளகக் கணக்குப் பரிசோதகர் பதவியொன்றில் மூன்று (3) வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுச் சங்க ஊழியர் 10ஆம் சம்பளத் திட்டத்தில் கணக்காளர்/ உள்ளகக் கணக்குப் பரிசோதகர் பதவியொன்றில் ஆறு (6) வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

ஆ) பட்டயம் பெற்ற கணக்காளர் நிறுவனத்தின் தகுதிச்சான்றிதழ் பரீட்சை அல்லது ஆகுசெலவு முகாமை கணக்காளர் நிறுவன தேர்ச்சி சித்தி கட்டம் 1 அல்லது இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரி கணக்கியல் டிப்ளோமா/ அல்லது சமமான தகைமைகளுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்காளர்/ உள்ளகக் கணக்குப் பரிசோதகர் பதவியொன்றில் இரண்டு (2) வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

**பொது நிபந்தனைகள்:**

1. வயது: 28.08.2009ஆம் திகதி 18 வயதுக்குக் குறையாதவர்களாயும் 45 வயதுக்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும்.
2. யாழ்.மாவட்டத்தில் இரண்டு வருடங்களுக்கு மேலாக வசித்தமையை உறுதிப்படுத்துவதற்கு சான்றிதழ்கள் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு பிரமாணங்களுக்கு அமைவாக நிர்வாகத்தினால் விதிக்கப்படும் பிணையைச் செலுத்துதல் வேண்டும்.
4. ஆள்சேர்ப்பு செய்யப்படுபவர்கள் இரண்டு வருட கால தகுதிகாண் அடிப்படையில் பதவியில் அமர்த்தப்படுவர்.
5. கல்வித்தகைமைகள், அனுபவம், வயது, வதிவிடத்தை உறுதிப்படுத்துதல், நற்சான்றிதழ், தேசிய அடையாள அட்டை என்பவற்றின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். இதற்கமையாத விண்ணப்பங்களும் சரிய[illegible]ப் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்ப[illegible]ம்.
6. தற்போது கூட்டுறவுச் சேவையில் உள்ளவர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது என்பதுடன் அவர்கள் பதவிகளுக்காக விண்ணப்பிக்கும் போது தமது விண்ணப்பங்களைச் சம்பந்தப்பட்ட சங்கத்தினூடாக அனுப்புதல் வேண்டும். இத்தகைய ஊழியர்கள் நேரடியாக விண்ணப்பங்களை அனுப்பினால் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தெரிவு செய்யப்பட்ட பின்னர் அது வெளிப்படுமிடத்து நியமனத்தை இல்லாதொழிக்கப்படும்.
7. விண்ணப்பத்தில் காட்டப்படும் தகவல்களும், இணைப்புகளும் உண்மையானதும், செம்மையானதுமென உறுதிப்படுத்துவதோடு ஏதேனுமொரு சந்தர்ப்பத்தில் இதில் ஏதேனுமொன்று பிழையானதெனவோ அல்லது பொய்யானதெனவோ காணப்படுமிடத்து நஷ்டஈடு பெறாது உடனடியாகப் பதவி நீக்கம் செய்யப்படுவீர்கள் என்பதை தாங்கள் அறிந்து கொள்ளவேண்டும்.

13.08.2009 (சி/560286) **பொதுமுகாமையாளர்.**

## 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| அன்னை மடியில் | | இறைவன் அடியில் |
|---|---|---|
| 24 | | 01 |
| ★ | | ★ |
| 11 | | 08 |
| ★ | | ★ |
| 1952 | | 2002 |



### அமரர் சின்னப்பு நாகேந்திரன் (நடராசா)

திதி: (13.08.2009)

அன்பின் ஊற்றாய் பாசத்தின் உறைவிடமாய்
பார்போற்ற வாழ்ந்த தெய்வமே!
காலனவன் கையில் அகப்பட்டு ஆண்டேழு ஆனதுவோ!
இன்பமெனும் முத்தெடுத்து இதயமெனும் கோயில்கட்டி
பார்போற்ற வாழ்ந்த அன்புக் குலவிளக்கே! - நீர்
எம்மை விட்டுப் பிரிந்தது விதியோ?
ஆண்டுகள் பல கோடி கடப்பினும்
இதயத்தின் கருவூலத்தில் என்றும் வாழ்வீர்

45/5, எச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணம்.

என்றும் நினைவுடன்: (87783) நா.ரஞ்சித்குமார் (மகன்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதனை அரங்கில் பெண்கள்

'மாதர் தம்மை இழிவு செய்யும் மடைமையை கொளுத்துவோம்' என்றார் பாரதி. ஆனால் 'பெண்புத்தி பின்புத்தி' என்ற பழமொழியைக் கொண்டு முழுப்பெண் சமூகத்தையும் இழிவு செய்பவரும் உண்டு. 'அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு' என்கின்ற வாக்கியம் வேதவாக்கியமாக முழுங்கிய நேரம் அது. அடிமை என்ற இரத்தத்திலே ஊறிய நிலையில் பெண்ணினம் என்கின்ற பயிர் வாடிய நேரத்தில் பாரதியின் கருத்துக்கள் புது மழையில் பெண்ணினம் என்ற தளிர் துளிர்விடத் தொடங்கின.

பெண்கள் எந்தவொரு வேலையிலும் ஆண்களில் சளைத்தவர்கள் அல்ல என்பதைப் பல்வேறு செயல்களிலும் உணர்த்தி இருக்கிறார்கள். இனியும் பெண்களை அடிமையாக எண்ணுவதில் நியாயமில்லை. ''எட்டுமறிவினில் ஆணுக்கிங்கே பெண் இளைப்பில்லை காண்'' என்கின்ற பாரதியின் வாக்கு மெய்யாகிக் கொண்டு வருகிறது. பல துறைகளிலும் நம் பெண்ணினம் நுழைந்து திறம்பட நிர்வகித்து முதன்மை பெற்று வருகிறது.

சங்ககாலம் தொட்டு இன்றுவரை பெண்களின் புகழ் கூறப்படுகின்றது. கவிக்குயில் ஔவையார் உலகப் புகழ் பெற்ற மங்கையாவார். இவ்வாறாகச் சைவத்தை வளர்த்த பெருமை காரைக்கால் அம்மையையே சாரும். பெருமைமிகு பெண்ணின் சுடர் சங்க காலத்தில் ஒளிவீசியது. 1975ஆம் ஆண்டு உலகப் பெண்கள் ஆண்டாகக் கொண்டாடப்பட்டதை மறக்கமுடியாது.

இவ்வாறாக அரசியல், விஞ்ஞானம், விண்வெளி போன்றவற்றுள் பெண்களின் பங்கு அதிகரித்து வருகிறது. இவ்வாறு சாதனை படைக்கும் பெண்கள் சக்தி வடிவானவள். அன்பு, அடக்கம், சகிப்புத் தன்மை, தியாகம், தாய்மை போன்ற நற்குணங்களால் மிளிரும் பெண்மை பேராற்றல் மிக்கது. இவ்வேளையில் வரதட்சணை கொடுமையும், பெண் கொலைகளும் உலகிற்குத் தலைகுனிவு அல்லவா? இல்லற வாழ்வில் பெண்ணை அடிமையாக நினைக்கும் ஆண்கள் மேடையில் என்னதான் முழங்கினாலும் சரியாகுமா? எனவே பெண்களை இழிவாகக் கருதாது அவர்களது சாதனைகளைப் போற்றவேண்டும்.

''அச்சப்பட்டு நாணி உங்கள் திறமைகளை வெளிக்கொணர மறுக்காதீர்கள் பெண்களே...'' என்ற பாரதியின் கூற்றிற்கிணங்க பெண்களும் ஆணிற்கு நிகராக திறமைகளை வெளிப்படுத்தவேண்டும். பெண்ணினம் வெல்லவேண்டும்.

பெண்ணின் ஆற்றலை மதியுங்கள்!
பெண்ணின் பெருமையை உணருங்கள்!
பெண்மை வெல்க!

வி.கீர்த்தனா
யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.

# விண்வெளி ஆய்வுகள்

நவீன உலகத்தில் விண்வெளி ஆய்வுகள் மனித முன்னேற்றப் பாதையில் பரிணாம வளர்ச்சி வாய்ந்த ஒன்றாகக் கருதப்படுகிறது. நவீன விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளே விண்வெளி ஆய்வுக்குப் பெரிதும் துணைபுரிகின்றன எனலாம். காலத்திற்குக் காலம் பல்வேறுபட்ட விண்வெளி விஞ்ஞானிகளால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளும், விஞ்ஞானத் தொழில்நுட்ப வளர்ச்சியும், தொடர்பாடல் விருத்தியும் விண்வெளி ஆய்வுகள் பலமடையக் காரணம் என்றால் அது மிகையாகாது.

ஆதிகாலத்தில் வேட்டையாடித் திரிந்த மனிதன் படிப்படியாக முன்னேறிவரும் கால் ஆகாயத்தை அண்ணார்ந்து பார்த்தது முதல் ஆரம்பமாகியது விண்வெளி ஆய்வுகள் எனலாம். இவ்வாறாகத் தற்கால வானியலின் தந்தை எனப் போற்றப்படும் நிக்கலஸ் கொப்பனிக்கஸ் சூரியன் பற்றியும் அதனைச் சுற்றியுள்ள கோள்கள் பற்றியும் உலகம் அறியும்படியும் செய்தார். இவரின் கருத்துப்படி புவியானது பிரபஞ்சத்தின் மையமெனவும் அது தட்டை வடிவானது எனவும் ஆரம்பகாலத்தில் நிலவிய கருத்தை மறுத்து புவிகோள வடிவமானது எனக் கூறினார்.

இவ்விஞ்ஞானிக்கு அடுத்தபடியாக ஜேர்மனியைச் சேர்ந்த மொஷனஸ் கெப்லர் விண்வெளியில் உள்ள கோள்கள் சூரியனை நீள்வட்டமாகச் சுற்றி வருகின்றன என்று கண்டுபிடித்தார். அடுத்தது தொலைக்காட்சியைக் கண்டுபிடித்த விஞ்ஞானியான கலிலியோ கலிலி சந்திரனில் உள்ள குழிகள், மலைகள் ஆகியவற்றையும் சூரியனில் உள்ள கறைத்தடம் பற்றியும் வியாழனின் உபகோள்கள் பற்றியும் ஆய்வதற்கு வழிவகுத்தார்.

மேற்பட்ட விஞ்ஞானிகள் ஐரோப்பாவின் மறுமலர்ச்சிக் காலத்தில் வாழ்ந்தார்கள். ஆனால் தற்போதைய விஞ்ஞானிகள் தொழில்நுட்பத்துடன் கூடிய விண்கலன்கள், செய்மதிகள், ரொக்கெட்டுகள் போன்றவற்றால் பரந்து நிற்கும் வானவெளியில் உள்ள அனைத்தையும் ஆய்வு செய்கின்றனர். மனிதன் சென்று ஆய்வுகளை மேற்கொள்ள முடியாத இடங்களுக்கு இயந்திர மனிதனான ''றோபோ'' வை அனுப்பியும் இன்னும் இன்னும் எத்தனையோ கலங்களை ஏவியும் ஆய்வுகளை மேற்கொள்கின்றனர்.

இந்த வகையில் உலகின் வல்லரசு நாடுகளான ஐக்கிய அமெரிக்காவும், ரஷ்யாவும் இன்னும் அபிவிருத்தி அடைந்த நாடுகள் சிலவும் பெருந்தொகைப் படையாகக் காணப்படும் ஓசோன் படையைத் துளையாக்குவதால் அத்துளையினூடாக வரும் ஊதா நிறக் கதிர்கள் பூமியை அடைந்து பல தீய விளைவுகளை ஏற்படுத்துமென அறிவிக்கப்பட்டுள்ளமை மற்றுமொரு நன்மையாகக் கொள்ளலாம். இதனால் ஏற்படும் தோல் புற்றுநோய் மற்றும் பல நோய்களை வருமுன் காப்போம் என்பதற்கிணங்க ஆராய்ச்சிகளின் மூலம் பெறப்படும் உண்மைகளை ஏற்று அதன்படி ஒழுகுவோமானால் பூமியையும் அதில் வாழும் மக்கள் சமுத்திரத்தையும் பல்லாண்டு காலம் நோய் நொடியின்றி வாழச் செய்யலாம். இவ்வாறான விண்வெளி ஆய்வுகள் மனித வாழ்வினை முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்வதுடன் மனிதனைப் பல்வேறு வகையாகச் சிந்திக்க வைக்கின்றது.

தற்கால விண்வெளி ஆய்வுகள் பல வியத்தகு உண்மைகளை வெளிக்கொண்டு வந்துள்ளது. இந்த வகையில் புவியில் விழும் விண்கற்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் பூமியுடன் மோதி வருகின்ற குறுங்கோள்கள், உடுக்கள் மற்றும் வால்வெள்ளிகள் என்பவற்றைக் குறிப்பாக நோக்கலாம். வானில் எரிந்து விழுகின்ற விண்கற்களே ஆகாயக் கற்கள் எனப்படுகிறது. வானவெளியிலே காணப்படுகின்ற பலவகையான விட்டங்களைக் கொண்ட விண்கற்கள் வளிமண்டலத்திற்குப் புகும்போது உராய்வினால் எரிகின்றன. இதனால் பெரும்பாலும் பூமியை வந்தடைவதற்கு முன்னரே எரிந்து அழிந்து விடுகின்றன. ஆனாலும் சில சமயங்களில் சிறியதும் பெரியதுமான சில விண்கற்கள் உலகின் பல பாகங்களிலும் வீழ்ந்து தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன. இவ்வாறாக அமெரிக்காவில் அரிசோனாப் பாலைவனத்தில் வீழ்ந்த விண்கல்லானது 1330 மீற்றர் விட்டமானதாகவும் இருநூறு மீற்றர் ஆழமானதாயும் கிண்ணக்குழியை உருவாக்கியுள்ளது. அதுமட்டுமன்றி அமெரிக்க அரும்பொருள் காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ள ஒரு விண்கல்லானது பியறி என்பவரால் கிறீன்லாந்து தீவில் இருந்து கண்டெடுக்கப்பட்டது. பூமியின் கவசமாகக் காணப்படும் வளிமண்டலமானது ஆகாயக் கற்கள் பூமியை நோக்கிப் பிரவேசிக்கும்போது அவற்றிலே உராய்வினை ஏற்படுத்தி அழித்துவிடுகின்றது.

ஆனால் வளிமண்டலங்கள் இல்லாது துணைக்கோளுடன் மேற்பரப்புக்களை நேரடியாகவே தாக்குகின்றன. விண்கற்கள் உதாரணமாக நமக்குத் தெரியும் சந்திரனின் ஒரு பாகத்திலே முப்பதாயிரம் கிண்ணக் குழிகளை ஆதாரமாகக் கொண்டு 1948ஆம் ஆண்டில் அறிஞர் பால்டின் என்பவர் பின்வருமாறு கருத்தைக் கூறுகிறார். ஒரு விண்கல் சந்திரத்தரையில் மோதும்போது அப்பகுதி ஆவியாக மாற்றமடைந்து அதன் காக்கும் திறனுக்கேற்ப அதனுள் அடங்கி நிற்கும் ஆற்றல் அது தடுத்து நிறுத்தும் வெப்ப ஆற்றலாக மாற்றப்பட்டு தாக்கும் மிகப்பெரிய விட்டத்தைக் கொண்ட குழிகளை ஏற்படுத்துமெனத் தெரிவிக்கின்றார். பூமியைத் தாக்கும் மிகப்பெரிய விண்கல்லானது 1908இல் சைபீரியாவின் தங்குஸ்தா என்ற இடத்தில் பெரும் அழிவை ஏற்படுத்தி புவிநடுக்க அலைகள் மூவாயிரம் கிலோமீற்றருக்கு அப்பாலும் பதிவாகியுள்ளதெனில் அதன் அழிவை அளவிட முடியாதெனலாம்.

[தொடரும்]

சி.தனுறிக்கா
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி,
யாழ்ப்பாணம்.



சிறுமியர் நாங்கள்
மண்ணில்
சேர்ந்து மகிழ்ந்து
கூடுவோம்

குறும்புகள் பலவும்
செய்து
குலவி இன்பம்
காணுவோம்

எண்ணும் எழுத்தும்
கற்போம்
அதனை மனதில்
கொள்வோம்.

சி.அகல்யா.

# கேள்விக்கு என்ன பதில்? -35

செத்தும் கொடை கொடுத்தவர் யார்?
(சரியான விடையை 20.08.2009இற்கு முன்னர் அனுப்பிவைக்கவும்)

## கேள்விக்கு என்ன பதில்? -33இன் சரியான விடை

A, B, C ஆகிய மூன்று பூனைகளும் வட்டவடிவில் தமது நகர்வினை மேற்கொண்டிருந்தன. இதனால் ஒவ்வொரு பூனைக் குப் பின்னாலும் இரண்டு பூனைகள் வருவது போல இருக்கும்.

## கேள்விக்கு என்ன பதில்? - 33- பரிசு பெறுவோர்

| | |
|---|---|
| முதலாம் பரிசு | - எம்.சபிதா, 2011 கலைப்பிரிவு, மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி. |
| இரண்டாம் பரிசு | - செ.ஜெயராஜினி, அருளகம் பெண்கள் இல்லம், மருதனார்மடம். |
| மூன்றாம் பரிசு | - எஸ்.நிரோஜா, வாரிவளவு, காரைநகர். |

## பாராட்டுப் பெறுவோர்:

01) பி.சிவறாபி, வீரபத்திர கோயிலடி, கச்சாய் றோட், சாவகச்சேரி.
02) இ.கி.அருண்பிரசாத், 639, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்.
03) வி.சங்கீதன், ஆர்.டீ.எஸ். லேன், மல்லாகம்.
04) த.கோகிலநாத், குருநகர் நலன்புரி நிலையம், குருநகர்.
05) உ.தக்சாயணி ''கணேசபவனம்'', பொன்னாலை வீதி, கட்டுடை.

## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும், பிரச்சினைகள் பற்றிப் பேசவும், தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இப்பகுதிக்கான உங்கள் படைப்புகளையும், விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-........................................
முகவரி :-........................................
:-........................................
........................ ........................
திகதி கையொப்பம்

'இளவல்கள் வட்டம்',
'உதயன்',
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

# இந்த வாரம் வரலாற்றில்

**ஒகஸ்ட் 07**



எக்ஸ் புளோரர் - 6 என்ற செய்மதி 1959ஆம் ஆண்டு 7ஆம் திகதி பூமியைப் புகைப் படம் எடுத்தது. விண்வெளியில் இருந்து எடுக்கப்பட்ட பூமியின் முதல் புகைப்படம் இதுவென்று கூறப்படுகின்றது.

**ஒகஸ்ட் 08**

1940ஆம் ஆண்டு ஒகஸ்ட் 8ஆம் திகதி 'பிரிட்டனின் மோதல்' என்ற பெயரில் பெரும் விமானப் போரினை இங்கிலாந்து நடத்தியது. இதன்மூலம் பிரிட்டனைக் கைப்பற்றும் ஜேர்மனியின் கனவு கலைந்தது.



**ஒகஸ்ட் 09**



கடற்பயணங்களில் நிகழும் சாகசங்களைக் கதைகளாக எழுதிப் புகழ்பெற்றவரான பிரடெரிக் மெரியாட் என்பவர் 1848 ...

**ஒகஸ்ட் 10**

1675ஆம் ஆண்டு ஒகஸ்ட் 10ஆம் திகதி கிரீன் விச் வான ஆராய்ச்சி நிலையம் நிறுவப் பட்டது.



**ஒகஸ்ட் 11**



லண்டன் நகரில் இருந்து 25மைல் தொலைவில் உள்ள கிராமம் ஒஸ்காட். இங்கு வருடந்தோறும் நடைபெறும் குதிரைப் பந்தயம் உலகப் புகழ் பெற்றது. 1711ஆம் ஆண்டு ஒகஸ்ட் 11ஆம் திகதிதான் இங்கு முதலாவது குதிரைப்பந்தயம் நடைபெற்றது.

**ஒகஸ்ட் 12**

செய்தித் தொடர்பை மேம்படுத்துவதற்காக எக்கோ - 1 என்ற செய்மதியை 1960ஆம் ஆண்டு ஒகஸ்ட் 12இல் அமெரிக்கா விண்ணில் செலுத்தியது.



**ஒகஸ்ட் 15**



விளக்கேந்திய பெருமாட்டி என்று புகழப்படுபவரும் மருத்துவத் தாதிகளின் முன்னோடியுமான புளோரன்ஸ் நைற்றிங்கேல் 1910ஆம் ஆண்டு ஒகஸ்ட் 13இல் காலமானார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





வலி.தென்மேற்கு கால் நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் அண்மையில் சண்டிலிப்பாயில் பால்பொருள்கள் உற்பத்தி நிலையத்தைத் திறந்து வைத்தது. சண்டிலிப்பாய் கால்நடை வைத்திய அதிகாரி செல்வி க.மீனயோகினி மங்கள விளக்கேற்றுவதையும் தலைவர் தி.இராஜகுமார் அருகில் நிற்பதையும் பால்பொருள் உற்பத்தி நிலையத்தை 'லாண்ட் ஓ லேக்' நிறுவன இணைப்பாளர் என்.இராஜகுரு நாடா வெட்டித் திறந்து வைப்பதையும் படங்களில் காணலாம். (130)

# அடிப்படை வசதிகள் எதுவுமின்றி 50 வருடங்களாக அரச காணியில் வசிக்கும் எமக்கு உறுதி பெற்றுத் தர வேண்டும்

## வலி.மேற்கு பிரதேச சபைச் செயலாளரிடம் கோரிக்கை

அடிப்படை வசதிகளின்றி கடந்த 50 வருடங்களுக்கு மேலாக அரச காணியில் வாழ்ந்து வரும் எமக்கு நிரந்தரமாகக் குடியேறுவதற்கான உறுதிகளை பெற்றுத் தரவேண்டும்.

இவ்வாறு கோரிக்கை விடப்பட்டு ஊரத்தி - அராலி மத்தி செந்தமிழ் சனசமூக தலைவர் மா. யோகராசா, செயலாளர் செ. ரூபன் ஆகியோர் கையெழுத்திட்ட கடிதம் வலி. மேற்குப் பிரதேச சபை செயலாளர் சு. புத்தி சிகாமணியிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

ஊரத்தி அரச காணி குடியிருப்பாளர்களின் பிரச்சினை எனும் தலைப்பில் எழுதப்பட்ட கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

அரச காணியில் சுமார் 32 குடும்பங்கள் கடந்த 50 வருடங்களாக எதுவித அடிப்படை வசதிகளும் இன்றி வாழ்ந்து வருகின்றன.

இது குறித்து வலி. மேற்கு பிரதேச செயலகம், வலி. மேற்கு பிரதேசசபை, அரச அதிபர், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஆகியோரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்தது. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்திற்கும் கொண்டு வரப்பட்டுள்ளது. இதனையடுத்து கடந்த மார்ச் மாதம் நடத்திய கிராமங்களின் தேவை தொடர்பான மாநாட்டிலும் ஆராயப்பட்டு நடவடிக்கை எடுப்பதாக உறுதியளிக்கப்பட்டது.

தற்போது வடக்கின் வசந்தம் அபிவிருத்தி பல கிராமங்களிலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இத்திட்டத்தின் கீழ் ஊரத்தி- அராலி மக்களும் வீடு, மலசல கூடம், மின்சாரம், தபாலகம், முன்பள்ளி, கிராம சங்கங்கள் போன்ற வசதிகளைப் பெறுவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்- என்றுள்ளது. (203)

# ஒரு மலசலகூடத்தைக் கட்டும் அபிவிருத்தியைக் கூட நாணய நிதியக் கடன் மூலம் அரசால் செய்ய முடியாது

## நிபந்தனைகள் அப்படிப்பட்டவை என்கிறது ஐக்கிய தேசியக் கட்சி

கொழும்பு, ஓக. 13

சர்வதேச நாணய நிதியம் விதித்துள்ள நிபந்தனைகள் காரணமாக அதனிடமிருந்து பெற்ற கடனைப் பயன்படுத்தி அரசால் ஒரு மலசல கூடத்தை அமைக் கும் அபிவிருத்தியைக் கூட முன்னெடுக்க முடியாது என ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

இரகசிய உடன்படிக்கைளுக்குப் பெயர் பெற்றுள்ள இந்த அரசு, மக்கள் மீது பளுவைச் சுமத்தாமல், நாணய நிதியத்தின் நிபந்தனைகளை எவ்வாறு நிறைவேற்றப் போகின்றது என்பதை நாடாளு மன்றத்தில் தெளிவுபடுத்த வேண்டும் என்றும் அக்கட்சி கோரியுள்ளது.

கொழும்பில் கடந்தவாரம் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல அங்கு மேலும் குறிப்பிட்டவை வருமாறு:-

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கிடைத்த கடனுதவி குறித்து அரசு வெளிப்படுத்தும் ஆரவாரக் கூச்சல்கள் சிறுபிள்ளைத்தனமானவை.

இது, நாட்டிற்கோ அல்லது மக்களுக்கோ கிடைத்த வெற்றியல்ல.

அரசு தற்போதுள்ள வெளிநாட்டுக் கடன்களை அடைப்பதற்காக, சகலவிதமான நிபந்தனைகளுக்கும் அடிபணிந்து இந்தப் புதிய கடனைப் பெற்றுள்ளது.

ஏற்கனவே துயருறும் மக்களின் நிலையிலிருந்து பார்த்தால் இது மக்களின் துயரங்களை மேலும் அதிகரிக்கும் ஓர் ஏமாற்று நடவடிக்கையாகும்.

2008 செப்ரெம்பரில் வெளிநாட்டு நாணயக் கையிருப்பு 380 கோடி ரூபாவாகக் காணப்பட்டது. இது 2009 மார்ச்சில் 140 கோடி ரூபாவாகக் குறைவடைந்தது. அரசிடம் உரிய முகாமையோ அல்லது பொறுப்புணர்வோ இல்லாதமையே இதற்குக் காரணம்.

அரசுகள், நிதி விடயங்களில் தாறுமாறாக நடக்கும் நிலையைக் கட்டுப்படுத்த, ஐக்கிய தேசியக் கட்சி அரசே முதன்முதலாக நிதிப் பொறுப்புச் சட்டத்தை அறிமுகப் படுத்தியது.

எனினும், இந்த அரசு தனது நிதி முகாமைத்துவத்தையும் தவறுகளையும் மூடி மறைப்பதற்காக அந்தச் சட்டத்தைக் கைவிட்டது.

'ஹெட்ஜிங்' மற்றும் செலுத்த முடியாத கடன்கள் காரணமாக வெளிநாட்டு நாணயக் கையிருப்பு மேலும் குறைவடைந்தது.

சர்வதேச நாணய நிதியம் விதித்துள்ள நிபந்தனைகள் அரசை ஒரு மலசலகூடத்தைக் கட்டும் அபிவிருத்தியை முன்னெடுக்கக்கூட அனுமதிக்கப் போவதில்லை. அரசு மக்களின் நலனுக்கு இக்கடன் தொகையைப் பயன்படுத்த முடியாது - என்றார் அவர். (சி)

# முதலாம் ஆண்டு நன்றி ஆராதனை அழைப்பு



போதகர்

**வண.பேதுருப்பிள்ளை இக்னேஷியஸ் டேவிட்**

"நீதிமான்களின் மரணம் நினைவு கூரப்பட வேண்டியதே"

13.08.2008 இல் கர்த்தருக்குள் நித்திரையடைந்த போதகர் வண. பேதுருப்பிள்ளை இக்னேஷியஸ் டேவிட் அவர்களின் வாழ்க்கைக்காக கர்த்தருக்கு நன்றி கூறும் ஆராதனை இன்று (13.08.2009) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.அப்போஸ்தல சபை, ஈச்சமோட்டை வீதி, சுண்டிக்குளியில் நடைபெறும். அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.

61, குருசோ வீதி, சுண்டுக்குளி.
தொ.பே.: 077 6406910.

(87787) மனைவி ரூத்து குடும்பத்தினரும், அப்போஸ்தல சபை சமூகமும்.

# ஈரவிழிகளுடன் ஐந்தாம் ஆண்டு நினைவுப் பூக்கள் சமர்ப்பணம்



திருமதி

**வீரவாகு தில்லைவனம்**

மண்ணில்: 07.04.1907

விண்ணில்: 07.08.2004

திதி: ஸப்தமி
(13.08.2009)

சந்திரன் இல்லாத வானம் தாமரை இல்லாத பொய்கை
தந்திகள் இல்லாத வீணை மந்திரி இல்லாத வேந்தன்
மதகரி இல்லாத சேனை சுந்தரப் புலவர் இல்லாத தொல்சபை
இவை யாவும் போல "அம்மா" நீங்கள் இல்லாத எம் இல்லம்
பொலிவிழந்து ஐந்தாண்டாச்சே
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

தாவடி தெற்கு,
கொக்குவில். (87743) குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



**ஆறுமுகம் சிறிதரன்**

புத்தூர் கிழக்கைப் பிறப்பிடமாகவும் நீர்வேலி மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் சிறிதரன் நேற்று (12.08.2009) புதன்கிழமை காலமானார்.

அன்னார் ஆறுமுகம்- தவமலர் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற இரத்தினம் மற்றும் இராசேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் வாசுகியின் அன்புக் கணவரும் மதுஜா, மதுரா, தீபனா ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.08.2009) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக சீயாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கரந்தன், நீர்வேலி மேற்கு,
நீர்வேலி. (87800)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

# கண்ணீர் அஞ்சலி

சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் நிறுவுநர்
உயர்திரு. சு.இராஜரட்ணம் அவர்களின் அன்பு மகள்

**செல்வி இராஜரட்ணம் கனகாம்பிகை**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

சைவ வித்தியா விருத்திச் சங்கம்,
கலாசாலை வீதி, திருநெல்வேலி.

பணிப்பாளர் சபை உறுப்பினர்கள்,
பணியாளர்கள், இல்லச்சிறார்கள்.
(சி/560288)


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

1112 நீலம்

வெற்றி இலக்கங்கள்

கும்பம் 04 11 29 49

11-08-2009

ஜக்பொட் பரிசு ரூபா. 10,709,425/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 216,356 | 20/- | 4,327,120/- |
| 2 இலக்கங்கள் | 19,843 | 40/- | 793,720/- |
| 1 இல. + லக்கினம் | 19,691 | 60/- | 1,181,460/- |
| 2 இல. + லக்கினம் | 1,815 | 200/- | 363,000/- |
| 3 இலக்கங்கள் | 525 | 1000/- | 525,000/- |
| 3 இல. + லக்கினம் | 40 | 10,000/- | 400,000/- |
| 4 இலக்கங்கள் | 2 | 200,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 10,709,425/- | - |
| மொத்தம் | | | 7,990,300/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 258,277 | | 8,490,300/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 11,192,700/-

ஆலிந்தயே வாசனாவ

தங்கக்காசு வெற்றியாளர் : ஜயந்த ஆலோகபண்டார மாஹோ
கைத்தொலைபேசி வெற்றியாளர் : பாத்திமா நிஸ்தார் மினுவாங்கொடை

2009 ஆகஸ்ட் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சிவப்பு நிற டிக்கட்டுக்கள் சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| கண்டி | 400407250-7-23 |
| களுத்துறை | 400403982-4-22 |
| நுவரெலியா | 400396125-8-17 |
| கம்பஹா | 400413849-5-12 |
| பதுளை | 400405840-5-37 |

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பீதியில் திக்குமுக்காடுகின்றது இந்தியா; பன்றிக்காய்ச்சல் மரணம் 14 ஆக உயர்வு!



பன்றிக்காய்ச்சலால் பாதிக்கப்பட்ட சென்னைச் சிறுவன் சஞ்சய் மரணமடைந்ததை அடுத்து அவன் படித்த வேளச்சேரியில் உள்ள பாடசாலையின் மாணவர்கள் அனைவருக்கும் நேற்றுமுன்தினம் வைத்திய பரிசோதனை செய்யப்பட்டது. குழந்தைகளை பாடசாலைக்கு அழைத்து வந்த பெற்றோர், பாதுகாப்புக்கு முகமூடி அணிந்து கவலையுடன் காத்திருந்தபோது....

புனே/நாசிக், ஓக. 13

புனே மற்றும் நாசிக் பகுதிகளில் பன்றிக் காய்ச்சலுக்கு மேலும் இருவர் நேற்றுப் பலியானார்கள். இதையடுத்து, பலியானவர்களின் எண்ணிக்கை 14 ஆக உயர்ந்துள்ளது.

இதனால் அவசர நடவடிக்கையாக மாநிலங்களுக்கு மத்திய குழுக்கள் விரைந்துள்ளன. வைத்தியர் ஒருவரும், 29 வயது மதிக்கத்தக்க பெண்மணி ஒருவரும் பன்றிக்காய்ச்சலால் பாதிக்கப்பட்டு நாசிக் மற்றும் புனேயில் பலியாகினர்.

ரூபெஷ் கங்குர்டி (வயது - 38) என்பவர் ஒரு வைத்தியராவார். இவருக்கு கடந்த திங்கட்கிழமை காய்ச்சல் மற்றும் வாந்தி ஏற்பட்டு தனியார் வைத்தியசாலை ஒன்றில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார். இவருடைய ரத்த மாதிரிகள் எடுக்கப்பட்டு புனேயில் உள்ள சோதனை மையத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டன. அந்த சோதனை மையத்தின் அறிக்கையின் படி அவருக்கு பன்றிக்காய்ச்சல் நோய்க்கான அறிகுறிகள் இருப்பது உறுதி செய்யப்பட்டது.

உடனடியாக ரூபெஷ் கங்குர்டி நாசிக் சிவில் வைத்தியசாலை ஒன்றில் மேல் சிகிச்சைக்காக நேற்றுமுன்தினம் இரவு சேர்க்கப்பட்டார். ஆனால் சிகிச்சை பலனின்றி நேற்று அதிகாலை 2.30 மணியளவில் மரணமடைந்தார் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதுபோன்று மகாராஷ்டிரா மாநிலம் கோத்ருட் பகுதியைச் சேர்ந்த ஷ்ராவாணி தேஷ்பாண்டே (வயது - 29) என்பவர் நுரையீரல் பாதிப்பு ஏற்பட்டதால் தனியார் வைத்தியசாலை ஒன்றில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார்.

இவரும் நேற்று அதிகாலை 2.30 மணியளவில் மரணமடைந்தார் என வைத்தியர்கள் தெரிவித்தனர்.

இவர்கள் இருவரையும் சேர்த்து இதுவரை பன்றிக்காய்ச்சல் நோயால் 14 பேர் மரணமடைந்துள்ளனர்.

அகமதாபாத், வடோதரா, தானே, சென்னை மற்றும் திருவனந்தபுரம் ஆகிய நகரங்களில் தலா ஒருவரும், மும்பையில் இருவரும், புனேயில் 7 பேரும் மொத்தம் 14 பேர் இதுவரை பலியானார்கள்.

## பன்றிக்காய்ச்சல் தொற்று காரணமாக அஜித், திரிஷாவின் படப்பிடிப்புகள் ரத்து



சென்னை, ஓக.13

பன்றிக்காய்ச்சல் காரணமாக அஜித் - திரிஷா ஆகிய இருவரின் படப்பிடிப்புகளும் ரத்து செய்யப்பட்டுள்ளன.

உலகம் முழுவதும் பீதியைக் கிளப்பியுள்ள பன்றிக்காய்ச்சல் சினிமா உலகையும் விட்டு வைக்கவில்லை. பன்றிக்காய்ச்சல் பீதி, நடிகர் - நடிகைகள் மத்தியிலும் பரவி இருக்கிறது.

இதன் பாதிப்பு வெளிநாடுகளில் அதிகமாக இருப்பதால், நடிகர் - நடிகைகள் வெளிநாடுகளுக்குப் போகப் பயப்படுகிறார்கள்.

படப்பிடிப்பு நடைபெறும் இடங்களில், வேடிக்கை பார்க்க ரசிகர்கள் கூட்டம் அதிகமாக வருவதால் பாதிக்கப்பட்டவர்களிடம் இருந்து பன்றிக்காய்ச்சல் பரவக்கூடும் என்ற பயம் நடிகர் - நடிகைகள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

அஜித் நடிக்கும் 'அசல்' என்ற படத்தின் படப்பிடிப்பு 45 நாள்களாக மலேசியாவில் நடைபெற்று வந்தது. அங்கிருந்து லண்டன், வாஷிங்ரன் ஆகிய நகரங்களில் படப்பிடிப்பைத் தொடரத் திட்டமிட்டு இருந்தார்கள்.



பன்றிக்காய்ச்சல் பீதி காரணமாக, அந்த படப்பிடிப்பு ரத்து செய்யப்பட்டது. 'அசல்' படக்குழுவினர் அனைவரும் மலேசியாவில் இருந்து சென்னை திரும்பி விட்டார்கள்.

இதேபோல், திரிஷா - கோபிசந்த் நடிக்கும் 'சங்கம்' என்ற தெலுங்கு படப்பிடிப்பு தென் அமெரிக்காவில் நடைபெற இருந்தது. ஆனால், பன்றிக்காய்ச்சல் பயம் காரணமாக இந்த படப்பிடிப்பும் ரத்து செய்யப்பட்டு விட்டது.

இந்தப் பீதி ஓயும் வரை இங்கேயே பாதுகாப்புடன் படப்பிடிப்பு நடத்தலாம் என்ற முடிவுக்கு பெரும்பாலான பட அதிபர்களும், இயக்குநர்களும் வந்திருக்கிறார்கள்.

## பன்றிக்காய்ச்சல் நோய் பரவாமல் தடுக்க தமிழகம் முழுவதும் தீவிர நடவடிக்கை!

### மதுரை, கோவை, நெல்லையில் சோதனை மையங்கள்

சென்னை, ஓக.13

பன்றிக்காய்ச்சல் நோயை உடனடியாக கண்டறிந்து சிகிச்சை அளிக்க வசதியாக, மதுரை, கோவை, திருநெல்வேலியில் பன்றிக்காய்ச்சல் பரிசோதனை மையங்களை உடனடியாக ஆரம்பிக்க முதல்வர் கருணாநிதி உத்தரவிட்டுள்ளார்.

தமிழகத்தில் பன்றிக்காய்ச்சல் பரவாமல் தடுப்பது பற்றியும், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் பற்றியும் ஆலோசிக்க உயர் அதிகாரிகளின் அவசரக் கூட்டத்தை முதல்வர் கருணாநிதி நேற்றுமுன்தினம் காலை கூட்டியிருந்தார்.

கூட்டத்துக்கு பின்னர் தமிழக அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

பன்றிக்காய்ச்சல் பரவாமல் தடுக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து முதல்வர் விவாதித்தார். பன்றிக்காய்ச்சலால் 4 வயதுச் சிறுவன் சஞ்சய் இறந்தமை குறித்து அதிகாரிகளிடம் முதல்வர் விசாரித்தார்.

வெளிநாடுகளில் இருந்து சென்னை, திருச்சி, கோவை விமான நிலையங்களுக்கு வந்த 4,888 விமானங்களில் 7 லட்சத்து 71 ஆயிரத்து 622 பயணிகள் வந்துள்ளனர். சென்னை, தூத்துக்குடி துறைமுகங்களில் சரக்குக் கப்பலில் 6 ஆயிரத்து 981 அதிகாரிகள், பணியாளர்கள் வந்துள்ளனர். அவர்களுக்கு பன்றிக்காய்ச்சலுக்கான பரிசோதனை செய்யப்பட்டது. தமிழகத்தில் இதுவரை 376 பேருக்கு தொண்டைச் சளி மாதிரிகள் பரிசோதனை செய்யப்பட்டன.

அவர்களில் 54 பேருக்கு பன்றிக் காய்ச்சல் உறுதிசெய்யப்பட்டது. அவர்களில் 40 பேர் சிகிச்சைக்குப் பின் வீடு திரும்பியுள்ளனர். மற்ற 14 பேர் அரச வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறுகின்றனர் என்று முதல்வரிடம் அதிகாரிகள் தெரிவித்தனர்.

சென்னையிலும், வேலூரிலும் இப்போது, பன்றிக் காய்ச்சல் பரிசோதனை செய்யப்படுகிறது. மதுரை, கோவை, திருநெல்வேலி ஆகிய நகரங்களிலும் பரிசோதனை மையங்களை ஏற்படுத்த கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது - என்றுள்ளது. (ப)

## "Face book" இல் தனுஷ் பெயரில் மோசடி



சென்னை, ஓக. 13

'பேஸ் புக்' இணையத்தில் தனது பெயரைப் பயன்படுத்தி யாரோ ஒருவர் ரசிகர்களை ஏமாற்றி வருகிறார் என நடிகர் தனுஷ் முறைப்பாடு கூறியுள்ளார்.

பேஸ் புக்கில் தனுஷ் போல தோற்றமுடைய ஒருவரின் புகைப்படம் வெளியாகியுள்ளது. நான் தனுஷ், என்னிடம் நீங்கள் உரையாடலாம் என்றும் அந்த நபர் குறிப்பிட்டுள்ளார். இதை நம்பி பலர் அவருடன் உரையாடி வந்துள்ளனர். இதுபற்றி தகவல் அறிந்த தனுஷ் அதிர்ச்சியடைந்துள்ளார். இதுபற்றி தனுஷ் கூறும்போது -

தனுஷ் கஸ்தூரிராஜா என்ற பெயரில் அந்த நபர் பேஸ்புக்கில் இணைந்து மோசடி செய்திருக்கிறார். அதில் இருப்பது நான் அல்லன். ஆனால் அது நான்தான் என நம்பி பல்வேறு நகரங்களிலிருந்தும் வெளிநாட்டிலிருந்தும் 4 ஆயிரம் ரசிகர்கள் வரை அவரிடம் ஏமாந்துள்ளனர். இதுபற்றி அறிந்ததும் அதிர்ச்சி அடைந்தேன்.

அந்த மோசடி நபரைக் கண்டுபிடிக்க வேண்டியுள்ளது. அதேநேரம் நான் என நம்பி அவரிடம் பேசவேண்டாம் என ரசிகர்களை கேட்டுக் கொள்கிறேன் - என்றார்.

### சுதந்திர தினத்தைச் சீர்குலைக்க தீவிரவாதிகள் சதி:

## கடலோரக் கண்காணிப்பைத் தீவிரப்படுத்த மாநில அரசுகளுக்கு மத்திய அரசு உத்தரவு

புதுடில்லி, ஓக. 13

சுதந்திர தினக் கொண்டாட்டங்களை சீர்குலைக்கும் நோக்கத்தில் இந்தியாவுக்குள் பாகிஸ்தான் தீவிரவாதிகள் ஊடுருவும் அபாயம் இருப்பதால் கண்காணிப்பை தீவிரப்படுத்தும்படி மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களுக்கு மத்திய உள்துறை அமைச்சு உத்தரவிட்டுள்ளது.

ஓகஸ்ட் 15ஆம் திகதி செங்கோட்டை மீது அத்துமீறி விமானமோ அல்லது ஹெலிகொப்டரோ பறந்தால் அதைச் சுட்டுத்தள்ள தேசிய அதிரடிப்படை பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

மாநிலங்களில் சுதந்திர தினத்தன்று தேசியக்கொடி ஏற்றப்படும் இடங்களில் பாதுகாப்பை பலப்படுத்திக் கொள்ளும்படி மாநில அரசுகளை மத்திய உள்துறை அமைச்சு கேட்டுக் கொண்டுள்ளது.

இடதுசாரி தீவிரவாத அமைப்புகள் தாக்குதல் நடத்த வாய்ப்புள்ளதால் அதற்கு இடம் தராத வகையில் வட கிழக்கு மாநிலங்களிலும் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

சுதந்திர தினத்தை சீர்குலைக்கும் நோக்கில் டில்லி, ஹைதராபாத், கோல்கத்தா ஆகிய நகரங்களில் நாசகார வேலையில் ஈடுபட பாகிஸ்தானைச் சேர்ந்த லஷ்கர் இ தொய்பா தீவிரவாத இயக்கம் திட்டமிட்டுள்ளது என உளவு அமைப்புகள் ஏற்கனவே எச்சரித்துள்ளன.

இதுதொடர்பாக தமக்குக் கிடைத்த தகவல்களை மத்திய அரசு மேற்குவங்கம், ஆந்திரம், டில்லியுடன் பகிர்ந்து கொண்டுள்ளது. விழிப்புடன் இருக்குமாறு அந்த மாநிலங்களை மத்திய அரசு எச்சரித்துள்ளது.

முக்கிய நகரங்களுக்குள் நுழையும் அல்லது நகரை விட்டு வெளியேறும் வழிகளில் தீவிர சோதனை நடத்தும்படியும் தேச விரோத சக்திகள் நடமாட்டம் பற்றி கண்காணிப்புடன் இருக்கும்படியும் மாநிலங்களை மத்திய அரசு உஷார்படுத்தியுள்ளது.

டில்லியைப் பொறுத்தமட்டில் முக்கிய வழிபாட்டுத் தலங்கள், அரசு அலுவலகங்கள், சந்தைகள், ரயில் நிலையங்கள், பஸ் நிலையங்களில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

## தேசிய அரசியல் ஜாதகத்தைக் கணிக்கும் சக்தியாக தி.மு.க. வளர்ச்சி பெற்றுள்ளது

### கருணாநிதி பெருமிதம்

சென்னை, ஓக. 13

இன்றைய அரசியல் சூழ்நிலையில், தேசிய அரசியலின் ஜாதகத்தைக் கணிக்கக்கூடிய சக்தியாக தி.மு.க. வளர்ந்துள்ளது - என்று முதல்வர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

ம.தி.மு.க. தலைமை நிலையச் செயலாளர் கே.எஸ்.ராதாகிருஷ்ணன் தலைமையில், அக்கட்சியைச் சேர்ந்த ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் தி.மு.க.வில் இணையும் விழா சென்னை அண்ணா அறிவாலயத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

விழாவில் பேசியபோதே அவர் இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் கூறியவை வருமாறு -

தி.மு.க.வில் இருந்து பிரிந்து சென்றவர்கள் அக்கரையைப் பார்த்து விட்டு, மீண்டும் தி.மு.கவுக்கே திரும்பியிருக்கிறனர்.

அவர்கள் 'மறுமலர்ச்சி' என்ற மாயையை நம்பி சென்றவர்கள். அதனால் ஏமாற்றமடைந்து இப்போது உண்மையான மறுமலர்ச்சியை ஏற்படுத்தக்கூடிய தி.மு.க.வுக்கு மீண்டும் திரும்பியிருக்கிறார்கள்.

பிற அரசியல் கட்சிகளெல்லாம் காலப்போக்கில் தளர்ச்சியடைகின்றன. ஆனால் தி.மு.கவோ நாளுக்கு நாள் வளர்ச்சியடைகிறது. வலிமை பெறுகிறது.

இன்றைய அரசியல் சூழ்நிலையில், தேசிய அரசியலின் ஜாதகத்தைக் கணிக்கக்கூடிய சக்தியாக தி.மு.க. வளர்ந்துள்ளது. இனி இந்தியாவில் உள்ள எந்தச் சக்தியாலும், தி.மு.க.வைத் தவிர்த்துவிட்டு தேசிய அரசியலைத் தீர்மானிக்க முடியாது. தி.மு.க. இல்லாத தேசிய அரசியல் இனி சாத்தியம் இல்லை - என்றார்.

## சூரிய கிரகணத்தின் தாக்கமே நிலநடுக்கம்; 2010 சந்திரகிரகணத்தால் மீண்டும் ஆபத்து

### எண்கணித நிபுணர் ஆரூடம்

சென்னை, ஓக.12-

2010 புத்தாண்டு தினம் நிகழும் சந்திர கிரகணம் காரணமாக மீண்டும் நிலநடுக்கம் ஏற்படும் ஆபத்துள்ளது - என்று எண்கணித நிபுணர் நம்புங்கள் நாராயணன் கூறினார்.

சென்னை, அந்தமான் தீவுகள், ஜப்பான் உட்பட பல்வேறு நாடுகளில் நேற்றுமுன்தினம் நள்ளிரவில் ஏற்பட்ட பூமி அதிர்ச்சிக்கு கடந்த மாதம் ஏற்பட்ட சூரிய கிரகணத்தின் தாக்கமே காரணம் என்றும் அவர் கூறியுள்ளார்.

இதுகுறித்து எண் கணித மேதை நம்புங்கள் நாராயணன் மேலும் கூறியவை வருமாறு -

கடந்த மாதம் 22ஆம் திகதி அதிகாலை 5.29 மணிக்கு சூரிய கிரகணம் ஆரம்பித்து 7.18 இற்கு முடிவடைந்தது. கடகராசியில் பூச நட்சத்திரத்தில் இந்தக் கிரகணம் ஏற்பட்டது. புனர்பூசம், பூசம், ஆயிலியம் ஆகிய நட்சத்திரங்கள் கடக ராசியில் இருப்பதாலும், கடகத்துக்கு அதிபதி சந்திரனாக இருப்பதால் சூரியனும், சந்திரனும் கிரகணத்தன்று பூமிக்கு அருகில் இருந்தமையால் அதன் ஆகர்ஷண சக்தி தொடர்ந்து மிக பலமாக இருக்கிறது. இந்த வேகம் 16 மாதங்களுக்கு இருக்கும்.


சென்னை, அந்தமான் தீவுகள், ஜப்பான் உட்பட பல்வேறு நாடுகளில் நேற்றுமுன்தினம் நள்ளிரவில் ஏற்பட்ட பூமி அதிர்ச்சிக்கு, கடந்த மாதம் ஏற்பட்ட சூரிய கிரகணத்தின் தாக்கமே காரணம். இது குறித்து நான் ஏற்கனவே தெரிவித்திருந்தேன்.

இந்த நிலையில் 2010 புத்தாண்டு பிறப்பு தினம், சந்திர கிரகணத்துடனேயே பிறக்கிறது. இந்தக் கிரகணம் 31.12.2009 அன்று நள்ளிரவு 12.21 மணிக்குத் தொடங்கி 1.24 மணி வரையில் நிகழ உள்ளது.

இது திருவாதிரை நட்சத்திரத்தில் மிதுன ராசியில் பிடிக்கிறது. [illegible] ணம் இருப்பதால் நிலநடுக்கம் போன்ற இயற்கை சீற்றங்கள் ஏற்பட [illegible] என்றார்.

## எனக்கும் ரஜினிதான் சூப்பர் ஸ்டார்;

### மகள் சௌந்தர்யா நெகிழ்ச்சி



சென்னை, ஓக. 13

ரஜினிகாந்த் எனக்கும் சூப்பர் ஸ்டார்தான் - என்று ரஜினியின் மகள் சௌந்தர்யா கூறியுள்ளார்.

இதுபற்றி அவர் கூறியவை வருமாறு -

இயக்குநராக முடிவு செய்தபோது, நான் அப்பாவுடன் பணியாற்ற வேண்டும் என்று முடிவு செய்தேன்.

ஏனென்றால் நானும் அவரின் ரசிகை. அவர் எனக்கும் சூப்பர் ஸ்டார்தான். இதனால் 'சுல் [illegible] அனிமேஷன் படத்தை இயக்க ஆரம்பித்தேன். அவருடன் பணியாற்றியது இனிமையான அனுபவம்.

சர்வதேச தரத்துடன் உருவாக்கப்பட்டுள்ள இப்படம் முடியப் போகிறது. உலகம் முழுவதும் வெளியீடு செய்யத் திட்டமிட்டுள்ளோம்.

கமராவுக்கு பின்னால் நின்று பணிபுரியவே விரும்புகிறேன். நடிக்கும் ஆசை எனக்கில்லை. சினிமாதான் வாழ்க்கை என்றான பின்னர் அப்பாவை வைத்து படம் இயக்க திட்டமிருக்கிறேன். இருவரும் பேசி வருகிறோம். எதுவும் முடிவாகவில்லை. தனுஷ் எனக்குப் பிடித்த நடிகர்.

ஆனால், அவரை அப்பாவுடன் ரசிகர்கள் ஒப்பிடுவதை நான் விரும்புவதில்லை. தமிழ் தவிர தெலுங்கு, கன்னட படங்களைத் தயாரிக்கவும் விரும்புகிறேன் - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்வான் சூறாவளியில் காணாமற் போன எழுநூறு பேர் உயிருடன் மீட்கப்பட்டனர்

## நூற்றுக் கணக்கானோர் பரிதாபமாக உயிரிழப்பு; நதிகள் பெருக்கெடுத்து ஊர்களுக்குள் வெள்ளம்

தைபே, ஓக. 13

தென்தாய்வானில் மொராகட் சூறாவளி அனர்த்தங்களால் காணாமற்போன ஏறத்தாழ 700 பேர் உயிருடன் கண்டுபிடிக்கப்பட்டனர் என இராணுவ அதிகாரிகள் தெரி வித்தார்கள். மண் சரிவுகளால் மூடப்பட்ட ஹிஸியாலின் கிராமத்தில் மீட்புப் பணியாளர்களால் இவர்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்கள் என தாய்வான் மத்திய செய்தி நிறுவனம் குறிப்பிட்டது.

''மூன்று கிராமங்களில் செவ்வாய்க்கிழமை இரவு ஏறத்தாழ 700 பேரைக் கண்டோம். நேற்று புதன்கிழமை மாலை 26 பேரைக் கண்டோம். இவர்களை மீட்கும் பணியில் 25 ஹெலிக்கொப்டர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன'' என மீட்புப் பணிக்கான சிரேஷ்ட அதிகாரி மேஜர் ஜெனரல் ரிச்சாட் ஹு குறிப்பிட்டார்.

தாய்வானைத் தாக்கிய மொராகட் சூறாவளியின் அனர்த்தங்களுக்கு நூற்றுக் கணக்கானோர் உயிரிழந்துள்ளனர். சொத்துக்களுக்குப் பெரும் சேதம் ஏற்பட்டுள்ளது.

500இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர் என அஞ்சப்படுகிறது. இதுவரை 38 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. ஏராளமானோரைக் காணவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடும் மழையோடு சூறாவளி தாக்கியதில் கிராமம் ஒன்று அப்படியே வெள்ளத்தில் மூழ்கிவிட்டது. அதில் வசித்து வந்த எவருமே உயிர் பிழைக்கவில்லை எனக் கூறப்படுகிறது.

ஏராளமான வீடுகள், தெருக்கள், பாலங்கள் ஆகியவை வெள்ளத்தில் மூழ்கி விட்டன. எங்கும் பேரழிவுகள் விளைந்துள்ளன. வெள்ளம் கரைபுரண்டு ஓடிக்கொண்டிருக்கின்றது.

பாதிப்புக்குள்ளான தொலைதூரப் பகுதிகளுக்கு மீட்புப் பணிகளுக்காக ஹெலிகொப்டர்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. பல ஆறுகளில் ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கால் ஊர்களுக்குள் தண்ணீர் கடல் போல புகுந்துள்ளது.

தெற்கு கஹோசியுங் என்ற பகுதியிலுள்ள சியாலின் என்ற கிராமத்தில் ஏராளமானோர் ஹெலி கொப்டர்கள் மூலம் மீட்கப்பட்டனர். இக் கிராமத்தில் மட்டும் 600 இற்கும் மேற்பட்டோர் சிக்கியுள்ளனர் எனக் கூறப்படுகிறது.

சூறாவளி காரணமாக வரலாறு காணாத அளவாக 2.5 மீட்டர் அளவுக்கு அங்கு மழை பெய்துள்ளது என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# கார்க்குண்டுத் தாக்குதல்கள்: ஈராக்கில் 8 பேர் உயிரிழப்பு

பக்தாத், ஓக. 13

கிழக்குப் பக்தாத்தில் இடம்பெற்ற இரு கார்க்குண்டுத் தாக்குதல்களில 8 பேர் கொல்லப்பட்டனர். 30 பேர் காயமடைந்தனர். ஷியாக்கள் செறிந்து வாழும் பகுதியில் இத்தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன என பொலிஸ் வட்டாரம் தெரிவித்தது.

அல்-அமின் ஷியா மாவட்டத்தில் மக்கள் குடியிருப்புக் கட்டடமொன்றுக்கருகில் முதல் கார்க்குண்டு வெடித்தது. இதையடுத்து, சில நிமிடங்களுக்குள் உணவகமொன்றுக்கருகில் இரண்டாவது கார்க்குண்டு வெடித்தது என நேரில் கண்டவர்கள் குறிப்பிட்டார்கள்.

# ஜப்பானை உலுக்கிய உக்கிர பூகம்பம் 108 பேர் படுகாயம்; வீடுகள் சேதம்

டோக்கியோ, ஓக. 13

ஜப்பானில் டோக்கியோவின் தென்மேற்குப் பகுதியில் செவ்வாய்க்கிழமை அதிகாலை 1.37 மணியுளவில் கடும் பூகம்பம் ஏற்பட்டது. அநேக வீடுகள் சேதமடைந்தன. இதனால் மக்கள் அச்சத்தில் வீட்டைவிட்டு வெளியேறினர். வீடுகளிலுள்ள பொருள்கள் கீழே விழுந்தமையால் 108 பேர் படுகாயமடைந்தனர். இதில் மூவரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது என அதிகாரிகள் தெரிவித்தனர்.

இப்பகுதியிலுள்ள அணு மின் நிலையம் தானாகவே தனது செயற்பாட்டை நிறுத்திக்கொண்டது. சிஷொகா மாகாண ஆளுநர் ஹெய்டா கவகட்ஸா பொதுமக்களிடம் நிலநடுக்கம் குறித்த செய்திகளை தொலைக்காட்சி வழியாகத் தெரிந்து கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார்.

இப்பூகம்பத்தின் தாக்கம் ரிச்டர் அளவுகோலில் 6.4 புள்ளிகளாகப் பதிவாகியுள்ளது என அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்தது.

இதைத் தொடர்ந்து இந்தியா, மியான்மர், இந்தோனேஷியா, தாய்லாந்து, பங்களாதேஷ் ஆகிய நாடுகளுக்கு ஆழிப்பேரலை எச்சரிக்கை விடுக்கப்பட்டது. பின்னர் ஆழிப்பேரலை எச்சரிக்கை திரும்பப் பெறப்பட்டது. இப்பூகம்பத்தால் ஏற்பட்ட நிலச்சரிவு காரணமாக புல்லட் ரயில் சேவை நிறுத்தி வைக்கப்பட்டது. சிஷொகா நகரிலுள்ள 424 ஆண்டு பழமையான சுன்பு கோட்டையைச் சுற்றியுள்ள கற்சுவரின் சில பகுதிகள் சேதமடைந்தன.

அடுத்தடுத்து, 13 தடவைகள் நில அதிர்வுகள் ஏற்பட்டன. இதனால் பிரதமர் அலுவலகத்தில் அவசரகால உதவி மையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆழிப் பேரலை ஏற்படும் அபாயம் இல்லை என ஜப்பான் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. டோக்கியோ நகர மக்கள் சமீபத்தில் வீசிய எடொ சூறாவளியால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இந் நிலையில், செவ்வாய்க்கிழமை ஏற்பட்ட பூகம்பத்தால் மக்கள் மிகுந்த அச்சத்தில் ஆழ்ந்துள்ளனர்.

இந்தோனேஷியாவின் கிழக்குப் பகுதியில் செவ்வாய்க்கிழமை பூகம்பம் ஏற்பட்டது. இதன் தாக்கம் ரிச்டர் அளவுகோலில் 5.7 அலகாகப் ப்திவானது. இந்தோனேஷியாவின் வடக்கு கடலோரப் பகுதியில் 74 கி.மீ. சுற்றுப் பரப்பில் அதிர்வுகளை இது ஏற்படுத்தியுள்ளது எனப் புவியியல் வல்லுநர்கள் தெரிவித்தனர்.

# அமெ. ஏவுகணைத் தாக்குதலில் பாகிஸ்தானில் 10 பேர் மரணம்

இஸ்லாமாபாத், ஓக. 13

வட-மேற்குப் பாகிஸ்தானில் ஆளில்லா அமெரிக்க விமானமொன்று மேற்கொண்ட ஏவுகணைத் தாக்குதலில் 10 தீவிரவாதிகள் கொல்லப்பட்டார்கள் என உள்ளூர் புலனாய்வுத்துறை அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

ஆப்கான் எல்லைக்கருகிலுள்ள பாகிஸ்தானின் தென்வசிரிஸ்தான் பிராந்தியத்தில் இயங்கிவரும் தீவிரவாதிகளின் முகாமொன்றை இலக்கு வைத்து இத் தாக்குதல் நடத்தப்பட்டது. இப்பிராந்தியம் பாகிஸ்தான் தலிபான் தலைவர் பைத்துல்லா மெஹ்சூத்தின் பலம் பொருந்திய கோட்டையாகும் என்றும் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

இங்கு ஏற்கனவே ஆளில்லா அமெரிக்க விமானம் மேற்கொண்ட ஏவுகணைத் தாக்குதலில், பைத்துல்லா மசூத் கொல்லப்பட்டு விட்டார் என பல மட்டங்களிலிருந்தும் செய்திகள் வெளியாகியுள்ளன. எனினும், அவர் கொல்லப்பட்டமை இதுவரை ஊர்ஜிதப்படுத்தப்படவில்லை.

# மரண அறிவித்தல்

## திருமதி கந்தையா மகேஸ்வரி (மகேஸ் அக்கா)



உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் வடக்கை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா மகேஸ்வரி (மகேஸ் அக்கா) 10.08.2009 திங்கட்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் அமரர்களான நாகலிங்கம் - அழகமுத்து தம்பதியினரின் அன்பு மகளும் அமரர் தம்பிப்பிள்ளை கந்தையாவின் பாசமிகு துணைவியும் விவேகானந்தராஜா (பிரான்ஸ்), பரமானந்தராஜா (ஆனந்தம், R.V.G. பீடி கம்பனி), அமரர்களான விசாகராஜா, கந்தசாமி மற்றும் நேசராஜா (ஜேர்மனி), யோகேஸ்வரி, தனேஸ்வரி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும், வள்ளிநாயகி, அமரர் இராஜேஸ்வரி மற்றும் கமலாதேவி, ஈனா (ENNA), அமரர் செல்வரத்தினம் மற்றும் இரவீந்திரதாஸ் ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்றவர்களான பரராஜசிங்கம், பூபாலசிங்கம், சரஸ்வதி கனகலிங்கம், கணேஸ்வரி தில்லையம்பலம் மற்றும் ஈஸ்வரி மாரிமுத்து (திருமலை), அமரர் தங்கமணி பாலசிங்கம் மற்றும் பரமேஸ்வரி இளையதம்பி, அமரர் நாகரத்தினம் கந்தையா ஆகியோரின் சகோதரியும் ராமோகன் - தயாசுகி, தயாபரன் - கஜேந்தினி, தயானந்தன் - லிலியன், விக்கினேஸ்வரன் - தயாசுகினி, தியாகராஜா - பவானி, கோகிலகுமார் - ரஜனி, சிவரூபன் - சௌந்தினி, சிவபாலன் - வாசுகி, சிவானந்தன் - உஷாராணி, சுதர்சன் - ஜீவா, சுதாகர் - வக்ஷலா, காங்கேயன் - விஜித்தா, ராகுலன் - தர்சினி, நவக்குமார் - பானுஷிறி, மார்க்கோ, சாறா, நாடியா, கனகலிங்கம் - மோகனேஸ்வரி, விமலச்சந்திரன் - சுகந்தேஸ்வரி, தேவஸ்ரீ - மங்களேஸ்வரி, சண்முகநாதன் - ஞானேஸ்வரி, சிவா - ஜெயந்தினி, கம்சத்வனி, கம்சத்வனிதா, பிரசன்னா, சஞ்சிகா, கம்சரூபி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் அபிஷா, ஆகாஸ், ஆரணி, நிவேத், தருண், விஸ்னு, சுஜானா, தனுஷியன், யஷ்மிதா, ரஜீத், சகானா, சங்கீத், கபிலன், அபிநயா, கனுஷன், அக்ஷயன், அர்ச்ஷிகா, ஆதீஸ், அஸ்விதன், அஸ்விதா, அனுஷன், அக்சியா, ஹரிஸ், ராதிகா - சூரியகுமார், சேதீஸ்வரி - நந்தகுமார், கல்ப்பனா, துளசிகா, பௌசியா, ஜெனகன், கதாகரன், வேதுஜன், நிரோஜா, சயிதா, சிந்துஜன், கஜிதா, சுஜன், ஏனோத் ஆகியோரின் அன்புப் பூட்டியும் தனுஜன், பேரசி, ரதுசனா, தர்மிதா, சதுர்சியா ஆகியோரின் முப்பாட்டியும் ஸ்ரீஸ்கந்தராஜா, சிவதர்சினி, கஜலக்சன், தனுலக்சன், ஸ்ரீஜெனனி ஆகியோரின் அன்பு அப்பம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.08.2009) வியாழக்கிழமை பி.ப 4 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: பரமானந்தராசா (ஆனந்தம் - மகன்)
(R.V.G. பீடி கொம்பனி).
T.P.: 222 9772

(87857)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகைதந்த வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி நூலகத்தில் நடத்திய கூட்டத்தில் எடுக்கப்பட்ட படங்கள். ஆளுநருடன் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ்.அரச அதிபர் கே.கணேஷ். ஆகியோர் அருகில் அமர்ந்துள்ளனர்.

# புலிகளைப் பிடித்தால் இலங்கையிடம் கொடுக்காதீர்கள்! வெளிநாடுகளிடம் மன்னிப்புச்சபை பகிரங்கக் கோரிக்கை

## கே.பி. விவகாரத்தால் மலேஷியா மீது விசனம்

கொழும்பு, ஓக. 13

இலங்கைக்கு வெளியே செயற்படும் விடுதலைப் புலி உறுப்பினர்களைக் கைது செய்யும் நாடுகள் அவர்களைத் தத்தமது நாடுகளிலேயே விசாரணைக்கு உட்படுத்த வேண்டும் என சர்வதேச மன்னிப்புச்சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

கே.பியை கைதுசெய்து இலங்கை அரசிடம் ஒப்படைத்துள்ளதன் மூலம், மலேஷியா சர்வதேச சட்டங்களை மீறியுள்ளது என சர்வதேச மன்னிப்புச்சபையின் ஆசிய பசுபிக்கிற்கான இயக்குநர் சாம் ஜரிவி குற்றம் சாட்டியுள்ளார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவித்தவை வருமாறு:-

விடுதலைப் புலி உறுப்பினர்கள் எவராவது உலக நாடொன்றில் கைது செய்யப்படும் பட்சத்தில் அந்த நாட்டிலேயே விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

குற்றச் செயலுடன் தொடர்புடையவர் என சந்தேகிக்கப்படும் நபர் உட்பட எவரையும் அவர்கள் சித்திரவதை மற்றும் மோசமான நடத்தைக்கு உட்படுத்தப்படும் நாடொன்றுக்கு அனுப்புவதை சர்வதேச சட்டங்கள் தடைசெய்துள்ளன.

தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை சித்திரவதை செய்யும், மோசமாக நடத்தும் வரலாறு இலங்கைக்கு உள்ளது.

கே.பி. இலங்கைக்கு எவ்வாறு கொண்டு செல்லப்பட்டார் என்பது குறித்து பல கேள்விகள் எழுகின்றன.

கே.பியோ அல்லது தடுத்து வைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலி உறுப்பினர்களோ உரிய நீதி விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

தற்போது முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 10 ஆயிரம் முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்களும் நீதிமன்றத்தில் ஆஜராக்கப்பட்டு முறையான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.

கே.பி. மாத்திரம் அல்ல, கருணாவையும் அவரது மனித உரிமை மீறல்களுக் காக விசாரணை செய்யவேண்டும். கே.பி. மாத்திரமின்றி முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்கள் மற்றும் கருணா உட்பட மனித உரிமை மீறல்களுக்காக குற் றம் சாட்டப்பட்ட எந்த அரச உறுப்பினரும் நீதி மன்ற விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு உரிய நீதி கிடைப்பதை நாங்கள் எதிர்பார்க்கிறோம் - என்று சாம் ஜரிவி தெரிவித்துள்ளார்.

# உயர் பாதுகாப்பு வலயத்துக்கு அருகில் அமைந்துள்ள ஏழு பாடசாலைகளை மீள இயக்க நடவடிக்கை

## மாகாணக் கல்வியமைச்சின் செயலருக்கு ஆளுநர் பணிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 13

உயர்பாதுகாப்பு வலயத்துக்கு அருகில் அமைந்துள்ள 7 பாடசாலைகளை மீள இயக்குவதற்கு உடனடி நடவடிக்கைகளை எடுக்குமாறு வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி . ஏ. சந்திரசிறி வட மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளருக்குப் பணிப்புரை விடுத்தார்.

அத்துடன் உயர் பாதுகாப்பு வலயத்துக்கு அருகில் உள்ள வீடுகளில் பொது மக்கள் மீளக்குடியமர்த்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஆளுநர் தெரிவித்தார்.

இது தொடர்பாக ஆளுநர் மேலும் தெரிவித்தவை வருமாறு :-

உயர் பாதுகாப்பு வலயத்துக்கு அருகில் அமைந்துள்ள பாடசாலைகளை மீள இயங்குவதற்கு பாதுகாப்புத்தரப்பு அனுமதி வழங்கியுள்ளது. அத்துடன் அப்பகுதிகளில் உள்ள குடியிருப்புக்களில் மக்கள் மீளக் குடியமர்வதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் அமைந்துள்ள வழிபாட்டுத் தலங்களுக்கு மக்கள் சென்று வருவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு படிப்படியாக அனைத்துக் கட்டுப்பாடுகளும் தளர்த்தப்படும். இதன் மூலம் மக்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பும் சூழல் ஏற்படும் - என்றார். (50)

# தொண்டைமானாறு, சுப்பர்மடம், காட்டுப்புலம் பகுதிகளில் கடற்றொழில் மேற்கொள்ளக் கட்டுப்பாடுகள் இல்லை

யாழ்ப்பாணம், ஓக. 13

வடமராட்சியில் சுப்பர் மடம், தொண்டைமனாறு, காட்டுப்புலம் ஆகிய கடற்பிரதேசங்களில் மீன்பிடிப்பதற்கு எந்தவிதமான கட்டுப்பாடுகளும் இல்லை. மீனவர்கள் அப் பகுதிகளில் சுதந்திரமாகத் தொழில் செய்ய முடியும்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி.

மேற் குறிப்பிட்ட கடற்பிரதேசங்களில் மீன்பிடிப்பதற்கு இதுவரை அனுமதி வழங்கப்படவில்லை என வடக்கின் வசந்தம் கூட்டத்தில் கலந்து கொண்ட கடற்தொழில் திணைக்களத்தின் அதிகாரி ஆளுநர் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

இது குறித்து கருத்துத் தெரிவித்த ஆளுநர், மேற்குறிப்பிட்ட பகுதிகளில் மீன்பிடிப்பதற்கு எந்தவிதமான கட்டுப்பாடுகளும் இல்லை. எனவே இது தொடர்பாக அப் பகுதிக்குப் பொறுப்பான படை அதிகாரிகளுடன் கலந்துரையாடி அங்கு மீன் பிடிப் பதற்கான அனுமதியைப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு யாழ்.அரச அதிபர், கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களப் பணிப்பாளர் ஆகியோருக்கு பணித்தார். (50)

# இலங்கையில் ஜனநாயகம் இல்லாவிட்டால் தேர்தலில் தமிழரசுக் கட்சி வென்றிருக்குமா?

## இவ்வாறு கேள்வி எழுப்புகிறார் அமைச்சர்



கொழும்பு, ஓக. 13

''இலங்கையில் ஜனநாயகம் இல்லை என்று குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன. நாட்டில் குறிப்பாக வடக்கில் ஜனநாயகம் இல்லையென்றால் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பால் வடக்குத் தேர்தலில் வெற்றிபெற்று வவுனியா நகரசபை யைக் கைப்பற்றியிருக்க முடியுமா?

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய ஊடகத்துறை அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபயவர்தன இவ்வாறு கேள்வி எழுப்பினார். இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

நடந்து முடிந்த ஊவா மற்றும் வடக்குத் தேர்தலில் அரசு பெரும் வெற்றி பெற்றுள்ளது. வரலாற்றில் முதல் தடவையாக அதிக எண்ணிக்கையிலான தமிழ் பேசும் மக்கள் ஊவாவில் ஐக்கிய மக்கள் சுதந் திரக் கூட்டமைப்புக்கு வாக்களித்துள்ளனர்.

யுத்தத்துக்கு பின்பு அரசு அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளாது எனக்கூறி எதிர்க்கட்சி பொய்ப்பிரசாரம் செய்தது. ஆனால், அரசு யுத்தம் முடிந்ததும் பாரிய அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டது. அவற்றை மக்கள் உணர்ந்துகொண்டனர்.

அதேபோல், வடக்குத் தேர்தலையும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு எதிர்த்தது. ஜனநாயகம் இல்லாத ஒரு சூழ்நிலையில் இத் தேர்தல் நடத்தப்படுகின்றது என்று கூட்டமைப்பு குற்றஞ்சாட்டியது.

அப்படிக்கூறிய கூட்டமைப்பு இத் தேர்தலில் வவுனியா நகரசபைக்குப் போட்டியிட்டு அந்நகரசபையைக் கைப்பற்றியுள்ளது. ஜனநாயகம் இல்லாதிருந்திருந்தால் அக்கட்சியால் இவ்வெற்றியைப் பெற்றிருக்க முடியுமா?

வடக்குத் தேர்தலில் கூட தமிழ் மக்கள் கூட்டமைப்புக்குப் ஆதரவை வழங்கியிருந்தாலும். யாழ்ப்பாணத்தில் அதிகமான தமிழர்கள் எமக்கு வாக்களித்துள்ளனர்.

அடுத்ததாக தென்மாகாண சபைத் தேர்தலுக்கு நாம் தயாராகியுள்ளோம். அங்கு நாம் 85 வீத வெற்றியைப் பெறுவோம். அத்தேர்தல் முடிவுற்றதும் துண்டு துண்டாகத் தேர்தல்களை நடத்தும் தேவை ஏற்படாது. தென் மாகாணசபைத் தேர்தல் முடிந்ததும் அடுத்த வருடம் ஏப்ரல் மாதத்துக்குள் ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்கள் நடத்தப்படும். எதிர்க்கட்சி முடிந்தால் அத்தேர்தல்களிலாவது வெற்றி பெற்றுக் காட்டட்டும் - என்றார். (அ-சி)

## குடாநாட்டிலிருந்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத் திப் பணிகளின் முன்னேற்றங்கள் குறித்து இந்தக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது. அத்துடன் இங்கு அவசரமாக மேற்கொள்ளப் பட வேண்டிய பணிகள் மற்றும் அவற்றை மேற்கொள்வதில் உள்ள நடை முறைச்சிக்கல் என்பன குறித்து விரிவாக ஆராயப்பட்டது. கல்வி, போக்குவரத்து, விவசாயம், நீர் வழங்கல், வீதி அபிவிருத்தி, சுகாதாரம், மின்சாரம், மீன்பிடி ஆகிய துறைகளில் வடக்கின் வசந் தம் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்திப் பணிகள் குறித்து ஆராய்ந்து முடிவுகள் எடுக்கப்பட்டன. மூடப்பட்டிருக்கும் வீதிகளை மக்கள் பாவனைக்குத் திறந்து விடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

### காவலரண்கள் அகற்றப்படும்

அத்துடன் உயர்பாதுகாப்பு வலயப்பகுதிக்கு அண்மையில் மீளக் குடியமர்வதற்கும் வீதிகளில் போக்குவரத்துக்கு இடையூறாக உள்ள காவலரண்களை அகற்றுவதற்கும் முடிவு காணப்பட்டது. பாதுகாப்பு வலயத்துக்குள் அமைந்துள்ள மதவழிபாட்டுத் தலங்களுக்குப் பொதுமக்கள் செல்வதற்கும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது-என்றார் ஆளுநர் (50)

## தமிழர்களின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த ஜூன் மாதம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அழைப்பின் பேரில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த சுவாமி நாதன், வடக்கில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் விவசாயத்திற்கு புத்துயிர் கொடுக்கத் தயார் எனத் தெரிவித் திருந் தார். எனினும், தற்போது தான் இலங்கைக்கு செல்லப்போவதில்லை என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

'இலங்கையில் ஏதோ ஒரு வகையில் அரசியல் தீர்வு எட்டப்படும் வரை அங்கு உடனடியாகச் செல்வதற்கு நான் எண்ணவில்லை' என [illegible] திச் சேவை[illegible]

தமிழ் மக்கள் இலங்கையில் கௌரவமாக வாழாதவரை ஏனைய விடயங்கள் முக்கியமற்றவை என சிலர் கருதுகின்றனர் என சுட்டிக்காட்டியுள்ள சுவாமிநாதன் தற்போதைக்கு இலங்கைக்குச் செல்லும் எண்ணம் எதுவும் இல்லைஎனவும்குறிப்பிட்டுள்ளார்.

''இலங்கையில் யுத்தத்தால் இடம்பெயர்ந்த பெரும் எண்ணிக்கையானோர் உள்ளனர். அங்கு நிலைமை சுமுகமானதும் இலங்கைக்குச் செல்வது குறித்து சிந்திப்பேன்'' என அவர் தெரிவித்துள்ளார். இதேவேளை, இலங்கையின் வடபகுதியில் விவசாய அபிவிருத்திக்கான சாத்தியப்பாடுகள் குறித்து தனது எண் ணங்களை இந்திய வெளிவவகார அமைச் சிற்கு சமர்பித்துள்ளார் எனவும்சுவாமிநாதன்தெரிவித்துள்ளார். [illegible]ம் தயாராகவுள்ளது. இந்[illegible]காரிகள் அவசியமான விடயங்களைச் செய்யலாம், எனது யோசனைகளையும் அமுல்படுத்தலாம். நான் அங்கு செல்ல வேண்டிய அவசியமில்லை'' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இலங்கையில் வட பகுதியில் விவசாயத்திற்கு புத்துயிர் கொடுப்பது குறித்து இந்தியா உறுதியாக இருக்கிறது என்று புதுடில்லித் தகவல்கள் தெரிவித்துள்ளன. புதுடில்லி இதற்காக அதிகாரிகளை- நிபுணர்கள் குழு வொன்றை கொழும்புக்கு அனுப்பவுள்ளது.

அவர்கள் வடபகுதியில் விவசாயத்திற்குப் புத்துயிர் கொடுப்பதற்கான நடவடிக்கை குறித்து ஆராயவுள்ளனர் என்று புதுடில்லித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்திய விவசாய ஆராய்ச்சி கவுன்ஸிலின் விஞ்ஞானிகள் அடங்கிய இக்குழுவினர் வன்னியில் பல பகுதிகளுக்கும் செல்லவுள்ளனர் எனவும் கூறப்பட்டது. (அ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அகதிகளை விடுவித்தால்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வன்னி முகாம்களில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் தமிழ் அகதிகளை இலங்கை அரசு உடன் விடுதலை செய்யவேண்டும் என்ற பிரதான கோரிக்கையை வலியுறுத்தி சர்வதேச மன்னிப்புச் சபை கடந்த திங்கட்கிழமை அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தது.

அந்த அறிக்கை நேற்றைய உதயனிலேயே பிரசுரமாகியிருப்பது தெரிந்ததே.

அவ்வறிக்கை தொடர்பில் ஊடகவியலாளர்களுக்கு நேற்றுக் கருத்துத் தெரிவித்த போதே அமைச்சர் இலங்கை அரசின் நிலைப்பாட்டை பகிரங்கமாக அறிவித்தார்.

சர்வதேச மன்னிப்புச் சபை, முகாம்கள் சம்பந்தப்பட்ட உண்மையான கள நிலைவரங்களை நன்கு தெரிந்துகொள்ளாமல் பிழையான - ஆதாரபூர்வமற்ற - தகவல்களை அடிப்படையாகக் கொண்டு அறிக்கை வெளியிட்டுள்ளது என்றும் அவர் மன்னிப்புச் சபையை வன்மையாகக் கண்டித்தார்.

இது தொடர்பாக அமைச்சர் ஊடகவியலாளர்களுக்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

முகாம்களில் இருப்பவர்களை விடுதலை செய்வது அரசால் மேற்கொள்ளப்படும் நாடு மற்றும் நாட்டு மக்களின் பாதுகாப்பு சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளுக்குப் பாரிய, நேரடியான ஆபத்தாக அமையும். எனவே, சர்வதேச மன்னிப்புச் சபை கோரிக்கை விடுத்துள்ளது என்பதற்காக எமது நாட்டை ஆபத்துக்குள் தள்ளிவிட முடியாது.

சர்வதேச மன்னிப்புச் சபையின் அறிக்கை தவறானது. முகாம்கள் சம்பந்தப்பட்ட உண்மையான கள நிலைவரங்களைத் தெரிந்து கொள்ளாமல் பிழையான - ஆதாரமற்ற - தகவல்களை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச மன்னிப்புச் சபை அறிக்கை வெளியிட்டுள்ளது - என்றார். (அ-சி)

## சோதனைச்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

* இடம்பெயர்ந்து வந்துள்ள மக்களின் படகு இயந்திரங்களை அவர்களிடம் ஒப்படைப்பதற்கும் மறவன்புலோ,கைதடி, நாவற்குழி, தனங்கிளப்பு ஆகிய பகுதிகளில் விவசாய செய்கை மற்றும் கடற்றொழிலில் ஈடுபட அனுமதி வழங்குவதெனவும் விரைவில் அப்பகுதியில் மீள்குடியேற்றம் செய்யவும் இணக்கம் காணப்பட்டது.

*கோவிலாக்கண்டி, தனங்களப்பு, சாவகச்சேரி வீதியை மக்கள் போக்குவரத்துக்காகத் திறக்கவும்.

* சாவகச்சேரி நகர சபைக்குரிய விளையாட்டு மைதானத்தையும் சாவகச்சேரி இந்து மயானத்தையும் பொதுமக்களின் பாவனைக் காகத் திறக்கவும்.

* வடமராட்சி கிழக்கு குடத்தனை பகுதிக்கு பொதுமக்கள் சென்றுவரவும் நாகர் கோயில் நாகதம்பிரான் கோயிலுக்கும் மக்கள் சென்று வரவும்.

* கச்சாய்த் துறைமுக வீதியிலுள்ள விளையாட்டு மைதானத்தை பொது மக்கள் பாவனைக்காகத் திறக்கவும். கொடிகாமம் பொலிஸ் நிலையத்துக்கு முன்பாகவுள்ள கச்சாய் பாதையோர முள்கம்பிகளை அகற்றவும் உசன் - கெற்பெலி வீதியை மக்கள் போக்குவரத்துக் காகத் திறக்கவும் இணக்கம் காணப்பட்டுள்ளது.

* வரணி சந்தையைத் திறத்தல், கொடிகாமம் வீதியில் 52 ஆவது படையணி முகாம் முன்புள்ள பருத்தித்துறை வீதியை திறத்தல்.

* அரியாலை கிழக்குப் பகுதியில் மீள்குடியேற்றம் செய்தல். குருநகர் கரை யோர பகுதிகளில் உள்ள வீடுகளை மக்கள் பாவனைக்கு வழங்கல். குருநகர் (பீச் றோட்) பாதையைத் திறத்தல், பாஷையூர் 1ஆம்,2 ஆம் குறுக்குத் தெருக்களை மக்கள் பாவனைக்காகத் திறத்தல், பாஷையூர், வசந்தபுரம், துண்டி, கொழும்புத்துறை போன்ற பகுதிகளில் உள்ள வீடுகளை மக்கள் பாவனைக்காக வழங்கல்.

*கொட்டடி முத்தமிழ் சனசமூக நிலைய்த்தையும் அப்பகுதி வீடுகளையும் மக்கள் பாவனைக்காக வழங்கல்.

* பருத்தித்துறை - கொடிகாமம் வீதி மில்'ஃவஸ் நிலையம் அருகில் உள்ள சோதனைச் சாவடியை அகற்றுதல். சாவகச்சேரி, சரசாலை ஊடாக பருத்தித்துறை வீதியில் உள்ள சோதனைச் சாவடியை அகற்றுதல்.

* உசன் ராமநாதன் கல்லூரிக்குரிய காணியை விடுவித்தல் போன்ற விடயங்கள் தொடர்பில் விரைவில் நடவடிக்கை எடுப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

*அம்பன் பகுதியில் உள்ள கால் நடைகளை உரியவர்கள் பிடித்துக் கொள்வதற்கும் கரம்பகம், எழுதுமட்டுவாழ், ஒட்டுவெளி, நாகர்கோயில், மருதங்கேணி ஆகிய பகுதிகளில் கண்ணிவெடிகளை உடன் அகற்றப்பட்டு மக்களை மீள் குடியேற்றுவதற்கும் இணக்கம் காணப்பட்டது.

* காரைநகர் வட்ட வீதி மற்றும் தோப்புக்காடு துறைமுக வீதியை தேவைக்கேற்ப பயன்படுத்துவதற்கும் 784 இலக்க பேருந்து பொன்னாலை - வட்டுக்கோட்டை கல்லுண்டாய் வீதியூடாக காரைநகருக்குள் பிரவேசிப்பதற்கும் இணக்கம் காணப்பட்டுள்ளதுடன் காரைநகரில் பொலிஸ் நிலையம் ஒன்றை அமைக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

* கல்வித்துறையுடன் தொடர்புடைய விடயங்கள் தொடர்பில் இங்கு ஆராயப்பட்டதுடன் மீள்குடியேற்றங்கள் நடைபெறுகின்ற தருவாயில் தென்மராட்சி பகுதியில் தற்போது செயலிழந்து காணப்படுகின்ற பாடசாலைகளைத் திறப்பதெனவும் பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் சோதனைச் சாவடிகளில் முகம் கொடுக்கும் சிரமங்களைத் தவிர்ப்பதெனவும் வலிகாமம் கல்வி வலயத்தில் தற்போது மூடப்பட்டுள்ள பாடசாலைகளில் 7 பாடசாலைகளை உடன் திறப்பதெனவும் காலப்போக்கில் ஏனைய அனைத்துப் பாடசாலைகளையும் திறப்பதெனவும் பாடசாலைகளுக்குத் தேவையான இரசாயனப் பொருள்களைக் கொண்டு செல்வதில் உள்ள தடைகளை அகற்றவும் தீர்மானிக்கப்பட்டது (.அ-1)

## சர்வதேச.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதற்கான ஆற்றல் இலங்கை அரசிடம் இல்லை என்றும் ஊடகங்கள் கருத்துத் தெரிவித்திருந்தன.

பிரபாகரனைக் கொன்றாலும் கூட புலிகளின் சர்வதேச விவகாரங்களுக்குப் பொறுப்பாக இருக்கின்ற கே.பியைக் கொன்றொழிக்காதவரை புலிகளை முற்றாக ஒழித்துக்கட்டும் அரசின் திட்டம் வெற்றியளிக்காது என்றும் அந்த ஊடகங்கள் கூறின.

இந்தக் கே.பியை கைது செய்ய முதலில் பிரேமதாஸா நடவடிக்கை எடுத்தார். அது வெற்றியளிக்கவில்லை. அடுத்ததாக சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்க நடவடிக்கை எடுத்தார். அப்போது மலேஷியாவில் வைத்து கே.பி. தப்பிச் சென்றுவிட்டார்.

இப்போது எமது அரசால் அவரைக் கைது செய்ய முடிந்துள்ளது. இந்த விடயத்தை எமது அரசு மிகவும் நுட்பமாகக் கையாண்டது. சர்வதேசநாடுகளின் ஒத்துழைப்புடன் அவரைக் கைது செய்தது.

அவரைக் கைதுசெய்யும்போது சர்வதேச சட்டங்கள் எவையும் மீறப்படவில்லை. அச்சட்டங்களுக்கு அமைவாகவே அவர் கைது செய்யப்பட்டார்.

அரசுக்கு இருக்கின்ற சர்வதேச ஒத்துழைப்பும் குறையவில்லை என்பது அவரது கைது மூலம் தெளிவாகியுள்ளது. கே.பி. இலங்கைக்கு மாத்திரமல்ல சர்வதேச நாடுகள் பலவற்றுக்கும் தாக்கத்தை ஏற்படுத்தியவர். - என்றார்.

## வவுனியா.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காங்கிரஸ் ஆதரவு வழங்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

வவுனியா நகரசபைத் தேர்தல்களின் போது நாதன் 1099 விருப்பு வாக்குகளைப் பெற்று மூன்றாம் இடத்தை வகிக்கிறார் என்பதும், முகுந்தரதன் முதலிடத்தை வகிக்கிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## இன, மத......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முரணானது எனத் தெரிவித்து, அந்தச் சட்டமூலத்தை ஆட்சேபித்து, மூன்று பிரதான எதிர்க்கட்சிகள் நேற்று உயர் நீதிமன்றத்தில் தனித்தனியாக மனுக்களைத் தாக்கல் செய்திருக்கின்றன.

பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.க. சார்பில் அதன் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்கவும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் எம்.பிக்களான மாவை சேனாதிராஜா, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் அதன் செயலாளர் ஹஸனலியும் இந்த மனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர்.

'நாடாளுமன்றத் தேர்தல்கள் (திருத்தம்) - 1981ஆம் ஆண்டின் முதலாம் இலக்க நாடாளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தை திருத்துவதற்கான சட்டமூலம்' என்ற பெயரில் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க கடந்த 6ஆம் திகதி மேற்படி திருத்தச் சட்டமூலத்தை முதலாம் வாசிப்புக்கென நாடாளுமன்றில் சமர்ப்பித்திருந்தார். எதிர்வரும் 20ஆம் திகதி அது நாடாளுமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்படும் என அப்போது தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்தச் சட்டமூலத்தில் உள்ள மூன்று பிரதான விடயங்களை எதிர்க்கட்சிகள் தமது மனுக்கள் மூலம் ஆட்சேபித்திருக்கின்றன.

* ஏதேனும் ஒரு கட்சி ஓர் இனத்தின் அல்லது மதத்தின் அல்லது சமூகத்தின் அடிப்படையிலான பெயரைக் கொண்டிருப்பின் அக்கட்சிக்கான அங்கீகாரத்தை ரத்துச் செய்யும் அதிகாரத்தை தேர்தல் ஆணையாளருக்கு வழங்குதல்.

* இரு நாடாளுமன்றத் தேர்தல்களில் தொடர்ச்சியாகப் போட்டியிடாத அரசியல் கட்சிகளின் அங்கீகாரத்தை ரத்துச் செய்யும் அதிகாரத்தைத் தேர்தல் ஆணையாளருக்கு வழங்குதல்.

* தொடர்ந்து இரண்டு வருடங்களாகத் தமது வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட வரவு - செலவு அறிக்கைகளைத் தேர்தல் ஆணையாளருக்குச் சமர்ப்பிக்காத அரசியல் கட்சிகளின் அங்கீகாரத்தை ரத்துச் செய்யும் அதிகாரத்தை ஆணையாளருக்கு வழங்குதல்.

- மேற்படி சட்டமூலத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த இந்த மூன்று விடயங்களையே முக்கியமாக மூன்று பிரதான கட்சிகளும் உயர்நீதிமன்றத்தில் சர்ச்சைக்கு உள்ளாக்கியிருக்கின்றன.

ஒரு மதத்தின் அல்லது இனத்தின் அல்லது சமூகத்தின் பெயரை ஒரு கட்சி கொண்டிருக்கக் கூடாது என்ற சட்டம் நடைமுறைக்கு வருமானால் 'தமிழரசுக்கட்சி', தமிழர் விடுதலைக் கூட்டணி', ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்' போன்றவை எல்லாம் தமது அங்கீகாரத்தை இழக்கும் எனச் சுட்டிக்காட்டப்படுகிறது.

இது ஓர் இனத்தின் அல்லது மதக் குழுமத்தின் அல்லது சமூகக் குழுவின் நலன் தொடர்பாக அதன் அங்கத்தவர்கள் ஒன்று சேர்ந்து கூட்டாக இயங்கி அந்த நலனைப் பேணுவதற்கான உரிமையை - அரசமைப்பில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள பிரதான அடிப்படை உரிமையை - மீறும் சட்ட ஏற்பாடு என இக்கட்சிகள் தமது ஆட்சேபனை மனுவில் தெரிவித்துள்ளன.

இதேபோன்று கட்சியின் வருடாந்த வரவு - செலவுத் திட்ட அறிக்கையை அதன் வருடாந்தக் கூட்டத்தில் அங்கீகரித்து அதன் பிரதியைத் தேர்தல் ஆணையாளருக்குச் சமர்ப்பிக்க வேண்டும் எனக் கட்டாயப்படுத்துவதும் அக்கட்சியின் உள்விடயங்களில் தலையிடும் விவகாரமாகும்.

அதேபோன்று, நாடாளுமன்றத் தேர்தல் ஒன்றில் போட்டியிடுவதா, இல்லையா அல்லது பகிஷ்கரிப்பதா என்பன பற்றியெல்லாம் தீர்மானிப்பது அக்கட்சியின் உள்ளக விடயம். அதில் தேர்தல் ஆணையாளர் தலையிட்டு அனுமதிப்பது அக்கட்சியினதும் அதன் அங்கத்தவர்களினதும் அடிப்படை உரிமைகளில் தலையிடும் விவகாரம் என இந்த மனுக்களில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இப்படி அரசமைப்பில் ஏற்கனவே உறுதிப்படுத் தப்பட்ட பிரதான ஷரத்துக்களையும், அடிப்படை உரிமைகளையும் மட்டுப்படுத்தி, கட்டுப்படுத்தி, மீறும் வகையிலான சட்டமூலம் எதையாவது நடைமுறைக்கு கொண்டுவருவதாயின் அச்சட்ட மூலத்துக்கு நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களது ஆதரவும், சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் மக்களின் ஆதரவும் அவசியம் என அரசமைப்புக் கூறுவதையும் பிரதான எதிர்க்கட்சிகள் தமது மனுக்களில் தெளிவுபடுத்தியுள்ளன.

ஆகவே, இந்தச் சட்டமூலம் தொடர்பில்-

பிரதான அடிப்படை உரிமைகளை மீறும் ஷரத்துகளை அதிலிருந்து நீக்கிவிடும் படியும் -

இச்சட்டமூலம் நடைமுறைக்கு வருவதாயின் முதலில் நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களின் ஆதரவும், பின்னர் சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மக்கள் அனுமதியும் பெறப்பட வேண்டும் என்றும்-

உத்தரவிடுமாறு உயர்நீதிமன்றத்திடம் இந்த மனுக்களில் கோரப்பட்டுள்ளது.

சட்டமூலத்துக்கு ஆட்சேபனைதெரிவித்து பரிகாரம் காண அரசமைப்பில் வசதி

சட்டமூலம் ஒன்று நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும்போது, பிரஜை ஒருவர் அது தொடர்பில் தமக்கு ஆட்சேபனை ஏதும் இருப்பின் ஒரு வாரத்துக்குள் உயர்நீதிமன்றத்தில் மனுச் செய்து பரிகாரம் தேடமுடியும் என அரசமைப்புக் கூறுகின்றது.

அதனடிப்படையிலேயே கடந்த 6ஆம் திகதி நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மேற்படி சட்டமூலத்திற்கு எதிராக மூன்று கட்சிகளும் உயர்நீதிமன்றில் மனுச் செய்துள்ளன.

இந்த மனுக்களைத் தாக்கல் செய்யப்பட்டிருப்பதை உயர்நீதிமன்றப் பதிவாளர், சபாநாயகருக்கு அறிவிப்பார். இந்த மனுக்கள் மீதான உயர்நீதிமன்ற விசாரணைத் தீர்ப்பு முடிவுறும்வரை இச்சட்ட மூலத்தை நாடாளுமன்றில் நிறைவேற்ற முடியாது என்பது குறிப்பிடத்தக்கது. எனவே, இச்சட்டமூலத்தை எதிர்வரும் 20ஆம் திகதி நிறைவேற்றும் அரசின் உத்தேசத்திட்டம் இப்போதைக்குப் பிசுபித்துப் போயுள்ளது.

இனி, தற்போதைய நீதிமன்ற விடுமுறைத் தவணை முடிவுற்று அதன் பின்னர் இந்த மனுக்களை உயர்நீதிமன்றம் விசாரித்துத் தீர்ப்புக் கூறும்வரை நாடாளுமன்றம் காத்திருக்க வேண்டும்.

எனினும் இது நாட்டுக்கு மிக அவசரமான சட்டமூலம் என அமைச்சரவை தீர்மானித்து எழுத்து மூலம் அதனை உயர்நீதிமன்றத்துக்குச் சான்றுரைக்குமானால், உயர்நீதிமன்றம் அவசரமாக - விரைந்து - கூடி அமைச்சரவை குறிப்பிடும் அத்தகைய கால எல்லைக்குள் அச்சட்டமூலத்தை விசாரித்து தனது முடிவை அறிவிக்க வேண்டும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

நாடாளுமன்றச் சட்டமூலங்கள் தொடர்பாகத் தீர்மானிக்கும் உயர்நீதிமன்ற அதிகாரம் சம்பந்தமான அரசமைப்பின் 120ஆவது ஷரத்தின் கீழேயே இந்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றன என்பதும் -

அடிப்படை உரிமை மீறல் தொடர்பான அரசமைப்பின் 126ஆவது பிரிவின் கீழ் அல்ல என்பதும் - குறிப்பிடத்தக்கவை ஆகும். (அ-சி)

இல்லத்தரசிகளுக்கு ஓர் இனிய நற்செய்தி யாழ் மண்ணில் புதியதோர் உதயம்
ASP ENTERPRISES
முதன் முறையாக அறிமுகப்படுத்தும்
INDUCTION COOKER



அனுகூலங்கள்:
# குறைந்த நேரம்
# சிக்கன மின்சாரம்
# தீ,மின் அபாயமில்லை
# இலகுவாகக் கையாளலாம்
# ஒரு வருட உத்தரவாதம்
# இதற்குரிய சகல உதிரிப்பாகங்களையும் பெற்றுக்கொள்ளலாம்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்வதற்கு நீங்கள் நாட வேண்டிய இடம்
ASP ENTERPRISES
கத்தோலிக்க அச்சக கடைத்தொகுதி
360/9, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
(பஸ்தியன் சந்திக்கு அருகாமையில்)
தொலைபேசி - 0602001585, 0776079352

கணக்கீடு
A/L: 2011
தொங்கல் கணக்கு
ஆரம்பம் : சனி 3pm
A/L: 2010
சொத்து விற்பனை
ஆரம்பம் : சனி 4 pm
தனிப்பட்ட அனுமதி உண்டு
S.தவா
B.Com (Hons) (Acc.spl)
Universal
யா/இந்து மகளிர் கல்லூரி அருகில்
NEW EDUCATION WORLD
இன்
வெளிவாரிப் பட்டப் படிப்புக்கள் பிரிவு
யாழ்.பேராதனை; GAQ,BA விரிவுரைகள்
ஆரம்பம்
15.08.2009 சனிக்கிழமை காலை 8 மணி
198, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

Multi Timber Dealers
மலேசியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட கற்பஸ் மரங்களை தொகையாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள நாட வேண்டிய ஒரே ஒரு ஸ்தாபனம்.
Multi Timber Dealers
இப்பொழுது யாழ் நகரிலும் கிளை ஒன்று திறக்கப்பட்டுள்ளது. உங்களுக்கு தேவையான சகல அளவுகளிலும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்.
117, மானிப்பாய் வீதி (ஐந்து சந்தி), யாழ்ப்பாணம்.
T.P 077 2612453, 077 3866173, 021 5100191
தலைமை அலுவலகம் : (634/1, நீர்கொழும்பு வீதி, மாபோல, வத்தளை.
T.P.: 077 3322974, 0777 807214, 011 2981818)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13.08.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.




ஆசிரியர்கள்:-
யு.எல்.எம்.சாஜித்,
அம்பாறை.
தொ.இ- 0779597407



## விசேட புமைப்பரிசில் பரீட்சை வெளியீடு - 03


Model Examination For Grade Five Students for Selection to School and for the **Award of Bursaries, August 2009.**


மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும், உதவிப்பணம் வழங்குவதற்குமாக தரம்-05 மாணவர்களுக்கு நடத்தப்படும்
**புலமைப்பரிசில் மாதிரிப் பரீட்சை, ஓகஸ்ட் 2009.**


**வினாத்தாள் - I** **நேரம்: 45 நிமிடங்கள்**

**எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடையளிக்குக.**

**முதலில் தரப்படும் உருவுடன் மிக நெருங்கிய தொடர்புடைய உருவை தரப்பட்டுள்ள விடைகளில் இருந்து தெரிந்து அதன் கீழ்க்கோடிடுக.**

01.



02.



03.



* **தரப்படும் உருக்களுடன் தொடர்புடைய மிகச்சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

04. 1) உடற்பயிற்சி, பறக்கிறது, முலையூட்டி.
 2) மரம், நீந்துதல், சுதந்திரம்.
 3) சிறகுகள், வானம், சுதந்திரம்.




05. 1) எலி, பூனை, வீடு.
 2) பாதுகாப்பு, பிராணி, காடு.
 3) விலங்கு, நாய், எலி.




06. 1) கற்பகதரு, யாழ், கொப்பரா.
 2) ஈர்க்கு, நுவரெலியா, பாக்கு.
 3) கரையோரம், லுணுவில, ஏற்றுமதி.



* **வித்தியாசமான உருவின் கீழ்க்கோடிடுக.**

07. 1) 2) 3)


08. 1) 2) 3)


* **தரப்படும் பாடலைக்கொண்டு மிகச்சரியான விடையினை எழுதுக.**

சித்திரை வந்தது கும்மியடி - நீ
 சிறப்புடன் வாழக் கும்மியடி
சின்னப் பெண்ணே கும்மியடி
 சிட்டுப்போல கும்மியடி

09. இங்கு குறிப்பிடப்படும் மாதத்தில் நிகழும் அம்சம் ஒன்று தருக.
..................................................

10. இங்கு வந்துள்ள உவமைத்தொடர் எது? ..................................

**தரப்படும் புதிரை விளங்கி உரிய சொல்லை அறிந்து எழுதுக.**

11. மாரியில் உண்டு; பாரியில் இல்லை.
யாழில் உண்டு; ஊழில் இல்லை.
ஜாமீனில் உண்டு; மீனில் இல்லை.
குளத்தில் இல்லை; குலத்தில் உண்டு.
கப்பியில் இல்லை; கம்பியில் உண்டு.

புதிரியில் உள்ள 5 எழுத்துச்சொல் ..................................

12. இது ஒரு வீட்டுப்பாவனைப் பொருள்
முதலாம் எழுத்து கண்ணில் உண்டு; காதில் இல்லை.
இரண்டாம் எழுத்து பத்தில் உண்டு; இருபதில் இல்லை.
மூன்றாம் எழுத்து திங்களில் உண்டு; செவ்வாயில் இல்லை.

மூன்று எழுத்துப்பொருள் ...!..................................

* **மிகச்சரியான விடைத்தொகுதியின் கீழ்க்கோடிடுக.**

13. விதைகளை ஏதோ ஒரு வகையில் ஒழுங்குபடுத்தும்போது வரும் சரியான விடைத்தொகுதி.
 1) பலா - புளி - றம்புட்டான் - குன்றிமணி.
 2) பலா - குன்றிமணி - றம்புட்டான் - புளி.
 3) பலா - றம்புட்டான் - புளி - குன்றிமணி.

14. விலங்கை பெரியதிலிருந்து ஒழுங்குபடுத்தினால் வருவது,
 1) யானை - வரிக்குதிரை - மான் - முயல்.
 2) வரிக்குதிரை - யானை - மான் - முயல்.
 3) முயல் - மான் - வரிக்குதிரை - யானை

* **பின்வரும் அட்டவணையை அவதானித்து விடையளிக்குக.**


| | | | | | |
|---|---|---|---|---|---|
| A | 6 | 6 | 6 | C | A |
| 6 | B | 8 | 7 | B | 3 |
| C | 7 | 6 | C | D | 5 |
| 8 | D | C | 9 | 4 | 9 |
| 4 | E | 3 | E | B | E |
| F | 2 | D | 4 | 5 | F |


15. இங்கு இலக்கங்களை விட எழுத்துக்கள் எத்தனை குறைவாக உள்ளன?
 1) 1 2) 2 3) 3

16. இங்குள்ள இலக்கங்களுள் ஆகக்கூடிய பெறுமதி உள்ள இலக்கம் எத்தனை தடவை வந்துள்ளது?
 1) 1 2) 2 3) 3


17. இங்கு அதிக தடவை இடம்பெற்றுள்ள எழுத்து யாது?
 1) C 2) D 3) F


* **பின்வரும் வினாக்களில் சில குறியீடுகளும் அதன் பெறுமானங்களின் கூட்டுத்தொகை நிரல், நிரை வழியாக தரப்பட்டுள்ளன. அவற்றை அவதானித்து ? இடப்பட்ட இடத்தில் வரவேண்டிய குறியீட்டின் கீழ்க்கோடிடுக.**


18.



19.



* **கீழே சில தராசுப்படிகள் அவற்றின் நிறைகளுடன் தரப்பட்டுள்ளன. அவ்வகையில் பாரம் வைக்கப்பட்டுள்ள தராசின் மற்றைய தட்டில் இடப்பட வேண்டிய படிகளின் வகையை இனம் கண்டு கோடிடுக.**




20.




21.



* **உண்மை மற்றும் அபிப்பிராயம் ஆகியவற்றுக்கிடையே உள்ள வேறுபாட்டை அடிப்படையாகக் கொண்டு விடையளிக்குக.**

22. பின்வருவனவற்றில் எது உண்மை,
 1) இறைச்சி மீனை விடச் சுவையானது.
 2) இறைச்சி சிறுவர்களால் மீனை விட விரும்பப்படுகிறது.
 3) இறைச்சி புரதம் அடங்கியுள்ள ஓர் உணவு.
 4) இறைச்சி மட்பாண்டங்களில் சமைக்கும்போது சுவையானது.

23. பின்வருவனவற்றில் எது ஓர் அபிப்பிரயாமாகும்.
 1) கிழங்கு மாப்பொருள் அடங்கியுள்ள உணவாகும்.
 2) கிழங்கும் சம்பலும் சுவையானது.
 3) சோறும் கறியும் எமது பிரதான உணவாகும்.
 4) வேறு சில நாடுகளில் நெல் பயிரிடப்படுகின்றது.

* சமமான இரு உருவின் கீழ்க்கோடிடுக.




* **உறவு முறையை அடிப்படையாகக்கொண்டு சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**




24. சிறோமி, அஸ்ஸினாவின் சகோதரி; அஸ்ஸினா சஷ்னியாவின் மகள்; காசிம் அஸ்ஸினாவின் தந்தை எனின், சிறோமி காஸிமுக்கு யார்?
 1) மகள். 2) சகோதரி. 3) மைத்துனி. 4) மகன்.

25. எனது தம்பியின் மகனின் மகள் எனது தந்தையை எவ்வாறு அழைப்பாள்,
 1) பூட்டன். 2) [illegible]மா. 3) பாட்டன். 4) தாய்.

* **இல.26ஆம், 27ஆம் வினாக்களுக்கு அருகில் தரப்படும் உருவை அம்புக்குறி வழியே பார்க்கும்போது தோன்றும் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

26. அம்புக்குறி A வழியே தோன்றுவது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27. அம்புக்குறி B வழியே தோன்றுவது,
1)  2)  3) 

* **பின்வரும் தகவல்களை அடிப்படையாகக்கொண்டு விடையளிக்குக.**

| மாம்பழம் 01<br>தோடை 02 | 50/= |
|---|---|
| மாம்பழம் 02<br>தோடை 03 | 90/= |

28. மாம்பழம் 1இனதும் தோடம்பழம் 1இனதும் விலை,
1) 30/= 2) 40/= 3) 60/= 4) 50/=

29. மாம்பழம் 3 இனதும் தோடம்பழம் 5 இனதும் விலை,
1) 150/= 2) 160/= 3) 140/= 4) 110

* **மிகச்சரியான விடையினை எழுதுக.**
ஹஸ்ரிபின் வீட்டுக்கு 400m தெற்கே பஹிமாவின் வீடு உண்டு பஹிமாவின் வீட்டுக்கு நேர் மேற்கே 200M தூரத்தில் நிஸ்றினின் வீடு உண்டு. நிஸ்றினின் வீட்டிலிருந்து 500m வடக்கே பஹிமா கற்கும் பாடசாலை உள்ளது.

30. ஹஸ்ரிபின் வீட்டுக்கும் பாடசாலைக்கும் மிகக்கிட்டிய தூரம் என்ன?
..............................

31. ஹஸ்ரிபின் வீட்டுக்கு எத்திசையில் பாடசாலை இருக்கிறது?
..............................

32. நிஸ்றினின் வீட்டிலிருந்து ஹஸ்ரிபின் வீட்டுக்குள்ள தூரம் என்ன?
..............................

இடமிருந்து வலமாக ஐந்து அழகிகள் வரிசையாக நிற்கிறார்கள். இரண்டாவதாக நிற்பவள் கயல்விழி. இவளது இடது கைப்பக்கமாக நிற்பவள் கார்த்திகா. கடைசியில் நிற்பவள் சீலா. இவள் துவாரக்காவின் இடது கைப்பக்கம் நிற்கிறாள். றோஜா கயல்விழியின் வலது கைப்பக்கம் நிற்கிறாள்.

33. வரிசையில் துவாரக்கா எத்தனையாவது ஆளாக நிற்கிறாள்?
..............................

34. கார்த்திகா வரிசையில் எத்தனையாவதாக நிற்கிறாள்? ..............................

35. றோஜாவின் இடது கைப்பக்கம் நிற்பவள் யார்? ..............................

36. நடுவில் நிற்பவர் யார்? ..............................

37. கார்த்திக்காவிற்கும் சீலாவிற்கும் இடையில் நிற்பவள் யார்?
..............................

மிர்சான் அஸ்லியை விட உயரத்தில் கூடியவன். ஆனால், மாதவனை விட உயரம் கூடியவனல்ல. ஒரு முறை உயரம் அளவெடுத்தபோது மாதவன் நரேனை விட உயரம் குறைந்தவனாக இருந்தான். அன்றைய அளவெடுப்பின்போது அஸ்லி சமீமை விட உயரமானவனாய் இருந்தான்.

38. அதிகூடிய உயரமுடையவன் யார்? ..............................

39. உயரத்தில் மூன்றாமிடத்தில் உள்ளவர் யார்? ..............................

40. மிக உயரம் குறைந்தவர் யார்? ..............................

## வினாத்தாள் - II நேரம்: 1மணி 15 நிமிடங்கள்

**எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடையளிக்குக.**

01. பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை தருக.

அது ஓர் பெரிய காடு. சிம்தான் அங்குமிங்கும் பார்த்தான்; ஒருவரையும் காணவில்லை. சுற்றுலா வந்த நண்பர்களைத் தவறவிட்டு விட்டேன். என்ன செய்வது என்று ஆற அமர அவனால் சிந்திக்கமுடியவில்லை கண்ணும் கருத்துமாக வளர்த்த பெற்றோர் மட்டுமே அவன் கண்முன் தோன்றினர். அவன் கால் போன போக்கில் நடக்கிறான். அப்போது தூரத்தே சிம்தான்! சிம்தா! என்று கூப்பிடும் சத்தம் எதிரொலித்தது. திரும்பிப்பார்த்தான், வகுப்பாசிரியர் பதற்றத்துடன் வந்து கொண்டிருந்தார். சிம்தான் வகுப்பாசிரியரைக் கண்டதும் அவரை நோக்கி ஓடினான். வகுப்பாசிரியர் சிம்தானை கட்டி தழுவி முத்தமிட்டார்.

01) அங்குமிங்கும் என்பதன் கருத்து என்ன?
..............................
..............................

02) இங்குள்ள பெயர் அடைமொழிச்சொல் ஒன்று தருக.
..............................

03) இங்குள்ள இடப்பெயர்ச்சொல் யாது?
..............................

04) அவன் கால் போன போக்கில் நடக்கின்றான் என்பதனை பெண்பால் வாக்கியமாக எழுதுக.
..............................
..............................

05) கட்டித்தழுவி என்பதன் பொருள் என்ன?
..............................

06) இங்குள்ள உயர்திணை பலர் பால் பெயர்ச்சொல் எது?
..............................

07) முன்னே என்பதன் எதிர்கருத்து என்ன?
..............................

08) கண் என்பதற்கு சமனான சொல் ஒன்று தருக.
..............................

09) இங்குள்ள இணைமொழிச்சொல் ஒன்று தருக.
..............................

10) தூரத்தே பதற்றத்துடன் வகுப்பாசிரியர் வந்துகொண்டிருந்தார் என்பதில் உள்ள எழுவாய் எது?
..............................

02. பின்வரும் சுருக்கக்குறியீடுகள் உணர்த்தும் பொருளை எழுதுக.
1) இ. பெ. கூ - ..............................
2) இ. ஒ. கூ - ..............................

03. பின்வரும் கருத்தைத்தரும் பழமொழியினை எழுதுக.
1) நற்புகழ் மங்குவதில்லை
..............................
2) திருப்திப்படாத மனம்
..............................

04. பின்வ்ரும் பாடலில் இடம்பெற்றுள்ள உவமானத்தைக் கோட்டில் எழுதுக.
1) கன்றை நினைந்தே உள்ளம்
கசியும் பசுவைப்போல்
நன்றி புரிந்தோர் தம்மை
நாமும் நினைக்க வேண்டும் ..............................

2) பாலைப் போல நிலவு வானில்
பவனி வரப் போகுது
கோலக்கடல் அலைக் கைதட்டிக்
குதூகலிக்கப் போகுது. ..............................

05. தரப்பட்டுள்ள சொற்களில் வரவேண்டிய மிகப்பொருத்தமான எழுத்துக்களைக் கொண்டு இடைவெளி நிரப்புக.
(லை, ழ, ல், ழை, ள, லை, ல, ள்)
1) ம........பெய்யும் கா......ங்களில் ஆற்றில் வெ......... .........ம் பெருகி ஓடும்.

06. பின்வரும் சிங்களச் சொற்களுக்கான தமிழ்க் கருத்தை எழுதுக.
1) மம ஆச்சி ..............................
2) லிப்ப ..............................
3) மெயா மகே (g) நந்தா ..............................

07. பின்வருவனவற்றின் சிங்கள உச்சரிப்பைத் தமிழ் எழுத்துக்களில் எழுதுக.
1) ஆசிரியர் வகுப்பில் இருக்கிறார்.
..............................
2) மிளகாய்ச் செடி. ..............................

08. பின்வருவனவற்றைத் தமிழில் எழுதுக.
1) Vehicles ..............................
2) Lightening ..............................
3) I will come tomorrow ..............................

09. பின்வருவனவற்றை ஆங்கிலத்தில் எழுதுக.
1) பிறந்தநாள் வாழ்த்து ..............................
2) ஆயத்தமாதல் ..............................

10. மிகச் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.
1) அண்மையில் கொண்டு வரப்பட்ட ஒலிபெருக்கி பாவனை தொடர்பான சட்டமூலம் குறிப்பிடும் மிகச்சரியான கூற்று,
1) இரவு 10 மணிக்கு பிறகு ஒலிபெருக்கியை பயன்படுத்தக்கூடாது.
2) காலை 6 மணி வரை ஒலிபெருக்கி பயன்படுத்தக்கூடாது.
3) மத தலங்களில் மட்டும் எந்த நேரமும் ஒலிபெருக்கியைப் பயன்படுத்தலாம்.
4) இரவு 10 மணி - காலை 6 மணி வரை ஒலிபெருக்கியைப் பயன்படுத்தக் கூடாது.

2) ஓரங்க நாடகம் தொடர்பான சரியான கூற்று,
1) முகபாவனை மூலம் செயற்பாடுகளை வெளிப்படுத்தல்.
2) பலரும் ஒரே நேரத்தில் நடிக்கவேண்டும்.
3) ஒருவரே பல குரல்களையும் வெளிப்படுத்தி நடிப்பர்.
4) பெண்கள் நடனத்தின் மூலம் தம் கருத்துக்களை வெளிப்படுத்துவர்.

3) பயிர்களை சேதமாக்கும் பிராணிகளில் நத்தையை உணவாக உட்கொள்ளும் பிராணி,
1) பாம்பு. 2) தவளை. 3) செண்பகம். 4) ஓணான்.

4) கானல் வாழைப் பூவின் நிறம் என்ன?
1) செம்மஞ்சள். 2) வெள்ளை. 3) நீலம். 4) இளம் சிவப்பு.

5) பின்வருவனவற்றில் கூர்மையான பார்வை உடைய பறவை அல்லாதது,
1) வெளவால். 2) கழுகு. 3) ஆந்தை. 4) மீன்கொத்தி.

6) வெளிநாட்டுத் தபால்களை அஞ்சலில் இடும் பெட்டியின் நிறம்,
1) சிவப்பு. 2) பச்சை. 3) நீலம். 4) கறுப்பு.

7) பொருட்களின் தரத்தை உறுதிப்படுத்தி வழங்கப்படும் SLS இலச்சினையில் காணப்படாத விடயம்,
1) காலவதியாகும் திகதி. 2) நுகர்வோனின் பெயர்.
3) உற்பத்தித் திகதி.
4) பொதி செய்யப்பட்ட பதார்த்த கட்டமைப்பு.

8) எமது நாட்டில் ஜனாதிபதி தேர்தல் எத்தனை ஆண்டுக்கொரு முறை நடைபெறும்?
1) 4 2) 5 3) 6 4) 7

9) எமது நாட்டின் பிரதமரை அழைக்கும்போது பயன்படுத்தக்க சொல்,
1) அதிமேதகு. 2) மாண்புமிகு. 3) ஐயா. 4) Sir

10) ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டைக்கு அருகில் உள்ள ஆறு,
1) கண்டி வாவி. 2) மாணிக்க கங்கை.
3) தியவன்ன ஓயா. 4) மகாவலிகங்கை.

11) ஆகக்கூடிய நீர்மின்வலுவைப் பிறப்பிக்கும் ஆற்றல்மிக்க நீர்வலு நிலையம்,
1) ரந்தனிக்கல. 2) நுரைச்சோலை.
3) சப்புகஸ்கந்தை. 4) புதிய லக்ஷபான.

12) பின்வருவனவற்றில் சார்க் நாடுகள் அமைப்பின் சின்னத்தைக் குறிப்பது,
1)  2)  3) 

(9 ஆம் பக்கம் பார்க்கவும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org